www.tamilarangam.net

இதழ் 95
ஏப்ரல் 20-மே 01,1996
விலை 7.00

# சரிநிகர்

காலச் சுவடு மாறிச் சென்றது
கழுகுகள் மீதும் கணைகள் பாய்ந்தன.
வெள்ளைப் பறவைகள் எல்லாம் மெல்லக்
கொடுங்கூர் அழகுக் கழுகுகளாயின.
கடும் போர் ஒன்று மூண்டு முடிந்தது.

வானம் மேலே வெளிச்சென்றி ருந்தது.
மானுடர் கீழே மண்ணைக் கிளறினர்
வெள்ளைப் பறவைகள் வருகையை நோக்கிக்
காத்திருந்தார்கள் மனிதரிற் சிலபேர்
கைகளில் ஏந்திய கணைகளி னோடு.

*சி.சிவசேகரம்*
ஒரு சமகாலச் சிறுவர் கதை
(நதிக்கரை மூங்கில்)



## பொங்கியெழும் மலையகம்!

## ஈழப்போர் 3 க்கு வயது !

## ஜே.வி.பி:தோல்வியுற்ற புரட்சி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மின்சார நிலைய கேள்விப் பத்திரம்:

## திருட்டுத் தனத்திற்கு அமைச்சரவையும் உடந்தை?

திருகோணமலையில் மின்சக்தி நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான திட்ட யோசனைகளை வரவேற்ற வேளையில் சட்டரீதியாக அது தொடர்பான யோசனைகளை வெளியிட்ட ஆறு வெளிநாட்டு நிறுவனங்களை விலக்கிவிட்டுத் திருட்டுத்தனமாக யோசனைகளை வெளியிட்ட இன்னுமொரு வெளிநாட்டு நிறுவனத்திடம் மின்சக்தி நிலையத்தினை அமைப்பதற்கான கொந்துராத்து வழங்க கடந்த பெப்ரவரி 22ம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருட்டு வழியில் வந்த இந் நிறுவனத்தின் உள்நாட்டுப் பிரதிநிதிகளாக அமைச்சர் ஒருவரின் மனைவியின் குடும்பப்பிரதிநிதிகளும் மற்றும் இங்குள்ள உலகப் பிரசித்தி பெற்ற வியாபார நிறுவனத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்களும் உள்ளனர்.

சட்டரீதியாக முன்வைத்த யோசனைகள் இருக்கும்போது, திருட்டுத்தனமாக யோசனையை வருவித்தது. கடந்த அரசாங்கத்தின் மின்சக்தி திணைக்களத்தின் செயலாளராக தொழில் புரிந்த அகில் முகமட் அவர்கள் ஆகும். கடந்த அரசாங்க காலகட்டத்தின் போது குறைந்த பணத்திற்கு சப்புகஸ்கந்த ''நைலோன்'' செயற்திட்டத்தை விற்றமை போன்ற துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவரும், துஷ்பிரயோகம், லஞ்சம் போன்றவற்றை ஆராயும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளவருமான முன்னாள் திணைக்களச் செயலாளர் வருவித்த இந்தயோசனைகளை முன்வைத்தவர் மகாவலி மின்சக்தி பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகும். இவ்வாறு திருட்டுத்தனமாக வரவழைக்கப்பட்ட இந்நிறுவனம் 'அவுஸ்திரேலியாவின் பாக்லே மோலே கன்சட்ரக்ஷன் லிமிட்டெட்'' ஆகும்.

இந்நிறுவனத்திற்கு இக்கொந்தராத்தை வழங்கும் பொழுது மிஹாலி இன்ரர் நெஷனல் (கனடா) லிமிட்டெட்டுக்கு இக்கொந்தராத்து சட்டரீதியாக வழங்கப்பட்டிருந்தது. இக்கனடா நிறுவனம் ஸ்தாபிப்பு வேலைகளை பின்போட முயற்சிக்குமாயின் வேறொரு நிறுவனத்திற்கு இக்கொந்தராத்தை வழங்கவும் சட்டரீதியாக தீர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இக்கொந்தராத்துக்காக சட்டரீதியாக யோசனைகள் தெரிவித்திருந்த பிற நிறுவனங்கள் இந்தியாவின் ஆர் ஜீ ஜீ என்ரபிறைசஸ், ஐக்கிய இராச்சியத்தின் எங்கிலோ - ஜப்பனிஸ் ஒஸ்ரேலியன் கொந்சோடியம் நிறுவனம் கொழும்பு - 02. கன்சலிடேட்டர் மரயன் என்ஜினியரிங் நிறுவனம், மற்றும் வரையறுக்கப்பட்ட நெல்கோ தனியார் நிறுவனம் போன்றனவாகும்.

பொ.ஐ.மு. அரசாங்கத்தின் அமைச்சரவை தீர்மானம் கடந்த பெப்ரவரி மாதம் 22ம் திகதி எடுக்கப்பட்டதற்கான காரணம் கடந்த அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட இக்கொந்தராத்து காலாவதியாகிவிட்டது என்பதனால் புதுப்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மின்சக்தி திணைக்கள உதவி குழுவினால் அறிவுறுத்தப்பட்டமையாகும். திருகோணமலையில் இவ் மின்சக்தி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு பல இடையூறுகள் ஏற்படலாம் என்றும் இதற்கு அதிகம் செலவாகும் என்றும் இதனால் மேல், தெற்கு கடற்கரையோரத்தில் ஓர் மின்சக்தி நிலையத்தை அமைக்குமாறும் திணைக்கள உதவிக்குழு அரசாங்கத்திற்கு யோசனை தெரிவித்துள்ளது.

திருட்டுத்தனமாக வந்த நிறுவனத்திற்கு அமைச்சரவை கொந்தராத்து வழங்கியிருப்பது திணைக்கள உதவி குழுவின் யோசனைகளையும் தவிர்த்து விட்டேயாகும். அக்குழுவின் விதந்துரைத்தல் அமைச்சரவை குழுவின் துண்டுப்பத்திரத்தில் இருக்கின்ற அதே வேளை அத்துண்டுப்பத்திரத்தை தவிர்த்து சம்மதம் அளிக்கும் துண்டுப்பத்திரம் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதைத்தவிர சபுகஸ்கந்தையில் மின்நிலையத்தை அமைக்கும் கொந்தராத்தைப் பெற்றுக்கொண்ட கே.எச்.டீ.நிறுவனத்திற்கு அக்கொந்தராத்தை வழங்கவிடாது மின்சார சபையின் ஓர் உயர் அதிகாரி செயற்படுவதாக அறியக்கிடைக்கின்றது. இவ்வாறு செயற்படக் காரணம் ''சந்தோஷம்'' ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே எனக்காரணம் அறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

யுக்திய 960407

## சதீஸ்குமார் கடத்தல்: சர்வதேச மன்னிப்புச் சபை கண்டிக்கிறது!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சதீஸ்குமார் காணாமல் போனமை தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை பின்வருமாறு தன் கண்டணத்தை தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சதீஸ்குமார் என்பவர் இராணுவத்தினரால் மார்ச் 7 அன்று 133/2 இலக்க (ஆமர் வீதியில் உள்ள) தன் இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். இவருடன் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாகக் கருதப்பட்ட இன்னுமொரு நபர் தற்போது பொலிஸ் தலைமையகத்தில் ஆறாம் மாடியில் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. இந்நபர் தான் சதீஸ்குமாரை மார்ச் 16ம் திகதி இராணுவ தடுப்புக்காவலில் கண்டதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

சதீஸ்குமாரின் உறவினர்களை சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர்கள் சந்தித்த போது 61 - 5387 இலக்க இராணுவ வாகனம் ஒன்றே சதீஸ்குமாரை ஏற்றிச் சென்றதாக உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும் சதீஸ்குமாரை வாக்குமூலம் பெறுவதற்காகவே கூட்டிச் செல்வதாகவும் இரண்டு நாட்களில் அவர் விடப்படுவார் எனவும் தமிழ் பேசிய அதிகாரியொருவர் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

ஆயினும் அதன் பின்னர் சதீஸ்குமாரை பல பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், சிறைகளில் தேடிய போதும் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

1995 இன் நடுப்பகுதியில் தற்போது உள்ள அரசாங்கமானது மனித உரிமைகளுக்கான பணிக்குழுவை (முன்னைய அரசாங்கத்தில் செயலற்றதாக இருந்த பணிக்குழுவை) செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தது. பணிக்குழு தடுப்புக்காவல் கைதிகளின் பாதுகாப்பையும் நலன்களையும் கவனிப்பதாக இருந்தது. இதன்படி கைதுசெய்யப்பட்ட நபர் ஒருவர் மீது கைது பற்றுச்சீட்டு (Arrest recipts) வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இப்பற்றுச்சீட்டில் கைது செய்த அதிகாரி, அவரது பதவி, கைது செய்யப்பட்ட நேரம் திகதி அவர் எங்கு தடுத்து வைக்கப்படவுள்ளார் என்பன குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அவர் கைது செய்யப்பட்டு 48 மணி நேரத்துள் அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பது மனித உரிமைகள் பணிக்குழுவிற்கு அறிவிக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த நடைமுறைகள் எதுவும் நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை. 1996 மார்ச்சில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் உயர் மன்னிப்பு சபை நடத்திய கூட்டத்தில் இவ்வாறு கைது பற்றுச்சீட்டு வழங்குவது நடைமுறை சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. ஒரு சில நேரங்களில் இது சாத்தியமற்றதாக இருந்தாலும் ஒட்டுமொத்தமாக மறுப்பது பிழையானதாகும். உடனடியாக கைது பற்றுச்சீட்டு வழங்கமுடியாவிடினும் மனித உரிமைகள் பணிக்குழுவிற்கு 48 மணி நேரத்துள் அறிவிக்கமுடியாது போவதேன். சதீஸ்குமார் கடத்தப்பட்டு 21 நாட்கள் ஆகியும் இதுவரை மனித உரிமைகள் பணிக்குழுவிற்கு அறிவிக்கப்படவேயில்லை.

## கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு: ஒரு கோடி விரயம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்புக்கென ஒரு கோடி ரூபாவிற்கு அதிகமாக செலவிடப்பட்டு மேற்கொண்ட ஸ்தாப்பிப்புகள் பாதுகாப்புக்கு எந்தவிதத்திலேயும் உதவவில்லை என்ற காரணத்தினால் அழிக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எந்தவொரு நிபுணரினதும் ஆலோசனை இன்றி இவ் ஸ்தாபிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது கட்டுநாயக்க விமான நிலையத்தினதும், பிற விமான நிலையத்தினதும் நிறைவேற்று அதிகாரிகளினது விதந்துரைப்பின் பேரிலாகும். கொந்தராத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ் ஸ்தாபிப்புகளின் பின்னால் தரகு வியாபாரம் ஒன்று இருப்பதாக விடயம் அறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் ஸ்தாபிப்புகளுக்கு முன்நின்ற அதிகாரி தான் விமான நிலைய கொந்தராத்து அடிப்படையை மாற்றியவரும் ஆவார்.

இலங்கைக்கு வருகை தரும், வெளியேறும் பிரயாணிகள் மற்றும் விமானிகள் தங்கியிருப்பதற்கு இவ்வதிகாரியின் ஆலோசனையின் பேரில் ஓர் கட்டிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. நயி கன்தே எனும் இடத்தில் இக்கட்டிடத்தை அமைப்பதற்கு இரண்டு பிரிவின் அடிப்படையில் இரண்டு கொந்தராத்துக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூபா 75 இலட்சம் வரையில் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறான ஸ்தாபிப்புகள் மூலம் விமான நிலையத்தின் வெளிப்புறத்தில் நடைபெறும் வெடிப்புக்களின் போது எல்லைச் சுற்றுகளை பாதுகாக்க முடியாதெனவும், எல்லை சுற்றுகளில் சிறு மதில்களை அமைப்பதன் மூலமே சுற்றுப்புறங்களைப் பாதுகாக்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னரே நயி கன்தே ஸ்தாபிப்புகள் அனைத்தும் உடைக்கப்பட்டு ரூபா 60 இலட்சம் செலவுடன் சிறு மதில்கள் அமைக்கப்பட்டு வருவதாக உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுக்திய 960407

## புலிகளிடம் மென்ரக விமானம்?

கிளிநொச்சி பெருங்காட்டில் வெளியாக்கப்பட்டுள்ள இடம் ஒன்றில் விமான அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த புலிப் பயங்கரவாதிகள் சிலரை அவ்விமானச் சட்டகத்துடன் அழிப்பதில் இலங்கை விமானப் படை வெற்றி கண்டுள்ளது.

ஏப்ரல் 7 அன்று மாலை இலங்கை விமானப் படை அண்மையில் வாங்கிய நவீன தாக்குதல் விமானத்தாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் நிலவும் கிளிநொச்சிப் பிரதேசத்திலேயே இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

புலிகளின் விமானத்தின் அமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த புலி அங்கத்தவர்கள் 10 - 15க்கு இடைப்பட்டவர்கள் இவ்விமானத் தாக்குதலினால் கொல்லப்பட்டிருக்கலாம் என விமானிகள் நம்புவதாக விமானப்படை சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். தமிழீய விடுதலைப் புலிகள் இயக்க விமான அமைப்பு வல்லுனர்களும் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுள் அடங்குவதாக நம்பப்படுகின்றது.

இலங்கை விமானப்படை அண்மையில் இஸ்ரேலில் இருந்து வரவழைத்த தாக்குதல் விமானம் ஒன்று கிளிநொச்சியைச் சூழ உள்ள காட்டில் அமைந்துள்ள புலிகளின் முகாம்களைக் கண்காணித்தபடி பறந்து கொண்டிருக்கையில், காட்டின் நடுவில் வெளியாக்கப்பட்ட பகுதியொன்றில் புலி உறுப்பினர்கள் சிலர் விமானம் ஒன்றை அமைப்பதில் ஈடுபட்டிருப்பதை விமானிகள் தெளிவாகக் கண்டுள்ளனர் என விமானப்படை அதிகாரி கூறினார்.

விமானத்திலிருந்த விமானப்படை அதிகாரிகள் குறிபார்த்துக் குண்டுகளை வீசினர். இதனால் அங்கு புலிகள் அமைத்துக்கொண்டிருந்த விமானத்தின் சட்டகமும் கூடத்தீப்பற்றி எரிந்து அழிந்ததாக விமானிகள் உறுதிப்படுத்தியதாகவும் விமானப்படை தகவல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இதே சமயம் புலிகள் இயக்கத்தினாலேயே அமைக்கப்பட்ட மென்ரக விமானங்கள் மூன்று அவர்களிடம் இருப்பதாக வடபகுதி பாதுகாப்புப் பிரிவுகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ரிவிரச இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவப்படைப்பிரிவுகளினால் புலிகள் இயக்கத்தினால் அமைக்கப்பட்ட மென்ரக விமானம் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

லங்காதீப - 19960410

## வழக்கறிஞருடன் தொடர்பு

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து பல கொள்கலன்கள் திருட்டுத்தனமாக வெளியேற்றப்பட்டது தொடர்பாக ஓர் வழக்கறிஞருக்குத் தொடர்பு இருப்பதாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவருகின்றது.

கொள்கலன்கள் சோதனை இன்றி வெளியேற்றப்பட்டிருப்பது முதலீட்டு சபையின் அனுமதிப்பத்திரத்தின் மூலமாகும். முதலீட்டுச் சபையின் செயற்திட்டத்திற்காக கொண்டு வரப்படும் கொள்கலன்கள் துறைமுகத்தினுள் சோதனை செய்யப்படாது வெளியே வைத்து சோதனை செய்யப்படுகின்றது. இதன்படி முதலீட்டுச் சபையின் செயற்பாட்டுக்கென பொய்க் கடிதங்களைக் காட்டி பல கொள்கலன்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. அத்தோடு இது தொடர்பான 13 கடிதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கொள்கலன்கள் சோதனைகளுக்கு குறிப்பிட்ட ஒரு சில சுங்க அதிகாரிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றமையும் சந்தேகத்திற்குரியதாகவுள்ளது. இவ்வதிகாரிகளில் ஒருவர் லஞ்சக் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்றும், இன்னொருவர் குற்றம் ஒன்றைக் கண்டுபிடித்ததற்காக வேறொருவருக்கு வழங்கிய 40 லட்சம் பரிசுப்பணத்தை வஞ்சகமாக அபகரித்துக் கொண்டவர் என்பதும் விசாரணைகள் மூலம் தெரியவருகின்றது.

யுக்திய960407

## தாக்குதலைத் தடுக்க புலிகள் தமிழ் நாட்டைப் பயன்படுத்துவர்!

அண்மித்துவரும் இந்தியப் பொதுத் தேர்தலிலும், தமிழ் நாடு சட்ட சபைத் தேர்தலிலும் தமிழ் நாட்டின் மக்களைத் தூண்டி இலங்கைப் பாதுகாப்பு படைகள் வட பகுதியில் ஆரம்பிக்கவுள்ள இராணுவ நடவடிக்கையை தவிர்க்கத் தமிழீழ விடுதலைப் புலிள்க இயக்கம் செயற்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தமிழ்நாட்டு மக்களிடமும், அரசியல்வாதிகளிடமும் விஷேட கோரிக்கையொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கச்சர்வதேச செயலகம் விடுத்துள்ளது.

இலங்கைப் படைகள் யுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள இச்சந்தர்ப்பத்தில் இலங்கை தமிழ் மக்களின் துன்ப துயரங்களைக் கருத்திலெடுத்து உடனடியாகச் செயற்பட்டு அம் மக்களுக்கு உதவுமாறு அக்கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விரைவிலேயே பாதுகாப்புப் படைகள் வட பகுதியில் பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கையொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நம்புகிறது.

அதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து வெளியேறி வன்னிப்பிரதேசத்துக்குச் செல்லுமாறு அவ்வியக்கம் மக்களுக்கு அறிவித்துள்ளது.

அதற்கிணங்கக் கடந்த இரு வாரங்கள் மட்டிலான காலப்பகுதியில் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து நூற்றுகணக்கான மக்கள் வன்னிப் பிரதேசத்திற்கு வரத்தொடங்கியுள்ளனர்.

அம்மக்களை வன்னிப்பிரதேசத்திற்கு கொண்டு வருவற்காகப் புலிகள் இயக்கம் கிளாலி ஏரியினூடாக இலவசமாகவே படகுச் சேவையொன்றையும் நடத்துகிறது.

கடந்த சில வாரங்களினுள் அவ்வியக்கம் கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் தாக்குதல் நடத்தியதும் வடபகுதியில் நடத்தப்படவுள்ள இராணுவ நடவடிக்கையிலிருந்து இராணுவத்தின் கவனத்தை திசை திருப்பவாகும் எனவும்.தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம் மாத இறுதியில் நடத்தப்படவுள்ள தமிழ் நாட்டுச் சட்ட சபைத் தேர்தலுக்காக அங்குள்ள அரசியல் கட்சிகள் பல்வேறு கூட்டுக்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

புலிகள் இயக்கத்துடன் நெருக்கமான வை.கோபால்சாமியின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகமும் டொக்டர் இராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சியும் இப்போதே தேர்தல் கூட்டொன்றை கட்டியெழுப்பியுள்ளன.

அக்கட்சிகள் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை விஷேட தேர்தல் பிரச்சார நோக்காகக் கொள்ளும் அறிகுறிகள் தெரிகின்றது.

ரிவிரச இராணுவ நடவடிக்கை நடைமுறைப் படுத்தப்பட்ட நாட்களில் அந்நடவடிக்கைக்கு எதிராக மாநிலம் பூராவும் உண்ணாவிரதம் போன்ற ஆர்ப்பாட்ட இயங்கங்களை ஒழுங்கு செய்த முன்னாள் முதலமைச்சர் மு.கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகம் இம்முறை மீளெழுச்சி பெற்றுள்ளது.

நா பிரதமர் நரசிம்மராவ், தமிழ் நாட்டு இப்போதைய முதலமைச்சரான ஜெயலலிதா ஜெயராமின் அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டொன்றை ஏற்படுத்தியதை எதிர்க்கும் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் சிலரும் கருணாநிதியுடன் சேர்ந்துள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் இணை வரைவுனர்களுள் ஒருவரான மத்திய அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சர் பா. சிதம்பரமும் இவர்களுள் அடங்குவார்.

இவ்அணி சேர்க்கை தமக்கு நன்மை தருமென நினைக்கும் புலிகள் இயக்கம் இவ் அணிசேர்க்கையைப் பயன்படுத்தித் தமிழ் நாட்டு மக்கள் கருத்தைத் தூண்டி வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக 'அழுத்தங் கொடுக்க' நடவடிக்கை எடுத்து வருகிறது.

லக்பிம19960407

www.tamilarangam.net



# இனப்பிரச்சினைத் தீர்வு: சாத்தியமான மூன்றாவது தரப்பு எது?

ராம் பிரசாத்



இன்று இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு மூன்றாவது சக்தியொன்று தலையிட வேண்டும் என்ற அபிப்பிராயம் வேகமாகப் பரவிவருகிறது. இனிமேல் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமானால் மூன்றாவது தரப்பொன்றின் தலையீட்டுடனேயே சாத்தியமாகும் என்று புலிகள் தரப்பிலும் தெரிவிக்கப்படுகிறது. ஏனைய தமிழ் கட்சிகள் மூன்றாவது தரப்பொன்றின் தலையீட்டினாலேயே அரசியல் தீர்வு காணப்பட முடியும் என்று திடமாகக் கூறாவிடினும் அப்படியான தலையீட்டைப் பற்றி வெளிப்படையாக பேசிவருகின்றன. சிங்கள மக்களிடையே இருக்கும் புத்திஜீவிகளும் சில அமைப்புகளும் கூட அவ்வாறு பேசிவருகின்றன.

ரிவிரச இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்பதாக மூன்றாவது தரப்பொன்றின் தலையீடு அவசியம் என்று ஜனாதிபதி சந்திரிகா கூறி வந்ததாக அவரின் நெருங்கிய நண்பரான ஒரு பத்திரிகையாளர் தெரிவித்திருந்தார். பின்னர் ரிவிரச இராணுவ நடவடிக்கைகளில் அரசாங்க இராணுவம் முன்னேற்றமடைந்ததால் அவ்வெண்ணத்தை அவர் கைவிட்டு விட்டதாக அறிய முடிகிறது.

எனினும் உள்நாட்டு நிலைமைகள் அரசியல் தீர்வொன்றை நோக்கிய நகர்விற்கு சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் வெளிநாட்டு மூன்றாவது தரப்பின் தலையீட்டின் தேவை, சாத்தியம் பற்றி நோக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

நோர்வே, சுவிட்சலாந்து, கனடா, அவுஸதிரேலியா, பிரிட்டிஷ் போன்ற நாடுகளின் அரசாங்க சார்பற்ற பிரதிநிதிகளை இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு நடுநிலை வகிக்க விருப்பம் தெரிவித்து வருகின்றனர். அதையொட்டி சில பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதையும், அபிப்பிராயங்களைத் திரட்டி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

ரிவிரச இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளான தமிழ் மக்கள் பற்றி ஐ.நா.சபை செயலாளர் நாயகமும் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் விசனம் தெரிவித்தமையும் பல வெளிநாட்டு அரச சார்பற்ற அரசாங்க நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவ முன்வந்தமையும் சர்வதேச சமூகத்தின் அக்கறையை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்த் தரப்பையும் அரசாங்க தரப்பையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்து அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கு, நிர்ப்பந்திப்பதற்கு அல்லது அழுத்தம் கொடுப்பதற்கு வெளிநாட்டுத் தலையீடு அவசியம். அந்த வெளிநாட்டுத் தலையீடு என்பது எவ்வாறானதாக இருந்தால் பிரயோசனமானது?

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களினது தலையீடு என்பது இலங்கையில் நிலவும் இறுக்க நிலையை தகர்க்க உதவாது. அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசிற்கும் தமிழ் தரப்பிற்கும் புலிகளுக்குமிடையே அபிப்பிராயங்களை பரிமாறவும் இணக்கத்தை ஏற்படுத்தவும் இடைத்தரகர்களாக இருக்கவும் மட்டுமே. அவற்றினால் இரண்டு தரப்பையும் பிணைக்க முடியாது. வெளிநாட்டு மூன்றாவது தலையீடு பிணைக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நல்ல விளைவை அது தரமாட்டாது.

பிணைப்பை த்ரக்கூடிய தலையீடு என்று பார்த்தால் அது ஐ. நாடுகள் சபையின் தலையீடாகவே இருக்க முடியும். ஐ.நாடுகள் சபை தலையிடக்கூடிய அளவிற்கு இலங்கையில் சூழ்நிலைகள் நிலவுகின்றனவா?

இனப்பிரச்சினை நிலவும் ஒரு நாட்டில் இனவொதுக்கல், இனப்படுகொலை, யுத்தம், ஜனநாயக மனித உரிமைகள் மீறல், அகதிகளின் பிரச்சினை என்பன நிலவுமிடத்து ஐ.நா. சபை தலையீட்டை செய்ய முடியும். அந்த தலையீட்டிற்கான தீர்மானத்தை பாதுகாப்புச் சபையின் அங்கத்துவ நாடொன்று முன்மொழிய வேண்டும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்கு தடையாக இந்தியா இருக்கலாம். ஏனெனில் ஏற்கெனவே இந்தியாவின் தலையீட்டால் 'இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாகாணசபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்குப் பிறகும் பிரச்சினை தீரவில்லை. இன்று புலிகளுக்கும் இந்தியாவிற்குமிடையில் இடைவெளி அதிகரித்துள்ளது. பகைமையுணர்வு கூர்மையடைந்துள்ளது.

ராஜீவ் காந்தி கொலை முதல் கிட்டு கொலை, புலிகளின் கப்பல் தகர்ப்பு என்பன இந்தியாவிற்கும் புலிகளுக்குமிடையேயான இடைவெளியை அதிகரித்து விட்டன.

இந்திய அமைதிகாக்கும் படையினரின் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் இந்தியாவை தமது நேச சக்தியாக மதிக்க - ஏற்க முடியாதுள்ளனர். ரிவிரச இராணுவ நடவடிக்கையில் இந்தியாவின் இராணுவ உதவிகள் இலங்கைக்கு கிடைத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலைமையில் இந்தியா தமிழ் மக்களுக்கோ தமிழ் தரப்பிற்கோ நடுநிலைமையான சக்தியாக இருக்க முடியாது.

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகள், யுத்தநிலைமைகள் பற்றி இந்திய அரசாங்க, இராணுவத்தரப்பினரின் கருத்துக்களும் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும். அவர்கள் இலங்கையின் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இந்தியாவின் அக்கறை விட்டுப்போய்விடவில்லை என்றுதான் குறிப்பிட்டுள்ளனர். இது இந்தியா சம்பந்தப்படாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடமுடியுமா என்று கேள்வி எழுப்புவதாகவே கொள்ளப்படவேண்டும்.

இந்தியாவின் இவ்வாறன போக்கு ஐ.நா. சபையின் தலையீட்டை மட்டுமன்றி தனிப்பட்ட வேறொரு நாடு தலையிடுவதையும் இந்தியா ஏற்கப்போவதில்லை. இதற்கு காரணம புலிகளுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு மட்டுமன்றி இந்தியாவின் பிராந்திய நலன் முதன்மை பெறுவதுதான் என்பதும் அப்பட்டமானது.

இலங்கைக்கு அண்மையில் இருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையில் ஏற்கெனவே தலையிட்ட இந்தியா, ஐ.நா தலையீட்டையோ அல்லது வேறு எந்த நாட்டு தலையீட்டையோ விரும்பாதவிடத்து நடுநிலையான மூன்றாவது தரப்பின் தலையீடு சாத்தியமா?

இந்தியாவிற்கு அடுத்ததாக மிகவும் அக்கறை கொண்ட நாடாக அமெரிக்கா தன்னைக் காட்டிக் கொள்கிறது. பொ.ஐ.மு அரசாங்கத்தின் யுத்தத்திற்கு ஆசீர்வாதம் கொடுத்து வருவதாலும், ஏகாதிபத்திய அக்கறைகளையும், சந்தை அக்கறையையும் கொண்டிருப்பதாலுமு அமெரிக்கா நடுநிலைமையான தரப்பாக இருக்க முடியாது. இந்தியாவை மீறி அல்லது தவிர்த்து அமெரிக்கா மத்தியத்துவத்திற்கு வருவதும் சாத்தயமில்லை.

ஐ.நா.சபையின் தலையீட்டை வேண்டியும் அமெரிக்கா அக்கறை எடுக்கக்கூடிய வசதியான சூழ்நிலைகளும் இல்லை.

எனவே ஐ.நா.சபையினதோ இந்திய அமெரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகளத தலையீடோ சாத்தியமில்லை என்று எண்ணத் தோன்றுகிறது? மறுபுறம் நோர்வே சுவிற்சலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டிஷ் போன்ற நாடுகளிலிருந்து மத்தியத்திற்கான அக்கறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இந்த நாடுகளின் மத்தியத்துவத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது? இந்த நாடுகளின் நடுநிலைமைக்கு பங்கம் ஏற்படுவதற்கு முன்னர் அவற்றின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஐ.நா.சபையின் தீர்மானங்களால் மட்டுமே உலக நாடுகள் பலவற்றின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. சில இடங்களில் ஐ.நா. சபையின் தீர்மானங்கள் தலையீடுகள் மூலம் பல வருடங்களின் பின்னர் தீர்வுகள் கிடைத்துமிருக்கின்றன. தனிப்பட்ட நாடுகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. சில நாடுகளின் பிரச்சினைகள் கூர்மையடைந்துள்ளன.

இலங்கையின் விடயத்தில் மூன்றாவது தரப்பொன்றின் தலையீட்டை வரவேற்கும் போது ஐ.நா.சபையின் தலையீட்டால் ஏற்பட்ட சாதக பாதக விடயங்களை தொகுக்க வேண்டும். தனியொரு நாட்டின் தலையீட்டால் ஏற்பட்டசாதக பாதக அம்சங்களையும் தொகுக்க வேண்டும். அவற்றிலிருந்து ஒடு சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

இந்தியா, அமெரிக்கா என்பவற்றின் தலையீடின்றி அவற்றின் எதிர்ப்பும் இடைஞ்சலுமின்றி எப்படி தலையீட்டைப் பெற்றுக் கொள்வது என்றும் சிந்திக்க வேண்டும்.

மத்தியத்துவத்தை மேற்கொள்ள விரும்பும் நாடுகளின் தலையீட்டை பெற்றுக்கொள்ள இலங்கையிலும், இந்தியாவிலும், அமெரிக்காவிலும், ஐ.நா. சபையிலும், சர்வதேசரீதியாகவும் அபிப்பிராயங்களை உருவாக்கி ஆதரவைத்திரட்ட வேண்டும். வெளிநாட்டு மூன்றாம் தரப்பு மத்தியத்துவத்தை விரும்பும் தமிழ் மக்கள் மத்தியிலும் விடுதலைப் புலிகளின் உள்ளும் வெளியிலும் அபிப்பிராயத்தை உருவாக்கி ஆதரவைத் திரட்ட வேண்டும்.

பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் கட்சிகள் பாராளுமன்றத்திற்குள்ளும், வெளியிலும் அரசிற்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டும். சிங்கள மக்கள் மத்தியிலுள்ள வெளிநாட்டுத் தலையீட்டை விரும்பும் புத்திஜீவிகள், அமைப்புகள் சிங்கள மக்கள் மத்தியில் அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்தியாவிலுள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளும் இந்தியாவின் தலையீடில்லாத மேற்குறிப்பிட்ட நாடுகளின் தலையீட்டுடன் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா தடையாக இருக்கக்கூடாதென்ற அபிப்பிராயத்தையும் அழுத்தத்தையும் ஏற்படுத்த வேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அமெரிக்காவினது தடையும் இருக்கக்கூடாது என்ற அபிப்பிராயமும் அழுத்தமும் ஏற்படுத்தப் படவேண்டும்.

இவற்றினூடாக மத்தியஸ்தம் செய்ய விரும்

→16



# கொழும்பு துறைமுகத் தாக்குதல்:
## மூன்றாம் ஈழப்போரின் புதிய பரிணாமம்?

கொழும்புத் துறைமுகத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதல் மூன்றாம் ஈழப்போரில் ஒரு புதிய பரிமாணத்தை தோற்றுவித்துள்ளது.

துறைமுகத்தில் பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை என அரசு திட்டவட்டமாகக் கூறினாலும் அது சிக்கலின் பரிமாணத்தை நன்கு உணர்ந்தே உள்ளது எனத் தெரிகிறது.

இப்புதிய பரிமாணம் என நாம் கூறுவது யாது?

சனத்தொகைச் செறிவு, கைத்தொழில் அபிவிருத்தி, உட்கட்டுமான வளர்ச்சி (போக்குவரத்து, தொடர்புச்சாதனங்கள், இன்னோரன்ன) மீன்பிடித் தொழில், கப்பல், விமானப் போக்குவரத்து, சர்வதேச வர்த்தகம் போன்ற பல காரணங்களால் இலங்கையின் மேற்குக் கரையோரம் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இதுகாலவரை இலங்கையின் வடமேற்குக் கரையோரத்தில் - புத்தளம் வடக்கிற்கும் மன்னார் தெற்கிற்கும் இடைப்பட்ட கரை - தமது ஆதிக்கத்தைக் கணிசமாகப் பெருக்கியிருந்த கடற்புலிகள், கொழும்புத்துறைமுகத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலோடு தம் ஆதிக்கத்தின் கரங்களை கடல் வழியாக மேற்கு கரையோரம் நீட்டியுள்ளனர். இலங்கையின் வடமேற்கில் வளர்ச்சி பெற்ற கடற்புலிகளின் ஆதிக்கம் அரசிற்கு அவ்வளவு தலையிடியாக இருக்கவில்லை- மன்னார் தீவிற்கு பொருட்கள்ளைக் கொண்டு சேர்ப்பதில் ஏற்பட்ட பெரும் பாதிப்பைத் தவிர. ஏனெனில், இக்கரையோரம் அதிகம் மக்கள் நடமாட்டமில்லாத, பொருளாதார, அரசியல்முக்கியத்துவம் இல்லாத ஒன்று.

ஆனால் மேற்குக் கரையின் கதையோ வேறு. இப்பகுதியை நோக்கிக் கடல் வழியாக நீண்டுள்ள புலிகளின் இராணுவப்பலம் மூன்றாம் ஈழப்போரில் ஒரு புதிய யுத்தமுனை. தலைநகரில் உள்ள சில முக்கிய இடங்களைப் பாதுகாப்பது என்பதும் கடல் வழியாக அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள ஒரு பெரும் பிராந்தியத்தை பாதுகாப்பது என்பதும் வேறு வேறு விடயங்கள். முதலாவதிற்கு குறிப்பான வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் போதும். ஆனால், இரண்டாவதிற்கோ ஒரு பிராந்தியத்திற்கான இராணுவத்திட்டமிடலும் நடைமுறையும் அவசியம்.

மேற்குக் கரையை நோக்கிய வண்ணம் உள்ள மன்னார் குடாவில் புலிகளின் ஆதிக்கம்; மேற்குக் கரைக்கும், மன்னார் குடாவிற்கும் இடையில் கற்பிட்டியில் ஒரு பலவீனமான கடற்படை முகாம்; இந்நிலையில் கொழும்புத் துறைமுகத்தில் விழுந்த அடி ஒரு புதிய களம் ஒன்றை மூன்றாம் ஈழப்போரில் உண்டாக்கியுள்ளது. மேற்குக் கரை முக்கியமானதென்பதால் அங்கு கடற்புலிகளால் ஏற்படும் சிறுசிறு தாக்கங்களும் கணிசமான பொருளாதார அரசியல் பக்க விளைவுகளை உண்டாக்க வல்லன. துறைமுகச் சம்பவம் இதற்கு நல்ல உதாரணம்.

தமது சுலோஜன் நீரடி நீச்சற் பிரிவும் அங்கயற்கண்ணி நீரடி நீச்சற் பிரிவும் முகத்துவாரம் பகுதியிலிருந்து (Muttuwal)11ம் திகதி இரவு 9மணிக்குப் புறப்பட்டு கொழும்புத் துறைமுகத்தினுள் இருக்கும் கடற்படைத் தளத்தில் நங்கூரமிட்டிருந்த மூன்று கப்பல்களின் அடிப்பகுதியிலும் (Hull)மற்றொரு பகுதியிலிருந்த மூன்று வினியோகக் கப்பல்களின் அடிப்பகுதியிலும் நேர வெடிக்கருவிளைப் பொருத்தி அதிகாலை 1.30அளவில் அக்கப்பல்களைத் தகர்த்து மூழ்கடித்ததாகப் புலிகள் கூறுவதை அரசு மறுத்து துறைமுகத்தில் பெரிதாக எந்த அசம்பாவிதமும் நடைபெறவில்லை என வலியுறுத்தி வருகிறது.

ஏப். 13 புலிகள் விடுத்த அறிக்கையை அரசு திட்டவட்டமாக மறுத்தபின்னரும் ஏப்.16 அன்று மீண்டும் தாம் ஆறு கப்பல்களை மூழ்கடித்ததாக" அவர்கள் விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அரசு கூறுவதுதான் உண்மையெனக் கொண்டாலும் தாக்குதல்களின் விளைவு கணிசமாக உள்ளன. முதலாவது, உலகக்கப்பற் காப்புறுதி நிறுவனமான (Lloyds Register) இலங்கைக்கு வரும் கப்பல்கள் மீதான காப்புறுதித் தொகையை (Premium)உயர்த்துவது தவிர்க்க முடியாத தொன்றாகிவிட்டது.

கடந்த சித்திரை திருமலைத் துறைமுகத்தில் இரு பீரங்கிப் படகுகளைத் தகர்த்து மூன்றாம் ஈழப்போரைப் புலிகள் தொடங்கிய கையோடு (Lloyds Register) காப்புறுதித் தொகையை உயர்த்த முற்பட்டது. பிரச்சினையை கட்டுப்படுத்தலாம், பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம் என வாதிட்டு இதைத் தடுப்பதில் வெற்றி கண்டது அரசு அன்று. இலங்கைக்கு வரும் கப்பல்கள் மீதான காப்புறுதிக் கொடுப்பனவு உயர்த்தப்பட்டால் இறக்குமதி - ஏற்றுமதிக்கான செலவும் உயரும். இறக்குமதியாகும் பொருட்களின் விலை நாட்டில் கூடும். ஏற்றுமதியாகும் பொருட்களில் கிடைக்கும் லாபமும் குன்றும்.

கடந்த 7 வருட காலத்தில் உலகின் 38வது சிறந்த கொள்கலன் சேவைத் துறைமுகமாக (Container Port) கொழும்பு வளர்ச்சியடைந்துள்ளது. துரித வளர்ச்சிகண்டுள்ள தென்கிழக்காசியப் பிராந்தியத்திற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான கப்பற் தொடுகை (Trans Shipment)மையமாக அமைவதன் மூலம் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கணிசமான வரும்படியைத் தேடிக்கொடுக்கக் கூடிய நிலைமையும் தோன்றலாயிற்று.

புலிகளின் தாக்குதல் வெற்றியளிக்கவில்லை என அரசு கூறுவது உண்மையெனக் கொண்டாலும் காப்புறுதி கொடுப்பனவு கூடிய, எனவே தரித்து நிற்கும் செலவு கூடிய ஒரு துறைமுகம் என்ற வகையில் கொழும்பிற்கு வரும் கப்பல்களின் தொகையில் வீழ்ச்சி ஏற்படலாம் எனவும் அதை எப்படியாவது தடுக்க வேண்டும் எனவும் அரசாங்கம் மிகுந்த கவலை கொண்டுள்ளது.

இது போல மேற்குக் கரையில் கடற்புலிகள் மேற்கொள்ளக் கூடி யஎந்த நடவடிக்கையும் அரசிற்குப் பெரும் தலையிடி கொடுக்கக் கூடிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இதையே மூன்றாம் ஈழப்போரின் ஒரு புதிய பரிமாணம் எனக் கூறினோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்கள் தொடர்பாக தமிழ்த் தலைமைகளின் நிலைப்பாடு என்ன?

## சொல்வதைத் தவிர வேறு வழியில்லை

இப்போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் வைக்கப்பட்டுள்ள சந்திரிகாவின் தீர்வைப்பற்றிய பிரச்சினையல்ல இது. சந்திரிகாவினால் முன் வைக்கப்பட்ட தீர்வு இப்போது காற்றுப் போன பலூன் போல் ஆகிவிட்டது. ஆகவே சந்திரிகாவின் தீர்வை விடுத்து இனப்பிரச்சினைக்கான உண்மையான, நியாயமான தீர்வு எதுவென இந்த நாட்டில் வாழும் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் சிந்திக்க வேண்டிய இறுதிக் காலகட்டம் தான் இது. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லிம்களும் நியாயமாகவே நடந்து கொள்ளவேண்டியிருக்கிறது. இந்நிலையில் வடக்கு கிழக்கில் பன்னெடுங்காலமாக தமிழர்களுடன் இணைந்து வாழும் முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் தமிழர் அரசியல் இராணுவத் தலைமைகள் எப்படி நடந்து கொள்ளப் போகிறது என்பது இன்று முக்கிய கேள்வியாகும்.

**இந்த நாட்டில் சிங்கள பெரும்பான்மையினர் தமக்கு அடுத்தான சிறுபான்மை இனமான தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தை, தமிழர்கள் தமக்கு அடுத்த சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கு இழைத்து விடக் கூடாது என்பதே எதிர்பார்ப்பு மிக்க உண்மையாகும். இவ்விடயத்தில் தமிழர் தலைமைகள் முஸ்லிம்கள் தொடர்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றன என்பது இன்னும் தெட்டத் தெளிவாக அரசியல் அரங்கில் முன்வைக்கப்படவில்லை. இந்நிலையானது முஸ்லிம்களை அச்சத்திற்குள்ளும் பாதுகாப்பற்ற சூழலுக்குள்ளும் இதுவரை தள்ளி வந்திருக்கிறது.**

கடந்த கால நிகழ்வுகளை வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பகுத்து ஆராயும் போது அச்சம் தரும் சூழலும் பாதுகாப்பற்ற இருப்புமே முஸ்லிம்கள் மனதில் மேலோங்கியுள்ளது. மிகவும் வெட்கப்படக் கூடிய ஒரு விசயம் யாதெனில், பெரும்பான்மை இனமான சிங்கள மக்களிடமிருந்து எந்த உரிமைகளுக்காக தமிழர் அரசியல், இராணுவத் தலைமைகள் போராடிக்கொண்டிருக்கிறதோ, அவ்வுரிமைகளை முஸ்லிம்களுக்கு வழங்காது - சிங்கள பெரும்பான்மை இனம் தமிழர்களுடன் எம்மாதிரி நடந்து கொண்டதோ அதே மாதிரித்தான் முஸ்லிம்களுடன் கடந்த காலங்களில் நடந்து கொண்டிருக்கிது என்பதே!

ஆகவே, சந்தேகங்களையும், அச்சங்களையும் போக்கவேண்டிய முக்கிய பணி தமிழ் தலைமைகளுக்குள்ளது என்பது மறுக்க முடியாதது. இந்த வகையில் முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு எதனைக் கோருகிறது(?) என்று பார்க்காமல்; தங்களுடன் ஆண்டாண்டு காலம் இணைந்து வாழும் சிறுபான்மை இனமான முஸ்லிம்களுக்கு இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வில் என்ன வழங்குவதற்கு தமிழர் தலைமைகள் தயாராகிவிருக்கிறது என்பதே முஸ்லிம்களின் கேள்வியாகும்.

தமிழர் தலைமைகளின் முஸ்லிகள் தொடர்பான முன்வைப்புக்கள் முஸ்லிம்களை திருப்திப்படுத்தும் பட்சத்தில் - நிச்சயமாக இன்று வடக்கு - கிழக்கில் எதிர்கொள்ளப்படும் தமிழர் முஸ்லிம்களுக்கிடையிலான விரோதம், நம்பிக்கையற்ற தன்மை, பாதுகாப்பற்ற சூழல் அரசியல் ரீதியான காய் நகர்த்தங்களில் (வடக்கு கிழக்கு இணைப் பிரிப்பா) இரு சமூகமும் ஒரு நம்பிக்கையான ஒளிக்கீற்றை தரிசிக்க வாய்ப்பை ஏற்படுத்தும் என்பது நிராகரிக்க முடியாத உண்மையாகும்.

தமிழர் தலைமைகளில் தவிர்க்கவியலாத சக்தியாகவும் தமிழர், முஸ்லிம் உறவை ஒரு நொடியில் தகர்த்து விடவும் அல்லது நம்பிக்கையுடன் கட்டயெழுப்பவும் சக்திபெற்றவர்களான விடுதலைப் புலியினர் இவ்விடயத்தில் முக்கிய பாத்திரத்தைக் கொண்டுள்ளனர். அடுத்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்பினருடன் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பினருக்கும் அந்தப் பங்குண்டு. இத்தலைமைகள் முஸ்லிகள் தொடர்பாக தங்களது நிலையென்ன வென்பதை கடந்த காலங்களில் உறுதியாக வெளிப்படுத்தவில்லை. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடந்து வந்திருக்கின்றனர்.

விடுதலைப் புலியினர் ஆரம்ப காலங்களில் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களில் முஸ்லிம் அமைப்புகளுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். எம்.யூ.எல்.எப். உடன் இந்தியாவில் புலிகளின் தலைமை பேச்சுவார்த்தை நடாத்தி இருந்தது. அதில் விடுதலைப் புலிகளுடன் இணக்கத்திற்கு வந்த அனைத்து விடயங்களுக்கும் மாறாகத்தான் 1990 ஜூனுக்குப் பிறகு முஸ்லிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் நடந்து கொண்டார்கள். ஆகவே 1990 ஜூனுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் ஒரு கருத்தினையும் 1990ஜூனுக்குப் பின் முஸ்லிம்கள் தொடர்பாக இனச்சுத்திகரிப்பு இன அழிப்பு என்ற கொடூரமிக்க கருத்தினையும் இப்போது முஸ்லிம்கள் விடயத்தில் ''துப்பாக்கிகள் மௌனம்'' என்ற கருத்தையும் பிரதிபலிக்கின்றனர்.

ஆகவே! விடுதலைப் புலியினர் முஸ்லிம்கள் என்ன கருத்தினைக் கொண்டிருக்கிறார்கள் என்பது பிரபாகரனால் தெளிவுபடுமிடத்துத்தான் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு பொது இணக்கத்திற்கு வருவது சாத்தியப்படக்கூடும். 1990க்கு முன் புலிகள் முஸ்லிம்களை அவர்கள் தமிழர்களின் சகோதர்கள் என்றும் ''இசுலாமியத் தமிழர்கள்'' என்றும் அழைக்க முற்பட்டனர். பின்னர் முஸ்லிம்களைக்கொன்று இனச்சுத்திகரிப்பு நடாத்தினர். ஆகவே விடுதலைப் புலிகள் தமிழர்களுக்கு இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தமிழ் ஈழம்தான் என எப்படி அழுத்திச் சொல்லகிறதோ அதேபோல்தான் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களுக்கான இறுதித்தீர்வு எது என்பதை இப்போது அழுத்திச் சொல்லவேண்டும். சொல்ல வேண்டிய இறுதிக் காலகட்டமும் இதுதான். முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் பிரபாகரன் தனது தீர்வை பகிரங்கப்படுத்துவாரா?

அடுத்து ஏனைய தமிழ் அரசியல் தலைமைகளான ஈ.பி.டி.பி. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற அரசியல் தலைமைகள் முஸ்லிம்கள் தொடர்பான விடயத்தில் தங்களது நிலைப்பாடுகளை முன்வைக்கவேண்டும். இப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தலைமைகளுடன் முஸ்லிம் காங்கரஸ் பேசிக்கொண்டிருக்கிறது. ஆனாலும் கடந்த காலங்களிலும் இக்கட்சிகள் முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உள்ளது. கடந்த காலங்களில் என்ன பேசினார்கள்? என்ன தீர்வை முன்வைத்தார்கள்? என்பது இன்னும் மக்களுக்கு தெரியவில்லை. ஆகவே முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ் தலைமைகள் பேசும்


அதேவேளை, முஸ்லிம்கள் தொடர்பான தீர்வைப் பகிரங்கப் படுத்துவதற்கும் தமிழர் தலைமைகள் முன்வரவேண்டும். அப்போதுதான் முஸ்லிம் காங்கிரஸ் என்ன கேட்டார்கள்? தமிழர் தலைமைகள் எதனை முன் வைத்தார்கள் என்பதை மக்கள் அறியக் கூடியதாக இருக்கும். முஸ்லிம் காங்கிரஸ் இவற்றை முஸ்லிம் மக்களிடம் பகிரங்கப்படுத்தும் என்ற எதிர்பார்ப்பில் தமிழர் அரசியல் தலைமைகள் மௌனமாக இருந்து விடக்கூடாது! இப்பணியானது இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வில்; வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம்களில் எதிர் காலத்தில் முக்கியமானது என்பதை உணர்தல் அவசியம்.

அரசியல் நோக்கங்களுக்காக முஸ்லிம் காங்கிரஸ் தமிழர் அரசியல் தலைமைகளுடன் பேசிக்கொண்டிருந்தாலும்; பகிரங்கத்திற்கு வராத தமிழ் தலைமைகளின் கருத்துகள் காலப்போக்கில் தேர்தல் மேடைகளில் பிரச்சார இலாபத்திற்காக இவற்றை மறுக்கக்கூடிய வாய்ப்புக்கள் நிறையவே இருக்கிறது. இதனால் இன்றுள்ள விரோதம், பாதுகாப்பற்ற சூழல், இனங்களுக்கிடையேயான அச்சம் என்பன மேலும் அதிகரிக்கவே வாய்ப்பு ஏற்படும். ஆகவே, விடுதலைப் புலிகளாலும் சரி, ஏனைய தமிழர் தலைமைகளினாலும் சரி, உடனடியாக முஸ்லிம் மக்களுக்கான தீர்வை முஸ்லிம் மக்கள் மத்தியில் பகிரங்கமாக முன்வைத்தலே ஆரோக்கியமானது!

**இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வை முன்வைக்குமாறு பிரேமதாசவைக் கேட்டகாலத்தில் அவர் சொன்ன ஒரு விடயத்தை மீண்டும் ஞாபகத்தில் கொண்டு வருவது அவசியமானதாகும். ''நான் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு தயாராக இருக்கிறேன். தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வாருங்கள்'' என்றார் பிரேமதாச; இப்படியே இரண்டு இனங்களும் மோதவிட்டு தாங்கள் குளிர் காய்ந்து கொள்ளும் பேரினவாத அரசியல் தலைமைகளின் கபட விளையாட்டிற்கு நாம் இன்னும் பலியாக வேண்டுமா என்பதை தமிழ் - முஸ்லிம் அரசியலில் அக்கறை கொண்டுள்ளவர்கள் கேட்டுக் கொள்வது அவசியம்.**

தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களுக்குள்ள பிரச்சினைகளில் ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வந்து தமக்குள்ள உரிமைகள் சுதந்திரம் அனைத்து பேரினவாத சக்திகளுக்கெதிராக போராடுமொரு பலம் வாய்ந்த சூழல் ஏற்படின் அதுதான் பேரினவாதிகளின் கழுத்துக்கான தூக்கு கயிறாகவிருக்கும். அப்படியான சூழல் ஏற்படின் சந்திரிகாவோ, ரணிலோ அல்லது நாளைய பேரினவாத தலைமைகளோ தோற்றுப் போய்விடுவார்கள்.

இவ் உண்மையின் அடிப்படையில் இலங்கையில் நீண்ட காலமாய் சிங்கள ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டு, கொடுமைகள் இழைக்கப்பட்டுவரும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒவ்வொருடைய பிரச்சினைகளை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு பேரினவாத சக்திக்கெதிராக தங்களது ஆற்றல்களைப் பிரயோகிப்பதற்கு தடையாகவுள்ள பெரும்பாலான அம்சங்களை தீர்த்துக்கொண்டு போராடுவதற்கான நிலை உருவாகுவதற்கு தமிழர் அரசியல் தலைமைகள் இனப்பிரச்சிக்கான தீர்வில் முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வை உடனடியாக முன்வைத்து வெளிக்கொணர வேண்டும். இதுவே வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் எதிர் காலத்தில் நம்பிக்கையான ஆரோக்கியமான சூழலை தோற்றுவிக்க வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கை!





அபூநிதால்

# இணைந்த வட கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனியான அலகு!

சி.வே. முருகையா - கரவெட்டி.

அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படுவது இன உரசலைத் தடுப்பதற்கும் தத்தமது மொழி, மத, கலாசாரத்தன்மைகளைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவுமே என்பதை ஏற்றுக்கொண்டால், இணைந்த வடகிழக்கு மாகாணங்களில் முஸ்லிம் மக்களுக்கு தனியான ஓர் உப அலகு கீழ்க்கூறப்படும் முறையில் கொடுப்பதில் தவறேதும் கிடையாது. ஆனால், தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற வகையில் இன்றுள்ள யதார்த்த நிலையில் அதிகாரப் பரவலாக்கம் இடம் பெறுமா என்பதே சிந்திக்க வேண்டிய விடயமாயிருக்கிறது.

1. இன அடிப்படையில் பிராந்திய சபைகளில் அரசியல் கட்சிகள் அமைக்கக் கூடாது. கொள்கை அடிப்படையில் மட்டும் கட்சிகளை அமைக்கலாம். (மத்திய அரசாங்கத்தில் இன அடிப்படையில் கட்சி அரசியல் நடத்தலாம்)

2. முதல் அமைச்சர் பொறுப்பின் கீழ் காணி, சட்டம், ஒழுங்கு, கல்வி ஆகிய மூன்று முக்கிய துறைகளையும் வைத்திருக்க வேண்டும்.

3. உப. முதல் அமைச்சர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு ஒரு துறைக்கு ஒரு பொறுப்பாகவும், முதல் அமைச்சரிடம் உள்ள முக்கிய மூன்று துறைகளுக்கும் கூட்டுப் பொறுப்பாகவும் இருக்கவேண்டும். முக்கிய மூன்று துறைகளில் தீர்மானம் எடுக்கும் போது இருவரினதும் ஒத்த சம்மதம் பெறப்பட்டே செய்ய வேண்டும். அப்படியாக தீர்மானம் எடுக்க முடியாத இடத்து சபையை கூட்டி முடிவு எடுக்கவேண்டும். முதலமைச்சர் முஸ்லிமாக இருந்தால் உப அமைச்சர் தமிழராக இருப்பார். முதலமைச்சர் தமிழராக இருந்தால் உப- அமைச்சர் முஸ்லிமாக அமைவார். அது போல் முஸ்லிம் உப அலகில் சம்பந்தப்பட்ட முக்கிய விடயங்களை முஸ்லிமாகவுள்ள முதல் அமைச்சரோ அல்லது உப - முதலமைச்சரோ தீர்மானம் எடுப்பார். அவ்வண்ணமே தமிழ்ப் பகுதிக்கு தமிழர் முதலமைச்சர் அல்லது உப- முதலமைச்சர் முடிவு மேற்கொள்வார்.

குறித்த முஸ்லிம் அலகில் அம்பாறை மாவட்டத்தையும் முஸ்லிம் பிரதேச சபைகளையும் உள்ளடக்கலாம். சரியான புள்ளிவிபரப்படியே எது எது முஸ்லிம் பிரதேச சபையென தீர்மானிக்கவேண்டும். யாழ். மாவட்ட முஸ்லிம்களுக்காக விசேட ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அதேபோல் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கும் விசேட ஒழுங்கு செய்ப்படவேண்டும். இந்த விடயத்தில் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமானால் இந்த முறையில் மாற்றம் கொண்டு வருவது பற்றி சிறிது காலத்தின் பின் சிந்திக்கலாம். சுருங்கச் சொன்னால் இந்தப் பிராந்திய சபையில் அங்கம் வகிப்போர் தமிழர் முஸ்லிம்கள் என்றில்லாமல் தமிழ் பேசும் மக்கள் என்றிருத்தலே நோக்கம்.

முக்கியமாக சென்ற சில ஆண்டுகளில் இனக்குரோதம் உச்சக்கட்டத்தை அடைந்த நிலையில் தமிழர், முஸ்லிம்கள் மத்தியில் கல்வி, பொருளாதாரம் போன்ற காரணிகளில் அதிக ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு விட்டது. இதையும் கருத்தில் எடுக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கம் எந்த உருவில் எப்போது வரப்போகிறது? இன்றைய நிலையில் யாருமே இதற்கு விடைகூறமுடியாது. எல்லாம் சிங்கள இனவாத மேலாதிக்கம் ஒழிந்த பின் எனலாம். இனவாதம் ஒழியுமா?

**பி.கு**

வடகிழக்கில் உள்ள சிங்கள மக்களின் குடியேற்றப்பட்ட பிரதேசம் புறநீங்கலாக வைத்தே கருத்தில் கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சீனாவின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டதெப்படி?



சீனாவில் 56 சிறுபான்மைத் தேசிய இனங்கள் இருக்கின்றன. இவற்றில் மிகப் பெரிய பெரும்பான்மை இனமாக ஹன் (Han)இனம் விளங்குகின்றது. சீனாவின் மொத்த சனத்தொகையில் 91.96 வீதத்தினர் ஹன் தேசிய இனத்தவரேயாவர். எஞ்சிய 8.04 சதவீதத்தில் 55 சிறுபான்மை இனங்கள் வாழ்ந்து வருகின்றன.

சூவாங் (Shuang)தேசிய இனமே சீனாவில் மிகப் பெரிய இனக்குடிமக்களாவர். 13மில்லியன் சனத்தொகையைக் கொண்டதாக இவ்வினம் விளங்குகின்றது. 1400 மக்கள் தொகை மட்டுமே கொண்ட ஹாஸ்கி (Heshe) தேசிய இனம் சீனாவில் மிகச்சிறிய தேசியனமாக விளங்குகின்றது. சீனாவில் சிறுபான்மை இனங்கள் சீனாவின் பரப்பில் 50 - 60 சதவீதமான பிரதேசத்தை தம் வசம் கொண்டுள்ளனர். சிறுபான்மை இனங்கள் வாழும் பிரதேசங்கள் மத்தியப்படுத்தப்பட்டுள்ளன.

ஹின்ஜெயிவ் (Xinjiang) தீபத்(Tibet)கிங்ஹாய் (Qinghai)ஆகிய தேசிய இனங்கள் வாழும் பரப்பில் சனத்தொகையானது ஒரு சதுர கிலோமீற்றருக்கு இரண்டு பேர் என்ற அளவிலேயே காணப்படுகிறது.

பெரும்பாலான சிறுபான்மைத் தேசிய இனங்கள் சீனாவில் எல்லைப்புறங்களில் வாழ்ந்து வருகின்றன. சீனாவின் 21.000 கிலோமீற்றர் விஸ்தீரணமான எல்லைநெடுகிலும் சிறுபான்மை இனங்கள் வாழ்கின்றன.

கைவிடப்பட்ட காணிகளை நோக்கிய சனத்தொகை குடியகல்வு காரணமாக குறிப்பிடத்தக்க தொகையான மக்கள் வெவ்வேறு மக்கட்பிரிவினருடன் கலந்திருப்பதும் நிகழ்ந்திருக்கின்றது.

அநேக ஹான் (Han) இனத்தவர் சிறுபான்மை தேசிய இனங்களுடைய பிரதேசத்திலும் வாழ்ந்து வருகின்றனர். சிறுபான்மை இனங்கள் பல ஹான் (Han)இனத்துக்குரிய பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். சீனாவில் சிறுபான்மை இன குடிமக்கள் குறிப்பிடத்தக்க சிறிய / பெரிய எண்ணிக்கையிலானவையாக இருப்பினும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

### நிதி உதவி

பொதுவாக 10 மில்லியன் சனத்தொகையடைய சீனாவின் சிறுபான்மைத் தேசிய இனக்குழுக்கள் சீனாவெங்கிலும் பரந்து வாழ்வதைக் காணலாம். சீனாவின் அரசாங்கம் கொள்கைகளை வகுக்கின்றபோது தேசிய இனங்களுக்கிடையே சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் அபிவிருத்தி செய்தல் எனும் நோக்கில் சிறுபான்மைத் தேசிய இனக் குடி மக்களையும் கவனத்தில் கொள்கின்றது. சீன மக்கள் குடியரசில் அரசியலமைப்பு சட்டமானது பின்வருமாறு குறிப்பிடுகிறது. ''சீன மக்கள் குடியரசின் சகல தேசிய இனங்களும் சமத்துவமானவை. அரசாங்கமானது சிறுபான்மை தேசிய இனங்களை சட்டபூர்வ உரிமைகளை பாதுகாப்பதோடு இனங்களிடையே சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் பேணிவளர்க்கவும் இனங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பை உருவாக்கவும் முயற்சிசெய்யும்''

''சீனாவின் சிறுபான்மைத் தேசிய இனக்குழுமங்கள் பெரிதாக இருப்பினும், சிறிதாக இருப்பினும் முன்னேறியதாக அல்லது பின்னடைந்ததாக இருப்பினும் சமூக அபிவிருத்தியில் சேர்த்துக்கொள்ளப்படும் தேசிய இனங்களுக்கு விசேஷட உரித்துடைமைகள் வழங்கப்படமாட்டாது. தேசிய இனங்களுக்கு எதிராக சட்டரீதியாகவோ சம்பிரதாய ரீதியாகவோ எந்த விதமான வேறுபாடு காட்டப்படுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது.''இவைதான் சீனாவின் தேசியக் கொள்கைகளை உருவாக்குவதற்கான அடிப்படைக்கோட்பாடுகளாகும்.

சிறுபான்மை இனங்கள் வாழும் பிரதேசத்தில் பிராந்திய சுயாட்சி முறைமைகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் எல்லாச் சிறுபான்மைத் தேசிய இனங்களதும் முன்னேற்றம், பொதுவான ஐக்கியம், சமத்துவம் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளின் அடிப்படையில் அரசு அவற்றினது விவகாரங்களை கையாள்வதனூடாக மேற்கொள்ள முடிகின்றது.

சீனாவின் அரசியல் யாப்பு பின்வருமாறு விபரிப்பது போல ''அரசானது சிறுபான்மை இனங்கள் தமது பொருளாதார, கலாசார அபிவிருத்தியை முன் கொண்டு வருவதற்கு சாத்தியமான சகல வழிகளிலும் வேறுபட்ட சிறுபான்மைக் குழுக்களுக்கு உதவுகின்றது'' இந்நோக்கங்களுக்காக அரசு நிதிவழங்குதல், மூலப்பொருள் மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் என்பவற்றை சிறுபான்மைத் தேசிய இனங்களின் சுயாட்சி அமைப்புகளுக்கு பல்வேறுவழிகளிலும் வழங்கிவருகின்றது. ஒவ்வொரு தேசிய சிறுபான்மைக் குழுவும் தமக்குரிய பேச்சுமொழி அல்லது எழுத்துமொழியைப் பயன்படுத்தவும் உரித்துடையதாக இருக்கின்றது. தாம் விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமையும் இருக்கின்றது.

சீனாவின் சிறுபான்மை தேசிய இனங்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சீனாவின் பிராந்திய சுயாட்சி அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இது சீனாவின் மிக முக்கியமான அரசியல் முறைமையாகக் கொள்ளப்பட்டுள்ளது. இது சீனாவின் அடிப்படைக் கொள்கையாகவும் காணப்படுகின்றது.

பிராந்தியங்களின் அரசு தலைமைத்துவத்தின் கீழ் இனக்குடிமக்களுக்கான பிராந்திய சுயாட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. இதன் மூலம் இப்பிரதேசங்களின் சுயாதீன அரசாங்கம் உருவாக்கப்பட்டு சுயாட்சி உரிமைகள் பரீட்சிக்கப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட தேசிய சயாட்சியாக மட்டுமன்றி பொதுவான உள்ளூர் சுயாட்சி முறையுடன் தேசிய பிராந்திய சுயாட்சியும் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் அது ''பிராந்திய சுயாட்சி'' என் அழைக்கப்பட்டது. எல்லா தேசிய சுயாட்சிப் பிராந்தியங்களும் சீனமக்கள் குடியரசின் பிரிக்கமுடியாத பகுதிகளாகும். சுயாட்சி அரசாங்கங்களின் அரச அதிகாரம் உள்ளூர்மட்டத்தில் உள்ளூர் தலைமைகளால் தலைமைத்தாங்கப்படுகின்றது.

வரலாறு சீனாவின் தேசிய சிறுபான்மையினங்கள் பல்வேறுபட்ட சுயாதீன அரச நிர்வாக் மாதிரிகளை கொண்டதாகப் பரவிக் காணப்படுகின்றது. சில பெரிய பிராந்தியங்களாகவும், சில சிறிய (Pokkets)பிரதேசங்களாகவும் காணப்படுகின்றன. ஒரு குறித்த இனக்குழு குறித்த பிரதேசமொன்றை கட்டுப்படுத்துவதில்லை.

அனேக இடங்களில் அனேக தேசிய இனங்கள் ஒன்றாக வாழ்கின்றன. கூட்டாக நலன்களை பெறுகின்றன. ஜின்ஜியாகங் (Cxinjiang) மாகாணத்தில் ஜின்ஜியான்களுடன் ''அய்சார்'' (Uygair) இனத்தவரும் வாழ்கின்றனர். மேலும் இவைதவிர 12 தேசிய சிறுபான்மையினங்கள் இம்மாகாணத்தில் வாழ்கின்றன. அவற்றில் காசாக் (Mongolian), சீபி (Xibe), குயீ (Hui) மற்றும் ஹான் (Han)இனங்களும் இங்கு வாழ்கின்றன. ''தீபத்'' தீபகத்தின் பிரதான இனக்குழுவாக திபத்தூன் இனம் வாழ்கின்ற போதிலும் அவர்களோடு மொன்பா (Monba), லோபா (Loba), குயீ (Hui)மற்றும் (Han) இனங்களும் வாழ்கின்றன.

### சுயாட்சி

தீபகத்தியர்களின் பரம்பல் தீபத்தில் மட்டும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சியாங்கை (Chcighai) கன்சு (Gansu) சிக்சான் (Sichuan) மற்றும் யனான் (Yananas) மாகாணங்களிலும் அவர்களை காணமுடியும். யனான் (Yanan) மாகாணத்தின் நிலை மேலும் நெருக்கமானதாகும். இங்கு 24 தேசிய இனங்கள் ஒன்றாக வாழ்கின்றன.

நீண்ட வரலாற்று மற்றும் கலப்புகள் போன்றவையே இவ்விதம் தேசிய இனங்களின் பரவலுக்கு காரணமாக உள்ளது. இதனால்தான் சீனாவின் வேறுபட்ட தேசிய இனக்குழுக்களிடையே நெருக்கமான உறவு பேணப்படவும் முடிகின்றது.

சீனாவின் நிலைமைகேற்ப பிராந்திய சுயாட்சி பல சிறிய பெரிய இனக்குழுக்களிடையே பரீட்சிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய சிறுபான்மை இனங்கள் தனியாகவும் கூட்டாகவும் வாழ வழிசெய்யப்பட்டுள்ளது. அவ் அனுபவத்தின் மூலம் சீனாவின் தேசிய இனங்களிடையே முழுமையான திருப்தியேற்பட்டுள்ளதோடு அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன் மூலம் இனப் பரம்பல் இருந்தபோதும் சீனமாதிரிப் பிராந்திய சுயாட்சி வெற்றிகரமானதாகக் காணப்படுகின்றது.

அடிப்படை வித்தியாசம் யாதெனில் பிராந்தியங்கள் தமக்கெனத் தனியான அரசையும் தனியான அரசியல் சட்டத்தையும் கொண்டிருக்கும் உரிமையை பெற்றிருப்பதோடு அவர்கள் தாமே தம் சொந்த விவகாரங்களை தம் சொந்த நிர்வாகத்தின் கீழ் ஏனைய பிராந்தியங்களை விட சிறப்பாக மேற்கொள்ளவும் முடிகின்றது.

அரசியல் யாப்பு திட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைய சுயாட்சி பிரதேசங்களுக்கான சட்டம் பிராந்திய தேசிய சுயாட்சி அரசால் நிர்ணயம் செய்யப்படுகின்றன. இதற்கு மேலாக சுயாட்சி அமைப்புகள் பின்வரும் அதிகாரங்களையும் தம்மகத்தே கொண்டுள்ளன.

1. தேசிய சுயாட்சி பிரதேசங்களுக்கான மக்கள் காங்கிரஸ் சுயாட்சி அமைப்புகளுக்கான சட்டமியற்றும் அதிகாரத்தை கொண்டுள்ளதோடு விசேட விதிமுறைகள், அரசியல், பொருளாதார, கலாசார, தனித்தன்மைகள் என்பனவும் தேசிய இனம் மற்றும் இனக்குழுக்களை கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளமையை உறுதிப்படுத்தும்.

2. பிராந்திய சுயாட்சி அலகுகளின் சுயாதீன அரசாங்கமானது பிராந்தியத்தின் நிதிநிர்வாகக்கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். எல்லாவருமானங்களும் பிராந்தியங்களின் நிதி முறைமைக்கேற்ப பிராந்திய சுயாதீன அரசாங்கத்தால் அந்த பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

3. சுயாதீன மிக்க பிராந்தியங்களின் சுயாதீனமான அரசாங்கங்கள் தமது பிராந்தியத்தின் சுதந்திரமான பொருளாதார அபிவிருத்தியை மத்திய அரசாங்கத்தின் வழிகாட்டலுடனும் திட்டமிடலுடனும் முன்னெடுத்துச் செல்லும் இயற்கை வளங்களையும் நிர்மாணக் கைத்தொழில்களையும் சுயாதீன பிராந்தியங்கள் பயன்படுத்தும் போது மத்திய அரசு பிராந்தியங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

4. பிராந்திய சுயாட்சி அரசுகள் சுதந்திரமான முறையால் நிர்வாகம், கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், பொதுசுகாதாரம், உயிரியல் என்பவற்றை தாமே முன்னெடுக்கின்றன.

தேசிய இனங்களின் கலாசாரத்தையும் கலாசார பாரம்பரியத்தையும் பேணிக்காக்கவும், வளர்த்தெடுக்கவும் கூடிய வகையில் பிராந்திய சுயாட்சி அலகுகள் செயலாற்றுகின்றன.

5. தேசிய பிராந்திய அலகுகள் விரும்பினால் தேசிய பாதுகாப்பு ஒழுங்குக்கேற்ப தமது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்காக தேசிய பேரவையின் அனுமதியுடன் சொந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பு படைகளை நிறுவுவதன் ஊடாக பொது ஒழுங்கைப் பேண முடியும்.

6. முன்னேற்றகரமான இன்னொரு அம்சம் யாதென்றால் சுயாதீன அரசுகள் தம் சுயாட்சி பிரதேசத்தில் பிராந்தியங்களுக்குரிய ஒழுங்குகளைப் பயன்படுத்தி தம் பேச்சு மற்றும் எழுத்துமொழியை அல்லது மொழிகளையும் தம் பிராந்தியத்தில் பயன்படுத்த முடியும்.

சீனாவில மூன்று வகையான பிராந்திய சுயாட்சி அலகுகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் சிறுபான்மை இனங்களின் பரவலுக்கமைய இருக்கின்றது. முதலாவது வகை குறித்த ஒரு சிறுபான்மை குழு வாழும் பிராந்தியங்களுக்கு உதாரணமாக லிங்சாய் (Linshanyi) சுயாட்சி பிராந்தியம் மற்றும் யான்பியன் கொரிய சுயாட்சிப் பிராந்தியம் (Yanbian Koriean Atnomy Pretecture) என்பனவற்றை கூறலாம்.

இரண்டாவது வகையானது எங்கே குறித்த சிறுபான்மையினம் பரந்த பிரதேசத்தில் மேலாண்மை செலுத்தும் போது அப்பிரதேசத்தில் ஏனைய பல சிறுபான்மை இனங்கள் வாழுமாயின் அவற்றுக்கான சுயாட்சி அலகுகளும் உருவாக்கப்படும். ஜின்ஜியால் (Xinijiang) அய்கார் (Uyguar) சுயாட்சிப் பிராந்தியம் மற்றும் கியான்சிப் சுவி (Gangai Zhuang) சுயாட்சிப் பிராந்தியங்களையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இறுதிவகையான பிராந்தியங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு அல்லது மேலதிக சிறுபான்மை தேசிய இனங்கள் கூட்டாக வாழ்கின்ற குயனன் போயி (Qiannas Bouyi) மற்றும் மியோ (Miao)சுயாட்சிப் பிராந்தியங்களை உதாரணமாகக் கொள்ளலாம். சீனாவின் சுயாட்சி அமைப்புக்கள் மூன்று மட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

மாகாண மட்டம், உள்ளூர் மட்டம், தேசிய மட்டம் என்பனவே அவையாகும். அங்கு தற்போது 159 தேசியப் பிராந்தியங்கள் இருக்கிறன. இவற்றில் 5 சுயாட்சி பிராந்தியங்கள் (Regions) 30 உள்ளூர் சுயாட்சிட் பிரதேங்கள் (Auelononiouy Prefectures) 124 கிராமிய (Country Banner) பிரிவுகள்.

சீன அரசாங்கமானது சகல தேசிய சிறபான்மை இனங்களின் பேச்சு மற்றும் எழுத்து மொழிக்குரிய கௌரவத்தை வழங்கி வருகின்றது, அரசியல் அமைப்புச் சட்டம் தெளிவாக விதித்திருப்பதைப் போல ''எல்லா தேசிய சிறுபான்மை இனங்களுச்கும் தம் பேச்சு, மற்றும் எழுத்து மொழிகளை சுதந்திரமாகப் பயன்படுத்த உரிமையுண்டு'' எல்லாத் தேசிய இனங்களும் சுதந்திரமான முறையில் தம் மொழியைப் பேசவும் எழுதவும் எச்சந்தர்ப்பத்திலும் எவ் அலுவல் காரணமாகவும் பயன்படுத்தவும் சமூக வாழ்வையும் பேச்சு மற்றும் எழுத்து மொழி மறுசீரமைக்கவும் எவ்வித தலையீடும் பாகுபாடுமின்றி சுதந்திரமாக செயற்படவும் உரிமையுண்டு.

1979ம் ஆண்டு நடைபெற்ற தேசிய மக்கள் காங்கிரசின் ஐந்தாவது கூட்டத்தொடரின் போது மேலும் தெளிவான விதிமுறைகளும் சட்டங்களும் விதந்துரைக்கப்பட்டன. இதன் அடிப்படையில் தேர்தல்களின் போது எல்லா உள்ளூர் மொழிகளையும் நாட்டின் சகல மட்டங்களிலும் பிராந்திய உள்ளூராட்சி மட்டங்களிலும் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

நாட்டின் சகல தேசிய குடிமக்களும் தேசிய இனங்களும் ''தம் பேச்சு மற்றும் எழுத்து மொழியை மக்கள் நீதிமன்றங்களிலும் வழக்காடுதலுக்கும் பயன்படுத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ளூரில் பேசப்படும் எழுதப்படும் மொழி குறித்து பரிச்சயமற்றவர்க்ள் மொழிபெயர்ப்பு வசதிகளைப் பெறவும் உரித்துடையவரென விதிக்கப்பட்டது''

''சிறுபான்மை தேசிய இனங்களின் உள்ளூர் மொழி அல்லது பல இனக்குழுக்கள் ஒன்றாக வாழும் பிரதேசத்தின் மொழிகள் பயன்பாட்டில் இருக்குமாயின் நீதித்தீர்ப்புக்கள் அறிவித்தல்கள் ஆவணங்கள் என்பனவற்றை தேவையான மொழியில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைள் எடுக்கப்பட வேண்டும்''

இவ்விதப்புரைகள் தேசிய சிறுபான்மை இனங்கள் தம் சொந்த மொழியை பயன்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றன.

**நன்றி: பீங்கிஷ்ரிவ்யூ (ஆங்கிலம்)**
**தமிழில் பொன்:- பிரபாகரன்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையகத்தில் நவீன விவசாயிகளும் பண்ணையடிமைகளும்

(இறுதிப்பகுதி)

1986ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நான் வன்மமும், வைராக்கியமும் குடிகொண்ட நெஞ்சுடன் க.பொ.த.(சா/த) படிக்கப்போனேன். அதிபர் வரவேற்று ஊக்கப்படுத்தினார். புத்தகங்களையும் கொப்பிகளையும் வாங்குவதற்காக டிசம்பர் லீவில் நுவரெலியாவுக்கு மீண்டும் விவசாயக் கூலியாகச் சென்றேன். அப்போது அப்பாவும் அங்கு வந்திருந்தார். அப்பாவும் நானும் நானுஓயாவிலுள்ள காந்தி நினைவு மடத்தில் மருதைவீரன் என்ற வயோதிபரின் அனுசரணையுடன் தங்கினோம். அப்பா விடிய விடிய நெருப்பு மூட்டிக் கொண்டே தூங்க முற்படுவார். நான் பயங்கரமான குளிராலும் போதிய உணவின்மையாலும் இன்றோ நாளையோ செத்துப் போவேன் என பல நாட்கள் எண்ணியிருக்கின்றேன்.

தினசரி நுவரெலியாவுக்கு நடந்து போவோம். கெலகல்ல, மிலிக்வூட் சந்திகளில் ஆயிரக் கணக்கான விவசாய கூலிகளுடன் நாங்களும் சிலவேளை பன்னிரெண்டு மணிவரை கடும் குளிரையோ, வெயிலையோ பொருட்படுத்தாமல் நிற்போம். கிழமையில் இரண்டு மூன்று நாட்கள் எங்காவது வேலை கிடைக்கும். வடிகால் அமைத்தல், கிழங்குபறித்தல், மூட்டை தூக்குதல், சாணி தூக்குதல், இப்படி ஏதாவது வேலை. இன்றோடு தொலைந்தோம் என்று நினைக்கும் அளவுக்கு வேலை கடுமையானதாக இருக்கும். 50-60ரூபாய் நாளாந்த கூலியாக கிடைக்கும். இதில் செலவிட்டது போக மிகுதியை சேர்த்து நான்கு C.R.கொப்பிகளும் ஒரு பழைய வெள்ளை காற்சட்டையும் வாங்கினேன். ஆதலால் பாடசாலை தொடங்கிய பின் ஒரு வாரம் தாமதமாகவே போகநேர்ந்தது. அதிபர் பருவச்சீட்டு வாங்கித் தர மறுத்துவிட்டார். பிறகு ஏறக்குறைய 18 மாதங்கள் கால்நடையாகவே தினசரி 20 கி. மீற்றர் தூரம் வரை நடந்து பாடசாலைக்குப் போனேன்.

அப்பா 10வருடமாக நுவரெலியாவின் பண்ணையடிமையாக இருந்தார். தம்பியும் மூன்று ஆண்டுகள் பண்ணையடிமையாக இருக்கவேண்டிவந்தது. ஒரு தடவை பண்ணையில் இருந்து வெளியேற விரும்பியமையால் கடுமையாக தாக்கப்பட்டதோடு, உடமைகளையும் பறித்து கொடுக்க வேண்டிய கூலி எதையும் கொடுக்காமல் விரட்டி விடப்பட்டார் தந்தை.

இன்னுமொரு தடவை வெலிமடைப் பகுதியில் ஒரு பண்ணையில் இருந்து தப்பி வந்த சுப்பன் குடும்பத்தை சீத்தாஎலியாவில் இருந்து பலாத்காரமாக பழைய பண்ணையுடமையாள் குண்டர்களோடு வந்து அடித்து தூக்கிச் சென்றார். சுப்பன் குடும்பம் அடைக்கலம் பெற்றிருந்த பண்ணையார், சுப்பன் பட்ட கடனை தான் தருவதாகக் கூறியபோதும் வெலிமடைகாரர்கள் கேட்கவில்லை. அவர்கள் கதறக்கதற ஒவ்வொருவராக பிடிக்கப்பட்டு 4 வயது பிள்ளைமுதல் கணவன் மனைவிவரை 6பேர் வேன் ஒன்றில் தூக்கிச் செல்லப்பட்டார்கள்.

இது இன்னுமொரு சம்பவம்;

லியோ, பிரபா என்ற இரண்டு இளைஞர்களை கிழங்கு மூட்டை தூக்கும் வேலைக்கு சீத்தா எலிய கெமுனி என்பவன் பிலிக்வூட் சந்தியில் இருந்து கூட்டிச் சென்றான். அங்கு 400 கிழங்கு மூட்டைகள் மலையுச்சியில் ஒரு வாடியில் அடுக்கப்பட்டிருந்தன. அத்தனையும் 100 கிலோவுக்கு குறையாத மூட்டைகள். அவற்றை வீதிக்கு கொண்டு வர 350-400 யார் தூரம் ஒற்றையடி வரம்பில் தூக்கிக்கொண்டு வரவேண்டும். ஒரு மூட்டைக்கு 1/=ரூபா தருவதாக கூறிய போதும் இயலாமையால் இருவரும் அழுதனர். பத்து மணிக்கு ஒரு சதம் கூட கொடுக்காமல் விரட்டினான் கெமுனு.

இன்னொரு நாள் சாந்திபுர என்ற இடத்திற்கு பிரபா, லியோ, கணேஸ் ஆகிய மூன்று இளைஞர்களும் கரட் பிடுங்குவதற்கு கூட்டிச் செல்லப்பட்டனர். அவற்றைப் பிடுங்கி மூட்டை கட்டி வீதிக்கு கொண்டு வர ஐந்து மணியாகியது. பகல் பாணும் சம்பலும் மட்டுமே உணவாகக் கிடைத்தது. 5 மணிக்கு தூர்ந்து போன கிணரொன்றை துப்புரவாக்கி விட்டுப் போகுமாறு கேட்டான் பண்ணைக்காரன். இளைஞர்கள் மறுக்கவே தருவதாக ஒப்புக்கொண்ட கூலியில் பாதியை மட்டும் கொடுத்து விரட்டினான்.

1987ம் ஆண்டு ஆடி மாதம் கடும் குளிரும் மழையும், காற்றும் சுழன்றடிக்கும் இரவுகள் பயங்கரமானவை. இலங்கையில் ஆகக் குறைந்த வெப்பநிலையான 13.'C'அன்றுதான் நுவரெலியாவை வாட்டியது. எங்களது கொட்டில் இடிந்து விழுந்து விட்டது. அப்பா குளிரில் நடுங்கினார். நானும் என் நண்பன் ஒருவனும் மாட்டுக் கொட்டிலில் அது எங்களது கொட்டிலைவிட வசதியானது. ஒரு புறத்தை தயார் செய்து ஒருவாரம் தங்கினோம்.

நுவரெலியாவின் விவசாயக் கூலிகள் மற்றும் பண்ணையடிமைகளின் வறுமை, துயரம், வாழ்க்கை வெற்றி தோல்விகளில் பங்கு கொண்ட சாட்சியமாகவே இதனை பதிய வேண்டி வந்தது.



பண்ணையடிமைக் குடும்பங்களில் 5வயது சிறுவர்கள் கூட பண்ணைகளில் எவ்வித மான கூலியும் இன்றி வேலை செய்கின்றார்கள். தாய், தந்தை, சகோதரர்களோடு சமனாக உழைக்கிறார்கள். இப்பண்ணையடிமைக்கு குடும்பங்களின் இன்பதுன்பம், வறுமை, பசி, பிணி, இல்லாமை, கல்லாமை குறித்து இன்றுவரை எந்த ஒரு தொண்டர்தாபனமோ அரசியல் தொழிற்சங்க இயக்கமோ பத்திரிகையாளர்களோ மனிதவுரிமைக் குழுக்களோ அக்கறைகாட்டவில்லை. ஏனென்றால் இவ்விசாயக் கூலிகளும் பண்ணையடிமைகளும் பெரும்பாலும் தமிழர்களாக இருப்பதே. ஆம் மலையகத் தமிழர்களா இருப்பதே.

நுவரெலியா பிரதேச சபை இம்மக்களது நல்வாழ்வில் அக்கறைகாட்டமுடியும். அவர்கள் மலையகத்தின் தாதாக்களாக தம்மைக் காட்டிகொள்வதெல்லாம் அப்பாவி மலையக தமிழரிடம் தான். பிரதேச சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, நவீன பண்ணையார் வகுப்பை சேர்ந்தவர்கள் இவர்களது நலன்களில் கை வைப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. பத்தாயிரக்கணக்கான கூலிவிவசாயிகளும், பண்ணையடிமைகளும், இவர்கள் தினசரி நுவரெலியா நகரத் தெருக்களில் சந்திக்கிறார்கள். ஆனால் அவர்கள் மனிதர்களாகக் கூட அரசியல் வாதிகளுக்குப் படவில்லை.

கிட்டத்தட்ட முப்பதாயிரம் குடும்பங்கள் பண்ணையடிமைத்தனத்தில் மூழ்கியிருக்கக் கூடும். பண்ணையடிமைகளின் குடும்பங்கள் தமது உணவு, உடை, உறையுள், மருத்துவம், பேச்சு, நடமாட்டம், அனைத்துக்காகவும் பண்ணையாளர்களை நம்பிவாழ்கின்றார்கள். இவர்களது மருத்துவ தேவைகள் குறித்தோ, பிரசவ வசதிகள் குறித்தோ, குடியிருப்புகள் குறித்தோ, பிள்ளைகளின் கல்வி குறித்தோ எவரும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. அவர்கள் அக்கறைப்படும் மனநிலையில் இல்லை. அடுத்த வேளை உணவுக்காகவும், நாளைய பொழுதின் இருப்பிற்காகவும் போராடிக்கொண்டிருக்கும் ஒரு மக்கள் பிரிவு எப்படி தனது சுகாதாரம் குறித்தும், கல்வி குறித்தும் சிந்திக்க முடியும்?

இப்பண்ணையடிமைகள் மற்றும் விவசாயக் கூலிகளில் மலையகச் சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். இவர்கள் மத்தியில் எவ்விதமான அமைப்புக்களோ, நிறுவனங்களோ, தோற்றுவிக்கப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று வளர்ச்சிப் போக்கில் பண்ணையடிமைத்தனம் மீளுருவாக்கம் பெறும் தளங்களில் மலையகமும் ஒன்றாக மாறி வருகிறது. அப்பண்ணையடிமைகளையும், விவசாயக் கூலிகளையும் திரட்டி பணம் பண்ண முடியுமானால் பல தொழிற்சங்கங்கள் தோன்றக்கூடும். ஆனால் அவர்களது உதிரிப் பாட்டாளி வர்க்க குணவியல்பு அவர்களை திரட்டுவதற்கு தடையாக இருக்கிறதாலோ என்னவோ அவர்களைப் பற்றிப் பேசுவதில்லை. ''இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனமென'' மலையகத் தமிழின மக்களின் வாழ்வு விவரிக்கப்படுகிறது. அந்த மண்ணில் அதே மக்கள் இருபதாம் நூற்றாண்டின் அதிநவீன பண்ணையடிமைகளாய் விவசாயக், கூலிகளாய் மாறிக்கொண்டிருக்கின்றார்கள்.

மலையகத்தின் அரசியல், தொழிற் சங்க, தொண்டர் ஸ்தாபனங்களும் புத்திஜீவிகளும் இவர்களைப்பற்றி சிந்திக்காத போதும் விவசாயக் கூலிகளும், பண்ணையடிமைகளும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்லர். அவர்கள் தன்னியல்பாகவும் தம் இயலளவுக்கு ஏற்பவும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். போர்க்குணமிக்க மலையகத்தின் பாட்டளி வகுப்பின் முன்சக்திகளாக திகழும் ஆளுமை ஒடுக்கப்பட்ட அடிமட்ட அடிமைக் கூலிகளுக்கும், விவசாயிகளுக்கும், பண்ணையடிமைகளுக்கும் மலையக பாட்டாளிகளுக்கும் நிச்சயம் இருக்கிறது. வரலாறு அவர்களை விடுவிக்கத்தான் போகின்றது.

பீனிக்ஸ்

# ஏப்:22 மலையகத் தொழிலாளர் வேலைநிறுத்தம்: ஒரு ஜீவமரணப் போராட்டம்!

தோட்டத்தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்பது ஒரு நீண்ட நாள் கோரிக்கையாகும். அக்கோரிக்கையின் பின்னணியில் தொழிற் சங்கங்களின் குத்துக்கரணங்கள் ஏராளம் நடந்துள்ளன என்பது கடந்த கால வரலாறு.

1990இல் தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு வேலை நாட்களில் சரிவு ஏற்பட்டது. கம்பெனிகள் லாபம் ஒன்றையே கணக்கில் கொள்வதால் வேலைநாட்கள் கூடுதலாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளவில்லை. தோட்டங்களைப் பொறுப்பேற்கும் போது வேலைநாட்களில் வீழ்ச்சி ஏற்படாது. அதனால் தொழிலாளர்களின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படாது என்று உறுதியளிக்கப்பட்டது.

இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எல்லோருக்கும் வாக்குறுதி கொடுத்தது போன்று தோட்டத் தொழிலாளருக்கும் பல வாக்குறுதி கொடுத்தது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிலையை உறுதிசெய்யப் போவதாகக் கூறியது. பதவிக்கு வந்ததும் சம்பள நிலையை உறுதி செய்யவில்லை, தனியார் கம்பனிகளின் குத்தகைக்காலத்தை 50 வருடங்களாக நீடிப்பதென வாக்குறுதி அளித்தது.

இதன் பிறகு தனியார் கம்பனிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கத் தொடங்கின. தொழிலாளர்களின் வேலைநாட்கள் குறைக்கப்பட்டன.

தொழிற்சங்கங்கள் வெறும் பத்திரிகை அறிக்கைகளுடன் மௌனம் சாதித்தன. தொழிலாளர்களோ எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கினர்.

இந்நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 22ம் திகதி வேலைநிறுத்தம் செய்யப்போவதாக எல்லாத் தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன. ஐ.தே.க. தொழிற்சங்கத்தை தவிர ஏனைய எல்லா தொழிற்சங்கங்களும் இந்த அரசாங்கத்திற்கு ஆதரவானவை. பெரும்பாலானவை அரசின் பங்காளிகளாகும்.

இந்தத் திடீர் வேலை நிறுத்த அறிவிப்பு பல சந்தேகங்களையும் கிளப்பத்தான் செய்லாம்.

எதிர்வரும் ஏப்.22ம் திகதி தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் இறங்கவிருக்கின்றனர். தமிழ் தினசரிகளில் உத்தேச வேலைநிறுத்தம் பற்றிய செய்திகளே அதிகம்! செய்திகள் என்று கூறுவதை விட, தொழிற்சங்க அறிக்கைகள் என்று கூறுவதே பொருந்தும்.

மலையகத்தில் எல்லா தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்துள்ளன. மலையக தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்களின் மாதச்சம்பளம் பற்றி இந்த மாதிரியான திடீர் அக்கறை வருவதற்கு என்ன காரணம்?

தொழிலாளர்களின் இருப்பு இன்று கேள்விக் குறியாகிவிட்டது? தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு கொடுத்தது முதல் தொழிலாளர்களின் சேமலாபத்தில் முற்றாகவே அக்கறை செலுத்தப்படவில்லை. அந்நிலைமை மோசமாகி இன்று தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வயிற்றுப் பாட்டிற்கே வழியில்லாமல் போய்விட்டது.

தனியார் கம்பனி நிர்வாகத்தின் கீழான அடக்கு முறைகளுக்கு எதிராக தோட்டங்கள் தோறும் பல போராட்டங்கள் நடந்து வருகின்றன.

மஸ்கெலியா சாமிமலை பகுதியில் சில தோட்டங்களில் தொழிலாளர்கள் ஒன்றாகத் திரண்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்களை கொடுப்பதாகக் கூறிக்கொண்டு தொண்டமான் மீண்டும் தொழிலாளர் மத்தியில் ஒரு தொழிற்சங்கவாதியாக அறிமுகமானார்.

எனினும், அண்மையில் பூண்டுலோயாப்பகுதியிலுள்ள தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து வேலைநிறுத்தம், சத்தியாக்கிரகம், ஊர்வலங்கள் போன்றவற்றை செய்தனர்.

இங்கு தொழிற்சங்கங்களின் வழிகாட்டலுக்காக காத்திராமல் தொழிற்சங்க பேதமின்றி தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினர். தொழிற்சங்கங்களின் வரையறுக்கப்பட்ட தன்மையினால், அவற்றின் முடிவுக்காக காத்திராமல் தொழிலாளர்கள் அவர்களது எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கினர். இந்த நிகழ்வு தொழிற்சங்கங்களுக்கு பெரிய தலையிடியைக் கொடுத்தது.

இவ்வேளையில் உள்ளூராட்சி தேர்தல்கள் பற்றியும் அறிவிக்கப்பட்டது. (பின்னர் இப்போதைக்கு நடைபெறாது எனத் தெரிகிறது) வழமைபோல தொண்டமான் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்த யோசித்தார். அவர் அரசாங்கத்திடம் செல்லாக் காசாக இருக்கிறார். அதனையும் மாற்ற வழமை போல் யோசித்தார். 22ஆம் திகதி முதல் 26ம் திகதி வரை வேலை நிறுத்தம் என அறிவித்தார். இடதுசாரி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பான தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி அடையாள வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்தது. மலையக மக்கள் முன்னணியோ 22ம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு தொடர்ந்து மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ''அரசியல் போராட்டம்?!'' செய்யப்போவதாக அறிவித்துள்ளது.

வேலைநிறுத்தத்தில் இறங்குவதன் மூலம் தொழிலாளர்களிடம் செல்வதற்கு நடவடிக்கையில்லாதிருந்த தொழிற்சங்கங்கள் நடவடிக்கையொன்றை கையிலெடுத்துள்ளன. இது வழமைபோல் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களிடம் சென்று திரும்புவதற்கான வேலை நிறுத்தமாகவே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்காது.

தொழிற்சங்க ஒழுங்கமைப்புக்கள், வழிகாட்டல்கள் இல்லாது எதிர்ப்பு நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் இறங்கியுள்ளனர். ஒழுங்கமைப்புக்கள் வழிகாட்டல்கள் இல்லாது சரியான திசையில் செல்லமுடியாதிருக்கலாம். ஆனால் இந்த நடவடிக்கைகளின் மூலம் அமைப்புக்கள், ஒழுங்கமைப்புகள், வழிகாட்டல்கள் தொழிலாளர்களிடம் ஏற்பட்டுவிட்லாம் என்பதையும் மறந்துவிடலாகாது. இதனையும் மலையக தொழிற்சங்கங்கள் எவையும் கவனத்தில் கொள்ள மாட்டா? அலட்டிக் கொள்ளவும் மாட்டா. ஆனால், தொழிலாளர்களின் நடவடிக்கையில் தலையிட்டு எப்போதுமே தங்களை தங்க வைத்துக் கொள்ளலாம் என்று மலையக தொழிற்சங்கங்கள் தொடர்ந்து யோசிக்கலாகாது. இது தொழிற்சங்கங்களுக்கான பயமுறுத்தல்கள் அல்ல! நேர்மையான தொழிற்சங்கங்களுக்கான ஆலோசனையும் ஆகலாம்.

எது எப்படியிருப்பினும் தனியார் கம்பனிகளின் அடக்கு முறைகளுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் போராடுவார்கள். மாதச்சம்பளத்தை பெறுவதற்கான போராட்டம் தோல்வியடையப் போவவதில்லை.

ஏனெனில், இது தொழிலாளர்களின் இருப்புடன் சம்பந்தப்பட்டது இது அவர்களின் ஜீவாதாரப் பிர்ச்சினை!

இ.ரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்கள் உரிமைகளும் தமிழீழ ஒறுப்புச் சட்டமும்!

-கோமதி

இன்று தென்னிலங்கையில் எவர் விரும்புகிற அல்லது விரும்பாத போதும் "தமிழீழம்" என்கின்ற அரசாங்கம் ஒன்று இயங்கி வருவதை நாம் அறிகிறோம். அந்த அரசாங்கம் அரசாக (State) இன்னும் ஆகவில்லை என்பதும் உண்மை. எவ்வாறாயினும் வடக்கில் எழுதப்படாத அரசியலமைப்பொன்று நடைமுறையில் இருக்கத்தான் செய்கிறது. அந்த எடுகோளிலிருந்து வடக்கில் அமுலாக்கப்பட்டிருக்கிற சட்டங்களை அலசிப் பார்ப்பது அவசியமானதொன்றே. அந்த வகையில் "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" (Penel Code of Tamil Ealam) ('தண்டனை' இங்கு "ஒறுப்பு" என அழைக்கப்படுகிறது.) முக்கியமான ஒன்று. அச்சட்டத்தில் பெண்களது உரிமை பேணப்பட்டிருக்கிறதா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். அதில் பெண்களுக்கான உரிமை பாதுகாக்கப்படக்கூடிய வகையில் சட்டம் ஆக்கப்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை கூட இருக்கிறதா? என்ற வினாவை ஒரு சிலர் எழுப்பக்கூடும். ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனது பொன்மொழிகள் என சொல்லப்படுபவையோடு இது எத்தனை தூரம் பொருந்துகிறது என்கின்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு இது பற்றிய விமர்சனங்களை முன்வைக்கலாம் என்று தோன்றுகிறது. வே.பிரபாகரன் சொன்னதை இங்கு நோக்குவோம்.

"பெண்கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறையில் இருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல் - தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன்" (ஆதாரம்:- நாற்று-2வது இதழ்-மாறன் பதிப்பகம், பக்கம்-6, தமிழீழ பெண்கள் ஆய்வு நிலையம்)

"ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. இது 'ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும்." (அதே நூல்-பக்கம்-31)

"பெண் விடுதலை என்பது அரச ஒடுக்குமுறையில் இருந்தும் சமூக ஒடுக்கு முறையிலிருந்தும் பொருளாதாரச் சுரண்டல் முறையிலிருந்தும் விடுதலை பெறுவதேயாகும்." (அதே நூல்- பக்கம்-35)

நடைமுறையில் உலகமெங்கும் சகல ஆட்சி நிர்வாக துறைகளிலும் ஆண்களது செல்வாக்கும் மேலாதிக்கமுமே நிறைந்து காணப்படுவதை எவரும் அறிவர். சட்டமியற்றுதல், அதனை பிரயோகித்தல், என்பனவற்றைக் கூட ஆண்களே மேற்கொள்கின்றனர். எனவே ஆண் நிலைப்பட்ட ஆணாதிக்க தீர்மானங்களும், முடிவுகளுமே பொதுவாக பெண்கள்மேல் திணிக்கப்படுகிறது. எனவே பெண்கள் தொடர்பான மரபு ரீதியான கருத்தியல் சிந்தனையிலிருந்து வெளிவரும் சட்டங்களினால் பெண்கள் பல்வேறு முறைகளில் பாதிப்புக்குள்ளாகி வருவது சர்வசாதாரண நிகழ்வாகியுள்ளது. அந்த எடுகோளுடன் பார்த்தால் 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்" கூட இவ்விடயத்தில் விதிவிலக்கல்ல. இனி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

### தண்டனை

தண்டனைக்குரிய பதமாக தமிழீழ ஒறுப்புச் சட்டத்தில் 'ஒறுப்பு' எனும் பதம் பிரயோகிக்கப்படுகிறது. இந்த தண்டனை விடயத்தில் எவருக்கெல்லாம் தண்டனை விதிக்கப்படல் வேண்டும் எனும் வறையறைக்குள் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"குற்றவாளியாகக் காணப்படும் காலத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு எதிராக மரண தண்டனை விதிக்கப்படலோ, பதியப்படலோ ஆகாது. ஆனால் அதற்கு மாறாக கடுஞ்சிறையொறுப்போ எளிய சிறையொறுப்போ வழங்கலாம்" (பார்க்க-PCTE-சரத்து-47)

கருவுற்றிருக்கும் காலத்தில் பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது என சொல்லப் பட்டது சரி. ஆனால் கருவுற்றிருக்கிற பெண்ணுக்கு கடுஞ்சிறையொறுப்பு வழங்கலாம் என்ற விடயம் பாரதூரமானது. கடுஞ்சிறையொறுப்பு என்பதன் அர்த்தம் கடுமையான உடல் உழைப்போடு கூடிய தண்டனை என்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க-PCTE-சரத்து-45.ஆ(1)).

ஏற்கனவே கருவளச் சுமை பெண்ணிடம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் 'கடும் உடலுழைப்பு' என்பது மிகவும் மோசகரமான தண்டனையாகவே கொள்ள முடியும்.

அது தவிர அந்த குறிப்பிட்ட பெண்ணுக்கு மாத்திரமல்லாது கருவுற்றிருக்கும் அப்பெண்ணின் கருவளத்திற்கும் ஏற்படுத்தும் உடல், உள ரீதியிலான தண்டனையாகவே இதனைக் கொள்ள முடியும்.

எனவே, செய்த குற்றத்திற்கான தண்டனையாக எளிய சிறையொறுப்பு போதுமானதெனலாம் அதிலும் கருவுற்றிருக்கிற நிலையில் சிறைக்குள் அவளது செயற்பாடுகளுக்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### கருக்கலைப்பு

கருக்கலைப்பு சுதந்திரமென்பது ஒவ்வொரு பெண்ணினதும் முக்கியமான ஒன்றாதல் வேண்டும்.

ஒறுப்புச் சட்டத்திலும் இது விடயத்தில் பிழையான அணுகு முறைகளையே காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக:

உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் மட்டுமே கருக்கலைப்பு செய்யலாம் அல்லாது போனால் 3 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய எவ்வகை சிறையொறுப்பும் வழங்கலாம். அப்பெண்



உயிர்ப்புடன் துடிக்கும் கருவினை உடையவராக இருந்தால் ஏழு ஆண்டு சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்புக்கும் ஆளாதல் வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. (PCTE-சரத்து-215)

சகல பெண்களும் விரும்பித்தான் கருவுறுகின்றனர் என்று கொள்ளவும் முடியாது. பாலியல் வல்லுறவுக்கூடாகவும், அவள் கருவைத் தாங்க நேரிடக்கூடும். (அது குடும்பத்தில் கனவனால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவாகவும் இருக்கலாம்.) உற்ற கருவை கலைக்க முடியாமலும் போயிருக்கலாம். பாலியல் வல்லுறவு, அடிப்படையாக அமைந்தால் கருக்கலைப்பு செய்வதில் தவறில்லை என அதே சரத்தில் 'புறநடை விலக்கு' எனும் பகுதியில் கூறப்பட்டிருக்கிறது. என்ற போதும் 'புறநடை விலக்கு' (2) இல் கருக்கலைப்பு செய்வதானால் ஆணினதும் 'இசைவு' தேவை என கூறப்பட்டுள்ளது.

கருவை சுமக்கும் பெண்ணிடம்தான் கருவை சுமக்கும் சம்மதம் பற்றிக் கேட்டறிய வேண்டுமேயொழிய கனவனது இசைவை அங்கு வலியுறுத்துவது பாரதூரமானது. பெண் விரும்பாத போதும் ஆணின் நிர்ப்பந்தத்தால் இப்படி நடப்பதுவுமுண்டு. அதாவது கருவை சுமப்பவள், தான் விரும்பாத போதும் ஆணின் கட்டாய ஆணையின் பேரில் அதனை சுமக்க வேண்டும் என இதன் மூலம் மறைமுகமாக நிர்ப்பந்திக்கப்படுகிறது. அது மட்டுமன்றி ஆணாதிக்க திணிப்புச் சூழலும் பெண்ணடிமை கருத்தியற் சமூக அமைப்பும் இன்று 'பாலியல் வல்லுறவு' என்பதை புறநிலையிலேயே கொள்கிறது. மனைவி விரும்பாத போதும் கனவனால் கட்டாய பாலியல் உறவுக்கு உள்ளாகும் வழமையான இயல்பு நிலையை பாலியல் வல்லுறவாக கொள்ளும் நிலை பல நாட்டு சட்டங்களில் இல்லை. எனவே இப்படியான சூழ்நிலையில் கருவை சுமத்தல் அல்லது கலைத்தல் தொடர்பான உரிமைகளை பெண்ணிடமே விட்டுவிட வேண்டும்.

கருக்கலைப்பு விடயத்தில் சில வேளை புலிகள் இயக்கத்தினர் தங்களது போர்க்கால மனித வள திரட்டலுக்கான (நீண்ட கால நோக்கைக் கொண்ட) - தந்திரோபாயமாக இதனைக் கொண்டிருக்கக் கூடும். என்ற போதும் போராட்டத்திற்கான பயன்படுத்தலுக்கு மாத்திரம் பெண்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களது உரிமைகளுக்கு எதிராக நடந்து கொள்கிறார்கள் என்ற அபிப்பிராயம் பரவுவதற்கும் இது வழிவகுக்கிறது.



### மறுமணம்

'மறுமணம்' விடயத்தில் அது இப்படிக் கூறுகிறது. "துணைவனோ, துணைவியோ உயிருடன் இருக்கும் போது அல்லது விவாகரத்து நடவாதிருக்கும் போது அவர்களில் எவரும் மறுமணம் செய்யக்கூடாதென்றும் செய்தால் ஏழு ஆண்டுகள் வரை சிறைதண்டனை வழங்க வேண்டும். (PCTE-சரத்து 273) எனக் கூறப்பட்டிருக்கிற போதும் அதன் 'புறநடை' பகுதியில் திருமணமான எவரும் துணைவியைப் பற்றியோ துணைவனைப் பற்றியோ தகவல் எதுவுமில்லாமலிருப்பின் 5 வருடங்கள் காத்திருத்தல் வேண்டுமென நிர்ப்பந்திக்கிறது.

திருமண கட்டமைப்பு என்பதே அது ஆண், பெண் ஆகிய இரு சாராரினதும் சகல சுதந்திரங்களையும் கட்டுப்படுத்தும் நிறுவனம் என்பது அறிந்ததே. பெரும்பாலும் திருமண கட்டமைப்பினால் ஆணைவிட பெண், அதிக பாதிப்புக்குள்ளாகிறாள் என்பது இன்னொரு விடயம். இந்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள 'காத்திருக்கும் வரையறை' என்பது அத்தியாவசியமானதென கருதமுடியாது.

### பாலியல் வல்லுறவு

பாலியல் வல்லுறவு குறித்து பல விடயங்களை நல்ல முறையில் அணுகியிருக்கிற போதும் ஆங்காங்கு சில பலவீனங்களைக் காண முடிகிறது.

'பாலியல் வல்லுறவு குற்றம்' புரிந்த ஒருவருக்கு மரண தண்டனையோ அல்லது 14 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையுடன் கூடிய குற்றக்காசிறுப்போ விதிக்கப்படுமென கூறுகிறது. (PCTE-சரத்து-279-(அ)) குற்றம் புரிந்தவர் 24 வயதையடையாதவராக இருப்பின் தண்டனையைக் குறைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது, என்ற போதும் 'பாலியல் வல்லுறவு' பற்றிய குற்ற வழக்கானது, அத்தவறு இழைக்கப்பட்டதிலிருந்து 3 மாதங்களுக்குப் பின் தொடரப்படலாகாது எனக் கூறப்பட்டுள்ளது. (PCTE-சரத்து-283-(4)) சில நிர்ப்பந்தங்கள் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ முதல் மூன்று மாதங்களுக்குள் வழக்கு தொடர முடியாமல் போனவர்களுக்கு நீதித்துறை நீதி வழங்க முடியாது என கூறுவது சரியான ஒன்றல்ல.

இச்சட்டத்தில் 'பாலியல் வல்லுறவு', 'பாலியல் வன்முறை' இரண்டுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் காட்டப்பட்டிருக்கிறது. அந்த வரையறை இதுவரை வேறு யாரும் செய்யாத ஒன்று என்ற ரீதியில் தமிழீழ ஒறுப்புச் சட்டத்திற்கு பெருமையுண்டு. உதாரணத்திற்கு,

"ஆண் குறியை சிறிதளவு பெண்குறியினுள் நுழைத்தாலும் 'பாலியல் வல்லுறவு" நடைபெற்றதாகக் கொள்ளப்படும்" என்றிருக்கிறது.

"பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளது பாலியல் உறுப்புக்களில் பாலியல் உணர்வுடன் அல்லது அவரை இழிவு படுத்தும் நோக்குடன் தீண்டுவது 'பாலியல் வன்முறைத் தவறாகும்" என்றும் கூறப்பட்டுள்ளது.

என்றாலும் இது தொடர்பாக ஒறுப்புச் சட்டத்திலுள்ள பலவீனமென்னவென்றால் மேற்படி வரையறையிலிருந்து 'பாலியல் வல்லுறவு' மற்றும் 'பாலியல் வன்முறை' ஆகியன ஆணொருவன் ஆண் மீது அல்லது பெண் பெண் மீது பிரயோகிக்கப்படும் 'பாலியல் வல்லுறவு'களையும் பாலியல் வன்முறைகளையும் கண்டும் காணாது, விடுவதா என்ற கேள்வி எழுகின்றது. மேலும் இன்று குடும்பங்களில் கணவனால் மேற்கொள்ளப்படுகின்ற பலாத்கார பாலியல் உறவுகளையும் இங்கு கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம். சமூக யதார்த்த நிலையில் பெண், ஆண்மீது பாலியல் பலாத்காரம் பண்ணுமளவு நிலைமை இல்லை என்பதை நாமறிவோம். சில வேளை இது மிக அபூர்வமாகவே இடம் பெறும். ஆனால் ஆண், ஆண் மீது இக்குற்றத்தை இழைப்பது இன்று சாதாரணமாகிவருவதை நடைமுறையில் அறிய முடிகிறது.

இதை விட 'பாலியல் வல்லுறவு' (Rape) மற்றும் 'பாலியல் வன்முறை' (Sexual Violence) என்பதைப் போலவே 'பாலியல் தொந்தரவுகள்' (Sexual Disturbance) என்ற ஒன்றை வேறுபடுத்தி பார்க்க வேண்டிய அவசியமும் உள்ளது. குறிப்பாக பாலியல் வக்கிர நோக்கில் தீண்டுவது, இழி சொற்களைப் பயன்படுத்துவது, மற்றும் தொடர்பு சாதனங்கள், கலை வடிவங்களுக்கூடாக பாலியல் ரீதியிலான இழிவுகளைப் பிரதிபலிக்கச் செய்தல். அசிங்கப்படுத்திக் காட்டுதல் என்பவற்றை வேறு படுத்தி இனங்காண வேண்டியதும் அவசியமானதாகும். இவ்வகையில் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை வேறுபடுத்தி இனங்காண்பது நீண்ட நோக்கில் நன்மைகள் பயக்கும். குறிப்பாக இது தொடர்பான தண்டனையளித்தலின் போதும் வேறுபடுத்தி பரிசீலிப்பதற்கு இது மிகவும் துணைபுரியும். எதிர்காலத்தில் இப்பாகுபடுத்தல் மேலும் விரிவடையலாம்.

இச்சட்டத்திலேயே முதற் தடவையாக 'பாலியல் வல்லுறவு' எனும் பதம் தமிழில் பாவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் தமிழில் 'கற்பழிப்பு' எனும் பதம் பயன்படுத்தப்பட்டபோது பெண்களுக்கு மட்டுமே கற்பின் தத்துவத்தை வலியுத்துவதாக அப்பதம் அமைந்திருந்ததாலும் பொருத்தமில்லாத சொல்லாக இருந்ததாலும் புதிய மாற்றுப் பதம் ஆக்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக பெண்ணிலைவாதிகளால் கருத்தாடப்பட்டதைத் தொடர்ந்து 'பாலியல் பலாத்காரம்' மற்றும் 'பாலியல் வன்முறை' ஆகிய பதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பதத்தை அறிமுகம் செய்ததில் 'சரிநிகர்' பத்திரிகைக்கு மிகுந்த பங்குண்டு. ஆனாலும் 'பாலியல் பலாத்காரம்' மற்றும் 'பாலியல் வன்முறை' ஆகிய பதங்களில் 'பாலியலுறவு' என்பது உள்ளடக்கப்படவில்லை என பல பெண்ணிலைவாதிகளால் பேசப்பட்டது. இந்நிலையில் தமிழீழ ஒறுப்புச்சட்டம் அறிமுகப்படுத்தியிருக்கிற 'பாலியல் வல்லுறவு' எனும் பதத்தில் பாலியல் (sexual) + வன்மை (violence) + உறவு (intercource) ஆகிய மூன்று விடயமும் உள்ளார்ந்திருப்பதால் இப்பதமே பொருத்தமானது என்பதைப் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். சில வேளைகளில் இதை விட நல்ல பதம் எதிர் காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம்.

### இயற்கைக்கு முரணான பாலியல் உறவு

எவரேனும் ஆணுடன் அல்லது பெண்ணுடன் அல்லது ஏதேனும் விலங்குடன் இயற்கை இயல்புகளுக்கு முரணாக உடலுறவு கொள்ளும் எவரும் 10 ஆண்டுகள் வரை இருவகையிலொருவகை சிறைத் தண்டனையுடன் குற்றக்காசிறுப்புக்கும் உள்ளாதல் வேண்டும் என கூறுகிறது. (PCTE-சரத்து-(286))

இதில் 'இயற்கை இயல்புக்கு முரண்' என எதனை வறையறுத்திருக்கின்றனர் என்பதை குறிப்பிடாதது குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இன்று பெண்களது விடுதலைக்கு தடையாக இருக்கும் முக்கிய ஒரு பிரச்சினையாக பாலியல் சுரண்டல் பாலியல் உறவுக் கட்டுப்பாடு என்பன காணப்படுகிறது. இந்நிலையில் மேற்குலக நாடுகளில் பெண்களின் பாலியல் தேவை பாலியல் சுரண்டலிலிருந்து விடுதலையடைதல் என்பன அங்கு புதிதாக விஞ்ஞான ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்கை பாலியல் புணர்வு முறைகள் அறிமுகமானதிலிருந்து சில வளர்ச்சிகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. மரபு ரீதியிலான கருத்தியல் கட்டுப்பாடு நிலவும் நாடுகளுக்கு இவை வழக்கத்துக்கு வர சில காலமெடுக்கக் கூடும். எனவே இயற்கைக்கு மாறாக உறவு கொள்தல் கூடாது என கூறுவது பெண்களது மட்டுமல்ல ஆண்களினதும் சுதந்திர இயல்புகளினதும் மீதான மோசகரமான கட்டுப்பாட்டு திணிப்பாகும்.

### பரத்தமை

'பரத்தமை' (விபச்சாரம்) பற்றி இன்னமும் நமது சமூகத்தில் நிலைபெற்றிருக்கிற கருத்தியல் காரணமாக பரத்தமையை குற்றத்திற்குரிய ஒன்றாகவே காண்கிறதே ஒழிய அதற்கான ஒட்டு மொத்தமான சமூக நிர்ப்பந்தத்தை இனங் காண்பதில் தவறிழைத்தே வருகிறது.

பரத்தமையில் ஒரு பெண் ஈடுபடுவதற்குக் காரணமாக பெண்ணின் பாலியல் மேலுணர்வை கொள்ள முடியாது. அதற்கான சமூகச் சூழலே பரத்தமை நிலையினை அடையக் காரணமாக இருக்கிறது. எனவே, அந்தச் சூழல் மாற்றியக்கப்படாதவரை இவற்றிற்கான தீர்வுமில்லை.

"காசு நோக்கத்திற்காக ஒரு பாலார் மறுபாலாருடன் உடலுறவு கொள்ளுதல் 'பரத்தமை' தவறாகும். இத்தவறுக்கு நான்கு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய இருவகையிலொருவகை சிறையொறுப்பு வழங்கப்படுதல் வேண்டும்." (PCTE-சரத்து (481),(420))

பரத்தமை விடயத்தில் எப்போதும் பெண்ணே தண்டிக்கப்பட்டு வரும் இயல்பை நாம் காணலாம்.

"பணம் கொடுத்து பாலியல் புணர்ச்சிக்கு அழைப்பதற்கு ஆண்கள் தயாராக இருக்கும் போது பெண் மட்டும் ஏன் தண்டிக்கப்படுகிறாள்?" என வினவுகிறார் பெண்ணிலைவாதிகளில் ஒருவரான சுனிலா அபேசேகர.

இக்கேள்வியின் நியாயத்தன்மை சரியானதே. லஞ்சக் குற்றச்சாட்டின் போதெல்லாம் லஞ்சம் வாங்கியவரை மட்டுமல்லாது லஞ்சம் வழங்கியவரையும் தண்டிக்கும் இந்த சட்டங்கள் பரத்தமை விடயத்தில் மாத்திரம் பரத்தமையை தூண்டும் ஆண்களைத் தப்ப விட்டுவிட்டு பெண்களை மட்டும் தண்டிப்பது மிக மோசமான நடைமுறை.

மேலும் 'விபச்சாரி' அல்லது 'வேசி' என்று இறுதியில் தூற்றப்படும் செய்கை கூட பெண்களுக்கு எதிராக மாத்திரமே பாவிக்கப்படுகிறது. இவ்வகையான பதப் பிரயோகம் கூட ஆண் மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் பதப் பிரயோகமே. அப்பதங்களை பெண்கள் மீது மட்டுமே பிரயோகிக்க ஆணாதிக்கம் முயல்கிறது.

ஆண்கள் பல பெண்களுடன் பாலியலுறவில் ஈடுபட்டால் அவனை "விபச்சாரன்" அல்லது "பரத்தன்" போன்ற பதங்களைப் பாவிப்பதற்கான தமிழ்ச் சொல் வழக்காடல் இன்னமும் இல்லை. பெண்ணே தொடர்ந்தும் ஏசப்படலுக்குள்ளாகிறாள்.

இப்படி "தமிழீழ ஒறுப்புச் சட்டம்" தயாரிக்கப்படும் போது பெண்கள் தொடர்பான விடயங்களில் அசட்டையாகவே இருந்துள்ளனர் என ஒடுக்கப்படும் பெண்ணினம் குற்றம் சுமத்துவதை இலகுவாக மறுதலிக்க முடியாதே.

முழுமையாக அவை விமர்சனத்துக்கும் திருத்தங்களுக்கும் உள்ளாக வேண்டியதன் அவசியத்தை சம்பந்தப்பட்டவர்கள் உணர்வார்களாயின் ஆரோக்கியமான நகர்வுக்கு அவை சிறிதளவாவது வழிசமைக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தோல்வியுற்ற புரட்சி?

"நாங்கள் இனவாதிகளல்லர். சிங்கள மக்களின் உரிமைகளை பறிப்பவர்களும் அல்லர். நாங்கள் எங்கள் போராட்டத்தில் சிங்கள மக்களையும் நினைவு கூருகிறோம். அவர்களின் நியாயமான போராட்டத்திற்கு எங்களது ஒத்துழைப்பையும் வழங்குவோம். அதேபோல எங்களது விடுதலைப் போராட்டத்துக்கு சிங்கள மக்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இன்னொருவனது சுதந்திரத்தில் அக்கறை கொள்ளாத ஒருவன் தனது சுதந்திரத்தையே குழிதோண்டிப் புதைக்கிறான்.

எங்களுக்கு இன்று ஏற்பட்ட நிலை இன்னொரு நாள் ஸ்ரீலங்கா மக்களுக்கும் ஏற்படும். அன்றைக்கு ஆனையிறவு வதை முகாம் ஹம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்லப்படும். குருநகர் வதைமுகாம் குருநாகலுக்கு கொண்டு செல்லப்படும். இன்றைய தமிழ் இளைஞர்களுக்குப் பதிலாக அன்றைக்கு சிங்கள இளைஞர்கள் வதைபுரியப்படுவார்கள்.

*- குட்டிமணி (1982ல் நீதிமன்றத்தில்)*

குட்டிமணி சொன்னது 1987 - 1989 காலப்பகுதியில் நடந்தேறியது. தமிழ் இளைஞர்களை குரூரமாக அழித்தொடுக்கிய அதே ஆளும் வர்க்கம் சிங்கள இளைஞர்களையும் அழித்தொழிக்கத் தவறவில்லை. அவ்விளைஞர்களது முதல் அனுபவமல்ல அது. இரண்டாவது அனுபவமே அது. 1971 ஏப்ரலில் அவ்விளைஞர்கள் முதற் தடவையாக அடக்கப்பட்டார்கள். ஆம். சரியாக 25 வருடங்களுக்கு முன் அது நடந்தது. அதை மீளப் பார்ப்போம்.

### பாரம்பரிய இடதுசாரிகளின் வீழ்ச்சி

ஒரு குறிப்பிட்ட காலம் வரை இலங்கையின் வரலாற்றில் முற்போக்கு பாத்திரம் வகித்து வந்த இடதுசாரிகட்சிகள் ஒரு காலகட்டத்தின் பின் தத்துவார்த்த மற்றும் நடைமுறை காரணிகளாலும் துண்டு துண்டாக பிளவுபட்டன. ஒரு கட்டத்தில் இவை ஆளும் வர்க்கத்தோடும் கூட்டுச் சேர்ந்தன. மக்களை ஒடுக்குவதிலும் துணை போயின. பாராளுமன்றத்தை பிரச்சார மேடையாகப் பயன்படுத்துவதாகக் கூறிச்சென்ற அவை பாராளுமன்றத்தையே தமது இருப்பாக்கிக் கொண்டன. பாராளுமன்ற இருப்புக்காக பாராளுமன்ற வாதம் சார்ந்த போலி வாக்குறுதிகளை அழிப்பவர்களாகவும் பெரும்பான்மை வாக்குகளை கைப்பற்றுவதற்காக முதலாளித்துவ ஜனநாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவும் ஆனார்கள்.

1960ல் இறுதிக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்டிருந்த வேலையில்லாத் திண்டாட்டப் பெருக்கம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, விவசாயிகளின் வருமானத் தேக்கம், சம்பளக் குறைப்பு போன்ற உடனடிக் காரணங்கள் அரசை எதிர்த்து நிற்கின்ற அணியினை உருவாக்கியது. இவ்வணிக்கு ஜேவிபி தலைமை கொடுத்தது.

### ஜேவிபியின் உருவாக்கம்

சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து 1966ல் ரோஹண விஜேவீர உள்ளிட்ட ஒரு குழுவினர் வெளியேற்றப்பட்டனர். ஏற்கெனவே கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கம்யூனிஸ்ட் மாணவர் பிரிவை கட்டியெழுப்பி அதனை தலைமை தாங்கி நடத்தி வந்த விஜேவீர அம் மாணவர் பிரிவில் அங்கம் வகித்த இளைஞர்களைக்கொண்டு கட்சிக்கும் தெரியாமல் இரகசிய அரசியல் வேலையில் ஈடுபட்டார். குறிப்பாக அரசியல் கலந்துரையாடல் நடத்தச் சென்ற இடங்களில் பண்ணைகளை அமைத்தார். பின்னொரு காலத்தில் ஆயுதங்களை களஞ்சியப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. இந்நடவடிக்கையை கட்சி தலைமை அறிந்தது. இதனால் விஜேவீரவுக்கும் சண்முகதாசனுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டு இறுதியில் விஜேவீரவின் அரசியல் விஜயம் தடைசெய்யப்பட்டதுடன் முழுநேர ஊழியத்திலிருந்தும் விலக்கப்பட்டார். இறுதியில் கட்சியின் அனுமதியின்றி 1966ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி டட்லி - செல்வா உடன்படிக்கைக்கு எதிராக ஊர்வலத்தில் கலந்து கொண்டதன் காரணமாக கட்சியில் இருந்து விஜேவீர விலக்கப்பட்டார்.

விலக்கப்பட்ட விஜேவீர தன்னுடன் கட்சியிலிருந்த நண்பர்கள் சிலரையும் இணைத்துக் கொண்டு 1967ல் ஜேவிபியை (மக்கள் விடுதலை முன்னணி) உருவாக்கினார். ஏனைய இடதுசாரி கட்சிகளோடு ஒப்பிடும் போது ஆயுதப்போராட்டத்தை முற்றாக ஜேவிபி மட்டுமே அங்கீகரித்தது. ஆயுதப் போராட்டம் இன்றி தமது இலக்கை அடைய முடியாது என்பதை தமது 'அரசியல் வகுப்புக்கள் 5' மூலமாக இளைஞர்களுக்கு ஊட்டியது. அரசியல் வகுப்பை முடித்த இளைஞர்களுக்கு முதற்கட்டமாக உடற்பயிற்சி வழங்கப்பட்டது. 1969 காலப்பகுதியில் ஆயுதச் சேகரிப்பில் ஈடுபடும்படி முன்னணி உறுப்பினர்களுக்கு வலியுறுத்தப்பட்டது.

இதே காலப்பகுதியில் ஏனைய பாராளுமன்ற இடதுசாரிகட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி போன்றவை ஜேவிபியை காட்டிக் கொடுத்தன. குறிப்பாக 'அத்த' பத்திரிகைக் கூடாக ஜேவிபியின் இரகசிய செயற்பாடுகள் அம்பலப்படுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து அப்போதைய டட்லி அரசாங்கம் "சேகுவரா பியுரோ" (Cheguera Bureau) எனும் பெயரில் ஜேவிபியை கண்காணிப்பதற்கான விசேட பிரிவொன்றை உருவாக்கியது. இப்பிரிவின் செயற்பாடுகள் காரணமாக பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இடப்பட்டார்கள். தலைமைறைவாக இருந்த விஜேவீரவும் 1970 மே மாதத்தில் கைது செய்யப்பட்டார். அதே மாதம் நடந்த பொதுத் தேர்தலினால் ஆட்சி மாற்றம் கண்டது.

### அரசு சுதாகரித்தது

ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது. இவ் ஐக்கிய முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி கூட்டுச் சேர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து ஜூலையில் விஜேவீர விடுதலை செய்யப்பட்டார். விஜேவீரவின் விடுதலையால் ஜேவிபியின் நடவடிக்கைகள் விரிவடைந்தன. இரகசிய வேலைகளுக்கு முன்னுரிமை அளித்த அதேவேளை பகிரங்க அரசியலில் ஈடுபடுவதாக கட்சி முடிவெடுத்தது. கட்சியின் அரசியல் கூட்டங்கள் நாடு முழுவதும் நடத்தப்பட்டபோது அதில் எதிர்பார்த்ததற்கும் மேலாக மக்கள் பெருந்தொகையாகக் கலந்து கொண்டார்கள். ஜேவிபியின் வளர்ச்சி குறித்து ஆளும் கட்சி கலக்கமுற்றது. அன்றைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த இரத்தினவேல் "சேகுவரா இயக்கம் அரசின் பிரதான எதிரியாக தலைதூக்கியுள்ளது. அதனை ஈவிரக்கமின்றி கலைத்து அழித்தொழிக்க வேண்டும். அதற்கேதுவாக சட்டதிட்டங்கள் கொண்டு வருவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்" என 1970 ஓகஸ்ட்டில் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து மரணப்பரிசோதனையின்றி பிணங்களை எரிப்பதற்கான சட்டத் திருத்தம் உடனடியாகக் கொண்டு வரப்பட்டது. பாரிய அடக்கு முறைக்கான ஆயத்தங்களை அரசு செய்து வருவதை இனம் கண்ட ஜேவிபி ஆயுத சேகரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்தியது. வெடிகுண்டு தயாரிப்புக்கான தீர்மானத்தையும் அரசியற் குழு எடுத்தது. வெடிகுண்டு தயாரிக்கப்பட்டு நாட்டில் ஏனைய பகுதிகளுக்கும் ஜேவிபி விநியோகித்தது.

### புரட்சியும் எதிர்ப்புரட்சியும்

1971 ஜனவரியில் விஜேவீர தொடர்ச்சியாக நாடுபூராவுமுள்ள மாவட்ட கமிட்டி முழுநேர கூட்டத்தில் புரட்சியும் எதிர் புரட்சியும் ஒன்றையொன்று எதிர்நோக்கியுள்ள தருணம் என்றும் மார்ச் மாத இறுதியில் ஆயுதபாணிகளாக்கும் வேலைகளை பூரணப்படுத்தும் படியும் கூறினார். தான் அடுத்ததாக அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றி பேசவருவதாகவும் கூறிச் சென்றார்.

மார்ச் 13ம் திகதி விஜேவீர கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். 1971 பெப், 21ம்திகதி ஹைட்பார்க்கில் நடத்தப்பட்ட பகிரங்க கூட்டத்தில் அரசாங்கத்

**என்.சரவணன்**

துக்கு எதிரான ஆயுதப்போரெச்சரிக்கை விடப்பட்டது? 1971 மார்ச் 16ம் திகதி நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். சிறையில் இருந்து அடக்குமுறைக்கு முகம் கொடுப்பது கஷ்டமாக இருந்ததால் தாக்குதலுக்கான தீர்மானத்தை எடுக்கும்படி தகவல் அனுப்பப்பட்டது. அதன்படி மத்திய குழு (அப்போது முரண்பட்டு இருந்த தரப்பும் கூட்டாக) ஏப்ரல் 5ம்திகதி இரவு 11.30க்கு நாடுமுழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களை தாக்கி அழிக்கும் தீர்மானத்தை எடுத்தன. இத்தீர்மானத்திற்கு முன் ஏப். 5ம்திகதி தாக்குவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானம் பின்னர் மாற்றப்பட்ட போதும் அத்தகவல் மொனறாகலைக்கு போய் சேரவில்லை. எனவேதான் ஏப். 5ம்திகதி 5.20க்கு மொனராகலை - வெல்லவாய பொலிஸ் நிலையம் முதலில் தாக்கப்பட்டது. இது ஒரே நேரத்தில் நாடு பூராவுமுள்ள பொலிஸ் நிலையங்களை தாக்கும் திட்டத்தை குழப்பியது. இதற்கிடையில் தாக்குதல் பற்றி அறிந்த பாதுகாப்பு படையினர் உஷாருற்றனர். ஏப். 5ம் திகதி 74 பொலிஸ் நிலையங்கள் கிளர்ச்சியாளர்களால் தாக்கப்பட்டன. பல பொலிஸ் நிலையங்களை கைவிட்டு விட்டு பொலிசார் பின்வாங்கினர். இக்கிளர்ச்சியை எதிர் கொள்ள பலமில்லாத நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் உலக நாடுகளிடம் உதவிகோரியது.



"ரோஹண விஜேவீர தலைமையில் 1971 இல் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை ஐக்கிய முன்னணி அரசு 20,000 இளைஞர்களை கொன்றொழித்து அடக்கியது. மீளவும் 1987– 1989இல் முன்னெடுத்த ஆயுதப் போராட்டத்தை ஐ.தே.க அரசு 60,000 இளைஞர்களை கொன்றொழித்து அடக்கியது."

### அடக்கு முறை

இவ்வேண்டுகோளைத் தொடர்ந்து சிங்கப்பூர் விமான நிலையத்தில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய படையினர் பெருமளவு ஆயுதங்களையும் போர்க்கருவிகளையும் அனுப்பியது. 18 யுத்தபீரங்கிகளையும் 6 ஹெலிகப்டர்களையும் அமெரிக்கா வழங்கியது. எகிப்தும் பெருந்தொகையான ஆயுதங்களை வழங்கியது. இந்தியா விமான ஓட்டிகள் உள்ளிட்ட ஏழு விமானங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் 159 கூர்க்கா படைகளையும் அனுப்பியது. சோவியத் யூனியன் அனடோவ் எனப்படும் இராட்சத விமானங்களையும் மிக் 15 ரக விமானமொன்றையும் இரு ஹெலிகொப்டர்களையும் சிறந்த விமான ஓட்டிகளையும் அனுப்பியது. எந்த வித ஈவிரக்கமுமின்றி 15,000 தொடக்கம் 20,000 வரையிலான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 20,000க்கும் மேற்பட்டோர் சிறைச்சாலைக்கும் வதைமுகாம்களுக்கும் அனுப்பப்பட்டனர். கிளர்ச்சி அடக்கப்பட்டது. கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் மீதான விசாரணையை 1972 ஜூனிலிருந்து 1974 டிசம்பர் வரை விசேட ஆணைக்குழு செய்தது. விசாரணையின் முடிவில் விஜேவீர உள்ளிட்ட பலர் சிறைத்தண்டனை பெற்றனர்.

### மீளுருவாக்கம்

தண்டனை அனுபவித்து வந்தவர்களில் மூன்று பிரிவினர் இருந்தனர். அமைப்பைக் காட்டிக் கொடுத்து விட்டு அரசியலில் இருந்து முற்றாக வெளியேறிவர்கள், அடுத்த தரப்பினர் முன் வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு சரியான பதில் கிடைக்காத நிலையில் மாற்று அரசியல் ஸ்தாபனத்தை கட்டியெழுப்புவதாகக் கூறி வெளியேறியவர்கள். எஞ்சிய மிகச் சொற்பமான சிலர் இன்னமும் தத்துவார்த்த கருத்தாடலில் ஈடுபட்டுவருகிறார்கள். மூன்றாவது தரப்பினர் ஜேவிபின் அரசியல் பூரணமாகத் தவறற்றது என்ற கருத்துடையோரும், ஒரு சில விடயங்களை திருத்திக்கொண்டு முன்செல்லலாம் எனும் கருத்துடையோரும் அடங்கிய குழு. இக்குழுவே விஜேவீர தலைமையில் ஜேவிபியை மீளக் கட்டியெழுப்பியது. ஜேவிபி சிறைக்குள்ளேயே மீளுருவாக்கம் பெற்றது.

1977முற்பகுதியில் பொதுத்தேர்தல் நெருங்கியதால் அவசரகால சட்டம் நீக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜேவிபியினர் பலர் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலை அடைந்ததுமே ஜேவிபி முதற் தடவையாக சட்ட பூர்வமாக அரசியல் ஸ்தாபனமாக இயங்கத் தொடங்கியது. பதிவு செய்யப்படாததன் காரணமாக 1977ல் பொதுத்தேர்தலில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட்டது.

1979 உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசியற் கட்சியாக பதிவு செய்ய முயற்சித்த போதும் அது நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அத்தேர்தலிலும் சுயேட்சையாகப் போட்டியிட்டது. 1981 மாவட்ட சபைத் தேர்தலிலும், 1982 ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது ஜேவிபி அரசியற் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அத்தேர்தலில் மூன்றாவது பெரும்பான்மை வாக்குகளைப் பெற்ற கட்சியாக ஜேவிபி திகழ்ந்தது. ஜேவிபியின் இவ்வளர்ச்சியானது ஆளும் ஐதேகவை அச்சுறுத்திய விடயமாக அமைந்தது. ஆனாலும் இத்தேர்தல்களின் மூலம் ஜேவிபியின் பலத்தின் அதிகரிப்பைக் காணமுடிந்ததே ஒழிய பிரதிநிதித்துவம் பெருமளவுக்கு பெரிய வளர்ச்சி கண்டிருக்கவில்லை.

### தடையும் தலைமறைவும்

1983 மேதின கூட்டத்தில் இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கியத்தை வலியுறுத்தி விஜேவீர உரையாற்றியிருந்தார். 1983 ஜூலைக் கலவரத்தை தூண்டி தலைமையேற்று நடத்திய அன்றைய ஆளும் ஐ.தே.கட்சி அக்கலவரத்தின் பழியை ஜேவிபி மீதும் ஏனைய இடதுசாரி கட்சிமீதும் சுமத்தியது. 1983ஜூலை 30ம்திகதி ஜேவிபி, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜகட்சி ஆகிய மூன்றையும் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் தடை செய்தது. இத்தடை காரணமாக ஜேவிபியை தலைமறைவு அரசியலுக்கு தள்ளியது. இந்நியாயமற்ற தடையை நீக்கும்படி ஜனாதிபதி உட்பட சர்வதேச ஸ்தாபனங்கள் பலவற்றுக்கு வேண்டுதல் விடுக்கப்பட்டபோதும் அது சாத்தியமாகாது போனது. கிடைத்த தலைமறைவு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆயுதப்பயிற்சி, துப்பாக்கிகள், குண்டுகள் தயாரித்தல், ஆயுத சேகரிப்பு என்பவற்றில் ஈடுபட்டது. அரசியல் வகுப்புகளையும் தொடர்ந்து நடந்தியது. வடக்கு கிழக்கு பிரச்சினை காரணமாக இராணுவத்தை விஸ்தரிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டபோது அத்தருணத்தைப் பயன்படுத்தி அமைப்பின் உறுப்பினர்களை இராணுவத்திற்குள் ஊடுருவ விட்டது. இதற்கூடாக இராணுவப் பயிற்சியையே ஜேவிபி பிரதான நோக்காக கொண்டிருந்தது. ஆயுத சேகரிப்புக்காக சிலபடைமுகாம் மீதும் பொலிசார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. 1987ல் இலங்கை - இந்திய உடன்படிக்கையும் அதனைத் தொடர்ந்து வந்த இந்திய அமைதி காக்கும் படையையும் ஜேவிபி வன்மையாக எதிர்த்தது. அதனை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் போக்காகவே கருதியது. தமது இராணுவ நடவடிக்கைக்காக அன்று தேசபக்த மக்கள் இயக்கம் DJVP என்ற ஒன்றை ஜேவிபி உருவாக்கியது. அதில் வேறு சில அரசியல் ஸ்தாபனங்களும் இணைந்திருந்தன. DJVPயின் பேரில் ஆயுத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததை தக்க சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கம் (ஜே.ஆர்., ஜேஆரைத் தொடர்ந்து பிரேமதாச) DJVP பேரில் அரசியல் படுகொலைகளைப் புரிந்தது. இப்படுகொலைகள் பற்றிய உண்மைகள் தற்போது நடத்தப்பட்டு வரும் விசாரணைக் கமிஷன்களின் மூலம் அம்பலமாகி வருகின்றன.

### மீண்டும் வன்முறை

1987 - 1989 காலப்பகுதியில் ஜேவிபி பயங்கரவாதம் எனும் பேரில் ஏறத்தாழ ஒருலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் டயர்களுக்கும், ஆறுகளுக்கும், புதைகுழிகளுக்கும் பலியாகினர். (அரசாங்கத் தகவல்களின் படி 60,000 இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர் என்றே கூறப்படுகிறது.) பலர் வதை புரியப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். 1989இல் விஜேவீரவும் பிடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். மோசமான முறையில் ஒடுக்கப்பட்ட ஜேவிபி மீள எழப்போவதில்லை என பலர் எதிர்பார்த்தனர். ஆனால், 1994ல் பலர் விடுதலையாகி வந்ததும் கட்சி புனரமைக்கப்பட்டது. மீண்டும் பகிரங்க அரசியலில் வேலைகளைத் தொடங்கினர்.

### மீண்டும் மீளுருவாக்கம்

நாடெங்கிலும் சந்திரிகா அலையும் பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களும் நடந்து கொண்டிருந்தன. ஜேவிபியும் இலங்கை முற்போக்கு முன்னணியும் இணைந்து தேச மீட்பு முன்னணியை கட்டியெழுப்பின. இலங்கை முற்போக்கு முன்னியின் பேரில் தேர்தலிலும் இறங்கியது. ஒரு உறுப்பினர் பதவியையும் வென்றெடுத்தது. 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலிலும் தமது வேட்பாளரை நிறுத்தியது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்காகவே தாம் அத்தேர்தலில் போட்டியிடுவதாகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையையும் நீக்குவதாக சந்திரிகா வாக்குறுதி அளித்தால் தாம் போட்டியில் இருந்து விலகிக்கொள்வதாகவும் தெரிவித்தது. சந்திரிகா தாம் பதவிக்கு வந்தால் 1995ம் ஆண்டு ஜூன் 15ம் திகதிக்கு முன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாக வாக்குறுதி அளித்தார். இதனால் ஜேவிபியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பதி போட்டியில் இருந்து விலகிக்கொண்டார்.

### இதிலிருந்து எங்கே...?

ஜேவிபி தென்னிலங்கையில் மீண்டும் மீளுருவாக்கமடைந்து வருகிறது. தேசிய இனப்பிரச்சினை தவிர்ந்த ஏனைய போராட்டங்களுக்கெல்லாம் கூடிய பட்ச அளவு தலைமை கொடுத்து வருவதை தற்போது காணமுடிகிறது. ஆனால், தன்னை நோக்கிய மீளாய்வையோ, சுயவிமர்சனத்தையோ செய்வதில் மிகமிக பலவீனமான நிலையிலேயே உள்ளது. தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக பேரினவாத கருத்தியலையே சார்ந்திருக்கிறது. புதிய மார்க்ஸிய கருத்தாடலில் ஈடுபடுவதிலும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது. ஜேவிபி பற்றிய சுயவிமர்சனங்களை முன்வைப்பவர்களை எதிர்ப் புரட்சிகர சக்திகளாகவும் எதிரிகளாகவும், முதலாளித்துவ எடுபிடிகளாகவுமே அடையாளம் காண முற்படுகிறது. இந்நிலை மேலும் நீடிக்குமாக இருந்தால் மீண்டும் லட்சக் கணக்கான இளைஞர்களின் தியாகம் எந்த விதமான அர்த்தமுமற்று விழலுக்கிறைத்த நீராகி விடும்!

www.tamilarangam.net



# ஏப்.5-1971-1996 ஜேவிபி கிளர்ச்சி 25வது வருட நினைவு!

## ஐக்கியப்பட்ட புரட்சியே பிரச்சினையைத் தீர்க்கும்!



...ஏற்றத்தாழ்வுகளை
...க் காட்டுவதிலும்,
... விரிவாக விளக்கு
... வழிமுறைகளை
...பி மிகவும் திறம்ப
...சொல்லப்படுகிறது.
...ரவின் எழுத்துகள்
...வாகவும், பேச்சுக்
...ண்டுவனவாகவும்
...ம் இருந்தும் 1971,
...காலகட்டத்திலுமே
...டது. இந்தத் தோல்
...ன என்று நினைக்

...ப்பே பிழையானது
...றோம். எனவே
...டிய ஒரு கட்சியை
... அதனூடாக சமவுட
... கட்டியெழுப்புதல்
...தற்கு முன் நிபந்த
...கம் ஆட்சியதிகா
.... இதற்காக சிங்கள
... என்ற வேறுபாடில்
...ணிதிரள வேண்டும்.

...ான ஒரு மார்க்சிய
...ில்லை. எனவே
... வழியைக் காட்டி
...ணிதிரட்டுவதற்கான
...ம்.

...ரோஹண விஜேவீர
...ாற்... கப்பட்டது.
... வேலைகளை நாடு
...கள் பெருவாரியாக
...ாதுதான் முதலாளித்
...யாக இனங்காண்கி
...யமாகவே அணிதி
...கன்று கட்சியொன்று
...து தமக்காபத்தானது
...பின் உருவாக்கத்தை
...து இக்கட்சி முதலா
...ற்கடித்து அதிகாரத்
...ன்பதை அது உணர்ந்
...களை அடக்குவதற்
...த்து விடப்படுகிறது.

...அடக்கு முறைக்கான
...கொண்டிருந்தது. எங்
...றும் சீ.ஐ.ஏ. கும்பல்
...து. தொடர்ச்சியாக
...கினோம். குறிப்பாக
...ரசியல் வகுப்புக்கள்
...புகுந்து அவர்களை
...கின்றனர். 1970 மே
...அரசாங்கம் தோழர்
...கைது செய்தது. அதே
...மாற்றமும் ஏற்படுகி
...தால்வியுற்று ஐக்கிய
...சிக்கமருகிறது. அக்
...வ விட ஐக்கிய முன்
...களை ஓரளவு வழங்
...ற நம்பிக்கை இருந்த
...ன்னணிக்கு ஆதரவு
...ருந்தோம். எனவே
...த்துழைப்புடனேயே
...கமர்ந்தது. ஆனால்,
...க்கமர்ந்ததன் பின்
... அரசியல் வேலை
...சிகள் தொடர்ந்தது.
...க்குவதற்காக ஐ.தே.
...ந்த 'சேகுவரா பியு

ரோ' ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் விரிவாக்கப்பட்டது. அடக்கு முறைகள் தொடர்ந்தன. நாங்கள் அதுவரை ஆயுதரீதியான அரசியல் வேலைகளை முன்னெடுத்திருக்கவில்லை. எங்களிடம் ஆயுதங்களும் இருக்கவில்லை. அது புற்றி உடனடித் தேவைகளும் இருக்வில்லை.

1970 ஒகஸ்டில் நாம் பகிரங்க அரசியலுக்கு வருகிறோம். ஒகஸ்ட் 10ம் திகதி எமது முதல் பகிரங்கக் கூட்டத்தை 'ஹைட் பார்க்'கில் நடத்தினோம். இரண்டே நாட்களில் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ராஜ்குமார் இரத்தினவேல் அறிக்கையொன்றை வெளியிட்டார். அவ்வறிக்கை 13ம் திகதி பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதில் "நாட்டில் வேகமாக பரவிவருகின்ற சேகுவரா இயக்கமானது அரசாங்கத்தின் பிரதான எதிரி. அதனை துரத்திவோரோடு அழிக்க வேண்டும்." என அதில் காணப்பட்டது. அப்படியான ஒரு அறிவித்தல் விடுக்கக்கூடியளவிற்கான சூழலொன்று அன்று இருக்கவில்லை. அரசாங்கத்துக்கெதிரான எதையும் நாங்கள் செய்திருக்கவில்லை. (அரசாங்கத்தின் கொள்கைகளுக்கெதிராக நாங்கள் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தோம்.) எங்களது கொள்கைகளை மக்களுக்கு முன்வைத்திருந்தோம்.

அடக்குமுறைகள் தொடர்ந்தன. 1971ல் இவ்வடக்குமுறை உச்சக்கட்டத்தை எட்டிக்கொண்டிருந்தது. 1971ல் மார்ச் 6ம்திகதி யன்று ஒரு சம்பவம் நடந்தது. அமெரிக்கா உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னால் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்தது. தர்ம சேகர எனும் இடதுசாரி வேடம் பூண்ட ஒரு நபரின் கும்பலே அதைச் செய்திருந்தது. இக்கும்பலுக்கும் அரசாங்கத்துக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது.

இதைப்பயன்படுத்தி தனது அடக்குமுறையை புரிவதற்காக அரசு அவசரகாலச் சட்டத்தை கொண்டு வந்தது. எமது உறுப்பினர்களை கைது செய்வது அதிகரித்தது. எனவே எங்களை அடக்குவதற்கு அரசாங்கத்துக்கு உதவி செய்த கும்பலாக தர்மசேனவின் கும்பல் இனம் காணப்பட்டது. இது அரசாங்கத்தின் திட்டமாகவே இருக்கலாம் என நாங்கள் கருதுகிறோம். ஏனெனில் இதுவரை அரசாங்கம் தர்மசேனவை கைது செய்யவில்லை.

அதன் பின்னர் 1971 மார்ச் 13ம்திகதியன்று தோழர் ரோஹண விஜேவீரவையும் இன்னும் சில தோழர்களையும் பொலிசார் கைது செய்தனர். யாழ்ப்பாண சிறையில் தடுத்து வைத்திருந்தனர். அது வரை நாங்கள் ஆயுதபாணிகளாக இருக்கவில்லை. அதற்கிடையில் அரசாங்கம் மார்ச் 16இல் ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுகிறது. அச்சட்டத்தின் படி மரணபரிசோதனையின்றி ஒரு பிணத்தை எரிக்க/ புதைக்க முடியும். அரசாங்கம் கூடிய விரைவில் கட்சியின் மீது பேரழிவை ஏற்படுத்தவிருக்கிறது என்பதனை நாங்கள் உணர்ந்தோம். அப்படியான அநாதரவான பிணம் இல்லாத சந்தர்ப்பத்தில் அரசாங்கம் இவ்வாறான சட்டமொன்றை கொண்டு வந்துள்ளது. அதன் நோக்கம் தான் கொன்று போடப்போகின்றவர்களது சடலங்களை எவரது அனுமதியின்றி அழித்து விடுவதற்காகவே என்பதை உணர முடிந்தது. நிராயுதபாணிகளான எங்கள் மீது இப்படியான படுகொலைகளை செய்யவிருப்பதால் அப்படி நாங்கள் இறப்பதைவிட அதே அடக்குமுறைக்கு எதிராக போராடி மரணிப்பது மேல் என தோன்றியது. அதன் விளைவாகவே ஏப்ரல் கிளர்ச்சி உருவானது.

தோழர் விஜேவீர கூட எல்லோரையும் பின் வாங்கும்படியும் அடக்குமுறையிலிருந்து காத்துக்கொள்ளுங்கள் என்றும் கூறியிருந்தார்.

ஆனால், அன்று கட்சியிருந்த நிலை காரணமாகவும் அடக்குமுறையின் அதிகரிப்பினாலும் இன்னமும் தப்பமுடியாது என்கிற காரணத்தால் தற்காப்புக்கான போராட்டத்தை நடத்த வேண்டியேற்பட்டது. எனவே 71 கிளர்ச்சியானது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டமே அல்ல. அது முதலாளித்துவ அடக்கு முறையிலிருந்து தம்மை பாதுகாப்பதற்காக அடக்குமுறைக்கெதிராக செய்யப்பட்ட போராட்டமே.

***அரசின் பாசிசத்துக்குப் பதிலாக பாசிச வழிமுறையையே ஜேவிபி கைக்கொண்டதும், ஜேவிபி மக்களிடமிருந்து அந்நியப்படக் காரணமல்லவா?***

எங்களிடம் ஒரு போதும் பாஸிசப் போக்குகள் இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. அந்த நேரத்தில் ஆயுதப் படையினரில் எங்களுக்கு குறிப்பிடத்தக்களவு ஆதரவு இருந்தது. அதை இந்த அரசு இனங் கண்டது. எனவே இராணுவத்தின் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்தது. அதன் விளைவாகவே எங்களுடன் தொடர்புற்றிருந்த மற்றும் ஆதரவளித்த இராணுவத்தினரையும் பொலிஸ் அதிகாரிகளையும் கொல்லத் தொடங்கியது. தற்போது நடத்தப்பட்டு வரும் பட்டலந்த விசாரணைக் கமிஷனின் விசாரணையிலும் கூட அவ்வகையான சம்பவங்கள் நிரூபணமாகியிருக்கிறது. அந்த நேரத்தில் 'இராணுவத்திலிருந்து அனைவரும் விலகுங்கள் விலகாதவர்கட்கு மரணதண்டனை அளிக்கப்படும் என ஒட்டப்பட்ட போஸ்டர் கூட நாங்கள் ஒட்டியதல்ல. அது இந்த முதலாளித்துவ அரசாங்கத்தின் திட்டமிட்ட சதியென்றே நாங்கள் நம்புகிறோம். இது மக்கள் விரோத அரசாங்கம் இந்த அரசாங்கத்தை இராணுவத்தினர் பாதுகாத்தார்கள் என்று தான் கூறியிருந்தோம். அரசாங்கத்துக்கு இராணுவத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாது போன சந்தர்ப்பத்திலேயே இராணுவத்திலுள்ளவர்களையும் உத்தியோகபூர்வமற்ற ஆயுதக்குழுக்களையும் பயன்படுத்தி இராணுவத்திலுள்ளவர்களையே கொன்றொழித்தது.

**ஆனால் ஜேவிபியினால் கொல்லப்பட்ட பொலிஸ் ஆயுதப்படையினரின் புள்ளிவிபரங்கள் எல்லாம் வெளிவந்திருந்ததே.**

ஓமோம்,எத்தனை புள்ளிவிரபரங்களையும் காட்டலாமே. இக்காரியங்கள் உத்தியோகபூர்வமற்ற ஆயுதக்குழுக்களாலும் செய்யப்பட்டிருக்கலாம். அந்தகாலப்பகுதியில் RDF, High Section, CSUபோன்ற எத்தனையோ ஆயுதக்குழுக்கள் இருந்தன. அன்று இராணுவத்தினருக்கே தெரியாது; நள்ளிரவில் தம்மைச் சுட்டவர்கள் தமது இராணுவத்தைச் சேர்ந்தவர்களே என்பது. தடைசெய்யப்பட்டிருந்த நிலையில் எங்களாலும் உண்மையை நிரூபிக்கக்கூடிய சூழலும் அன்று இருக்கவில்லை.

***முதலாளித்துவ பாராளுமன்றங்களே முதலாளித்துவ வர்க்கத்துக்கு சார்பான சட்டமியற்றும் வேலைகளையே எப்போதும் மேற்கொள்ளும். ஆனால் புரட்சி என்பதோ ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்திடமிருந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும். இவ்வடிப்படையில் ஜேவிபி ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் பங்குபற்றியுள்ளது. இது இம்முதலாளித்துவ நிறுவனங்களில் இருப்புக்கு துணை போவதாகாதா?***

ஆம், இந்த முதலாளித்துவ அரசாங்கம் தனது இருப்புக்கு பயன்படுத்தி வரும் ஒன்று தான் பாராளுமன்றம். ஆனால், பாராளுமன்றத்தின் மீது பெரும்பாலான மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அதனால் உள்ள நன்மை தீமை என்னவென்பதனைக் கூட அவர்கள் அறிய வழியில்லை. அதற்கான காரணம் பாராளுமன்றத்தில் நடப்பதைப்பற்றி தெளிவுபடுத்த இந்த நிறுவனத்தில் உள்ள எவரும் முன்வருவதில்லை. பாராளுமன்றம் இந்த இயல்பைத்தான் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கின்ற புரட்சிகர சக்தியொன்று இந்நிலைமைக் கேற்ப தங்கள் செயற்பாடுகளையும் செய்வது அவசியம். லெனின் கூட சொல்கிறார். புரட்சியாளர்கள் முதலாளித்துவ பாராளுமன்றத்தைப் பிரச்சார மேடையாக பயன்படுத்த வேண்டிவரும் என்று.

இன்று எங்களுக்கென்று ஒரு உறுப்பினர் இருக்கின்றார். இவரால் முதலாளித்துவ பாராளுமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு அம்பலப்படுத்த முடிகிறது. அதனது மக்கள் விரோத செயற்பாட்டிற்கெதிராக வாக்களிக்க முடிகிறது. தற்போது தொடர்ச்சியாக பாராளுமன்றத்தில் அவசரகால சட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதற்கெதிராக தொடர்ச்சியாக எதிர்த்து வாக்களித்து வரும் ஒரே ஒரு எம்.பி. தோழர் நிஹால் கலப்பதி மட்டுமே. இன்று தமிழ் மக்களை கொல்வதற்காக அனுமதியளிக்கின்ற இச்சட்டங்களை ஆதரித்து தமிழ் எம்.பிக்கள் அனைவருமே வாக்களிக்கிறார்கள். வெளியில் வந்து தமிழ் மக்களின் வீரர்களாகின்றார்கள்.

தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்கு ஆயுதம் வாங்குவதற்கான பாதுகாப்பு நிதியத்தை தோற்றுவிக்க பிரேரணை கொண்டு வரப்பட்ட போது கூட தமிழ் எம். பிக்கள் உட்பட எல்லோருமே ஆதரவளித்தார்கள். நிஹால் கலப்பதி மட்டுமே அதனை எதிர்த்திருந்தார்.

இப்படிச் சொல்வோமே. சாக்கடைக் குட்டை உள்ளது. அதைச் சுத்தம் செய்யவேண்டுமென்றால் அதில் இறங்காமல் சுத்தம் செய்ய முடியாது. நாங்கள் அந்த சாக்கடைக்குள் இறங்கியது அந்த சாக்கடையில் கிடப்பதற்கல்ல. அதன் அசுத்தத்தை நீக்குவதற்கே.

எனவே ஒரு புரட்சிகர சக்தியொன்றை மக்கள் ஏற்க வேண்டுமென்றால் இந்த அமைப்பு முறைக்குள் இருக்கின்ற விஷமகர சக்திகளை இனங்காட்ட வேண்டும். அவற்றை செய்ய இந்த நிறுவனங்களைப் பயன்படுத்தவேண்டியது அவசியம். பாராளுமன்றம் மாத்திரமல்ல மாகாணசபை, நகரசபை, கிராமிய சபைகள் உட்பட எல்லாவற்றிற்கூடாகவும் இயங்குதல அவசியம். இந்தப் பாராளுமன்றத்தை சரிப்படுத்த முடியும் என்று நாங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. இதற்குள்ளே உள்ள பிழைகளை அம்பலப்படுத்தி சரியான அமைப்பை கட்டுவதே எங்கள் நோக்கம்.

***தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஜேவிபியினரிடையே எப்போதும் தவறான அணுகு முறையே காணப்படுவதாக சொல்லப்படுகிறதே?***

சில வேளை நாங்கள் முன்வைத்த கருத்துக்களை சரியாக புரிந்து கொள்ளாதவர்களது கருத்தாக அது இருக்கக்கூடும். நாங்கள் இனப்பிரச்சினை தொடர்பாக விஞ்ஞான ரீதியில் இனவாதமற்ற ரீதியில் மார்க்ஸீய பார்வையிலேயே செயற்பட்டு வருகிறோம். சிங்கள இனவாதத்தையோ, தமிழ் இனவாதத்தையோ நாங்கள் சார்ந்தவர்களல்ல.

***ஜேவிபி தனது ஐந்து வகுப்புகளில் ஒன்றான இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கீழ் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழியினரை இந்தியாவின் 5வது படையாக பிரசாரப்படுத்தி வந்துள்ளதே?***

இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற தலைப்பிலான வகுப்பொன்று எடுக்கப்பட்டதென்பது உண்மையே. ஆனால், இங்கு வாழ்கின்ற இந்திய வம்சாவழியினருக்கு எதிரான கருத்துக்களை அது கொண்டிருக்கவில்லை. அது தப்பான பிரச்சாரம். ஆனால் இந்திய முதலாளித்து வர்க்கம் இந்திய சந்தையை விரிவுபடுத்தி வந்தது. எனவே இந்தியா தனது அரசியல், மற்றும் சந்தை பொருளாதாரத்தை நமது நாட்டின் மீதும் சுமத்தி வருவதற்கு எதிராகவே வகுப்புகள் நடத்தினோம்.

***மாகாணசபை, வடக்கு கிழக்கு இணைப்பு யாவுமே நாட்டைத் துண்டாடுகின்ற முயற்சி என்று ஜேவிபி பிரச்சாரம் செய்கிறதே?***

இந்தப் பிரச்சினையை தோற்றுவித்தது முதலாளித்துவ முறைமைகளே. அதே முதலாளித்துவம் இன்று தீர்வையும் சொல்லுகிறது. மாகாண சபைகளோ, பிராந்திய சபைகளோ எதுவோ, முதலாளித்துவ வர்க்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் பிரச்சினைக்கு அதே வர்க்கத்தால் தீர்வு காண முடியுமென நாங்கள் நம்பவில்லை. அதே போல் மக்களைப் பிரிப்பதனூடாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து விடவும் முடியாது. இந்த முதலாளித்துவ முறைமையே தமிழ் மக்களை ஒடுக்கியதென்றால் பிரிந்து போனதன் பின்னும் அதே முறைமையின் கீழ் தமிழ் மக்கள் ஒடுக்கப்படாமலா இருக்கப்போகிறார்கள். இப்படிக் கூறுவோமே. ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க.வுக்கு பதிலாக தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆட்சியிலமர்த்தி விட்டால் தமிழர் பிரச்சினை தீர்ந்து விடுமா? தமிழ் - சிங்கள மக்களிடையே புரிந்துணர்வுகள் இல்லாமல் போயுள்ளது. இருசாராரிடமும் நம்பிக்கையீனமும் அதிகரித்துள்ளது. பிரிந்து போவதனூடாக இருசாராரையும் இணைக்க இயலாது போய்விடும். எனவே தான் நாங்கள் கூறுகிறோம் தமிழ், சிங்கள, முஸ்லிம், மக்களைச் சேர்ந்து வாழ விடாமல் செய்கின்ற இந்த முதலாளித்துவ முறைமையை விரட்ட வேண்டும். ஒன்றாக வாழக்கூடிய சமதர்ம சோஷலிச சமுதாய மொன்று உருவாக்கப்படவேண்டும். அக்காரியத்தை செய்யும் பொறுப்பை நாங்கள் ஏற்கிறோம். எனவே தமிழ், முஸ்லிம் தனியரசுக்கான போராட்டத்துக்குப் பதிலாக ஒன்றாக வாழக்கூடிய சோஷலிச அரசுக்கான போராட்டத்தை செய்ய எங்களுடன் இணையுங்கள்.

***இன்று தமிழ் மக்களது பிரதானமான ஒடுக்கு முறை, இன ஒடுக்குமுறையாக உள்ளது. அவர்கள் நேரடியாக அதற்கு முகம் கொடுக்கின்ற போது, அது தொடர்ந்து நிலவுகிறவரை வர்க்க ரீதியான அணிதிரட்டல் சாத்தியமில்லை என்கின்ற நிலையில் முதலில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது முன்நிபந்தனையாக உள்ளது. இது தொடர்பாக ஜேவிபியின் நிலைப்பாடு என்னவாக உள்ளது?***

தமிழ் மக்களுக்கென்று விசேடமான பிரச்சினைகள் இருக்கிறதென்பதில் எங்களுக்கு இருவேறு கருத்தில்லை. அவர்களின் பிரச்சினைகளில் விசேட கவனம் செலுத்த வேண்டுமென்பதிலும் கருத்து முரண்பாடு இல்லை. ஆனால், இந்த முதலாளித்துவ அரசாங்கத்தால் அதைப் பெற்றுக்கொடுக்கமுடியுமா என்பதே எங்கள் கேள்வி. தனியான தேசக்கோரிக்கை என்பது தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் தேவையே. தமிழ் மக்களது மட்டுமல்ல. முஸ்லிம் சிங்கள மக்களது பிரச்சனைகளுக்கும் கூட, மக்கள் அரசாங்கம் ஒன்றினாலே தீர்வை வழங்க முடியும்.

***ஒரு சோஷலிச அரசாங்கம் பதவிக்கு வந்து விட்டால் மட்டும் தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?***

இன்று ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வே உள்ளது. இப்படிக் கூறுவோமே. தொழில் புரியக்கூடிய வயதுடையவருக்கு தொழில் வழங்க இந்த முதலாளித்துவ அரசாங்கத்தால் முடியாது. எனவே ஒரு விகிதாராசத்தைப் பின்பற்றுகிறது. தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்கின்ற ரீதியில் அதை வகுக்கின்றது. உயர் கல்வியில் சித்தியடைந்த எல்லோருக்கும் பல்கலைக்கழக அனுமதிவழங்க இந்த அரசாங்கத்தால் முடிவதில்லை. எனவே இனவிகிதாசாரத்தை பேணுகிறது. ஆகவே முதலாளித்துவத்தால் இந்த பிரச்சினைகள் தீரப் போவதில்லை. சோஷலிசம் வந்தவுடன் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்கிற பாராபட்சம் இல்லாது தகுதியுள்ள எல்லோருக்குமே இதை வழங்கமுடியும். மொழி தொடர்பாகவும் பிரச்சினை இல்லை. எனவே அரச சேவைகளுக்கு சிங்கள மொழி கட்டாயம் என தமிழ் மக்களிடம் கேட்கப்போவதில்லை. சிங்கள மக்களிடம் ஆங்கிலம் கட்டாயம் என கேட்கப்போவதும் இல்லை. நியாயவிலையில் நுகர்வுப் பொருட்கள் கிடைக்கும் என்றால், விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும் என்றால், எல்லோருக்கும் இருக்க வீடு கிடைக்கும் என்றால் இப்பிரச்சினைக்கு இடமேயில்லை.

***சோஷலிச சமூகத்தில் கூட இனப்பிரச்சினைக்கான சரியான தீர்வை காணமுடியாது போனதற்கான உதாரணங்கள் உள்ளதே ரஷ்யா உட்பட.***

அது பிழை. சோவியத் யூனியனில் ஸ்டாலினிசம் காரணமாகவும் அமெரிக்க ஏகாதிபத்திய ஊடுருவல் காரணமாகவுமே சரியான முறையில் அவற்றை தீர்க்க முடியாது போனது.

***அரசின் புதிய தீர்வு யோசனைகள் குறித்து ஜேவிபியின் நிலைப்பாடு என்ன?***

நாங்கள் முற்றும் முழுதாக இத்தீர்வு யோசனைகளை எதிர்க்கிறோம். காரணம் மக்களை பேசும் மொழிகளுக்கு ஊடாக பிரித்து வைப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். இதே பொதியில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அசமத்துவத்தை நீக்குகின்ற எந்த ஏற்பாடும் இதில் இல்லை. குறிப்பிட்ட மதத்துக்கு மட்டும் அளிக்கப்படுகின்ற இவ்விசேட சலுகையை நாங்கள் எதிர்க்கிறோம். இது அசமத்துவமான ஒன்றை சட்டபூர்வமான ஒன்றாக்கும் முயற்சியாகும்.

***1987 - 1989 காலப்பகுதியில் ஜேவிபிக்கும் புலிகள் இயக்கத்திற்கும் தொடர்பு இருந்ததெனவும் இக்காலகட்டத்தில் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட உறவு காரணமாக ஜேவிபியினரின் இருப்பிடங்களை புலிகள் காட்டிக் கொடுத்ததாகவும் ஜேவிபியின் லண்டன் கிளை பிரச்சாரம் செய்வதாக அறிகிறோம், அது உண்மையா?***

ஜேவிபியின் ஒவ்வொரு கிளைக் காரியாலயங்களும் வெவ்வேறான கருத்துக்களை பிரச்சாரப்படுத்துவதில்லை. லண்டனில் கட்சியில் இருந்து விலக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். அவர்களால் இது பிரச்சாரப்படுத்தப்பட்டதோ தெரியாது. ஆனாலும், புலிகளுக்கும் எங்களுக்கும் உத்தியோகபூர்வ தொடர்புகள் இருந்ததில்லை. ஆனால்எல்லா அரசியல் சக்திகளுடனும் உத்தியோக பூர்வமற்றமுறையில் உரையாடியிருக்கிறோம்.

***ஜேவிபி ஜனநாயகம், சோஷலிசம் பற்றியெல்லாம் பேசியபோதும், அதன் தாபனச் செயற்பாட்டைப் பொறுத்தளவில் மத்திய குழு, பொலிட்பீரோ அங்கத்தினர்கள் மட்டுமன்றி மாவட்ட அங்கத்தினர் கூட விஜேவிரவின் தனிப்பட்ட நியமனங்களாகவே இருந்ததாக சொல்லப்படுகிறதே?***

எங்களை நோக்கி நேரில் இக்குற்றச்சாட்டை எவரும் முன்வைக்கமாட்டார்கள். கட்சியில் இருந்து விலகியவர்கள் பலர் இருக்கிறார்கள். குறிப்பாக 71 கிளர்ச்சியின் போது போராட்டத்தைக் காட்டிக்கொடுத்தவர்கள் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது அரசாங்கத்திற்குள்ளும் வெளியிலும் இருக்கிறார்கள். இன்னும் சிலபேர் ஒழுங்கீனம் காரணமாக விலக்கப்பட்டவர்கள். இவர்கள் ஜேவிபியின் கருத்துக்களில் விமர்சனம் முன்வைக்க முடியாதவர்கள். எனவே அவர்கள் போன்றோர்தான் இப்படியான குற்றசாட்டுக்களை முன்வைப்பார்கள். எங்கள் கட்சிக்குள் மத்திய குழுவுக்குள் வரும்வரையான நீண்ட ஒழுங்குமுறையொன்று ஆரம்பத்திலிருந்தே பேணப்பட்டு வருகின்றது. ஜேவிபி தொடர்பான கருத்துச் சொல்வதற்கும், விமர்சனம் சொல்வதற்கு எல்லாவற்றுக்குமே சகலருக்கும் உரிமையுண்டு. ஒரு நபரின் சர்வாதிகாரத்தின் கீழ் இருப்பதற்கு இக்கட்சியில் உள்ளவர்கள் என்ன மூடர்களா? எனவே அக்கருத்து பொய்யானது.

***1994 பொதுதேர்தலில் ஜேவிபி பகிரங்க அரசியலுக்கு மீண்டும் வந்த போது தம்மை சுயவிமர்சனத்துக்குள்ளாக்குவதாக வாக்குறுதியளித்திருந்தது என்றும், இவ்வாக்குறுதியை இன்னமும் செயற்படுத்தவில்லையென்றும் ஜேவிபியில் இருந்து விலகிய ஒரு சாரார் கூறுகின்றனரே?***

சுய விமர்சனம் என்பது செய்யப்படவேண்டியதே. நாங்கள் இதற்கு முன்னரும் 1976ல் 71 ஐப்பற்றிய விமர்சனம் செய்தோம். 1976ன் பின் இது வரை அப்படியொன்றும் செய்யப்படவில்லை. ஆனால், அவ்வாறான ஒரு சுய விமர்சனத்தை ஓரிரு வாரங்களில் நினைத்தபடி செய்து முடிக்கமுடியாது. அது மிகுந்த பொறுப்புடன் செய்யவேண்டிய ஒன்று. இன்று கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் அனைவரும் - தோழர் சோமவன்ச தவிர, இல்லாத ஒரு சூழ்நிலையிலேயே செய்யவேண்டியிருக்கிறது. எனவே கட்சிக்குள் இதைப் பற்றிய தேடல்களை செய்து கலந்துரையாடியே செய்யவேண்டும். சென்ற ஆண்டு மே மாதம் 14ம் திகதி நடத்திய கட்சி சம்மேளனத்தில் இது பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றினோம். அதன்படி இவ்வருடம் ஜூன் மாதத்திற்குள் அண்ணளவான ஒரு சுயவிமர்சன ஆவணத்தொகுப்பொன்றை வெளியிடுவோம்.

செவ்வி: சரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படைப்பாக்கம்: கலையுருவாக்கத்தின் மூலம் -அனுபவங்களினூடே.......




இலக்கியவாதிகளினதும் கலைஞர்களினதும் படைப்பு அனுபவம் எவ்வாறு இருக்கிறது என்ற கேள்வி எங்களுக்குள் இருக்கிறது தானே! நல்ல படைப்புகளை, கலையை அவர்கள் எவ்வாறு உருவாக்குகிறார்கள். அவர்களின் அந்த அனுபவமும் முயற்சியும் எப்படிப்பட்டது என்றெல்லாம் நாங்கள் சிந்திப்பதுண்டல்லவா! நல்ல சிறுகதையை, நாவலை, கவிதையை வாசித்தபின் எப்படி இந்த உணர்வை எல்லாம் எங்களுக்குள் கிளர்த்த இவர்களுக்கு முடிகிறது என வியக்கிறோமல்லவா?

நல்ல இசையை, நல்ல படத்தை, நல்ல பாடலை இரசித்து அதனால் அடைந்த உணர்வின் ஆழத்துக்குள் சிக்கி வெளிவரமுடியாமல் தவிக்கிறோம் அல்லவா?

இவை எப்படிச் சாத்தியமாகின்றன?

உலகின், பல்வேறு துறைகளில் தலைசிறந்த கலைஞர்களும் இலக்கியவாதிகளும் உங்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க இந்தப் பக்கம் வருகிறார்கள்.

**தாஸ்தாவஸ்கி** என்னும் ரஷ்ய நாவலாசிரியர் தனது நாவல்களை எழுதும் போது அளவுக்கு மீறி உணர்ச்சிவசப்பட்டு விடுவார் என்றும் கிட்டத்தட்ட அரைப்பைத்தியமாகவே ஆகிவிடுவார் என்றும் கூறுகிறார்கள். தான் உருவாக்கும் கதையின் உலகுக்குள் ஆழ்ந்து தானும் அவற்றுள் ஒன்றாகி வாழும் உணர்வு நிலையே அதுஎன்பதை நாங்கள் உணர்கிறோம் தானே!

***அமெரிக்க எழுத்தாளரான வில்லியம் ஸ்டைரோன்*** பின்வருமாறு கூறுகிறார்; '' நான் நாவல்கள் எழுதும் பொழுது அவ்வாறு பைத்தியமாவதைத் தவிர்த்து வந்திருக்கிறேன். படைப்புப்பணி என்பது மிகவும் செறிவான ஒரு பணி சாதாரணமான அன்றாட வாழ்க்கை வாழும் போது கூட அது மூளைக்குள் சுழன்றபடி இருக்கும். நண்பர்களுடன் அளவளாவும் போதும் நியூயோர்க்கில் ஒரு பேருந்தில் செல்லும் போதும் அது பற்றிச் சிந்தித்துக் கொண்டே இருப்பேன். படைப்பு உணர்வு என்பது கருவுற்றிருக்கும் உணர்வு போன்றது. கரு நம்முள்ளேயே வளர்கிறது. அதைப் பிரசவிப்பதற்கு ஒரு நாளை எதிர் பார்த்துக் கொண்டிருப்பது போன்றது''

***இஸ்ரவேலின் தலை சிறந்த கவிஞர் எகுதா அமிசாய்க்குப்*** படைப்புப் பணி என்பது இன்னொரு விதமான அனுபவத்தைத் தருகிறது. முதிர்வடைந்து செல்லும் வாழ்க்கையின் எல்லாச் சிக்கல்களையும் எதிர் கொண்டு தனக்குள்ளேயே அமைதி பெறத் தனது கவிதைகள் தனக்கு உதவுவதாக எகுதா அமிசாய் கூறுகிறார். இதை இன்னொரு வகையாகப் புரிந்து கொள்ளலாம். வாழ்க்கையின் சிக்கல்களும் வேதனைகளும் அவருக்குள் இருந்து கவிதையாக வெளியேறி அவருக்கு நிம்மதியைத் தருகின்றன. அவரது அனுபவங்கள் எங்களுக்குத் தருகிற கவிதைகள் எங்களில் தொற்றிக் கொள்கின்றன.

***கிரேக்க நாடக திரைப்பட, நடிகை மெலினா மேரிக்கூரி*** தனக்கு தான் ஒரு நடிகையாக வேண்டும் என்ற வேட்கை தன்னுள் எரிந்து கொண்டிருந்ததாகக் கூறுகிறார். அவரது அனுபவத்தை அவரது சொற்களிலேயே கேட்போமா!

''நாடகப் பள்ளியில் நாள் தோறும் இரண்டு மணி முதல் ஆறுமணிவரை கழித்தேன். அப்பொழுது வெளி உலகம் மறந்து போகும். என்னைச் சுற்றி நான் நடிக்கப்போகும் நாடகக் கதை மாந்தர்களே இருப்பார்கள். நாங்கள் வெளிஉலகை மறந்துவிட்டு எங்கள் கவனம் முழுவதையும் நாடகத்தில் செலுத்த வேண்டும் என எங்கள் ஆசிரியர் டிமிட்ரி ரோன்டிரிஸ் கூறுவார். குரலை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்பதை அவர் கற்றுத் தந்தார். கிரேக்க துன்பியல் நாடகங்கள் பற்றியும் கிரேக்க கவிதை பற்றியும் கிரேக்க மக்கள் அவர்களின் மரபுகள் பற்றியும் இவற்றை ஆழ்ந்து கற்பது படைப்புப் பணிக்கு எவ்வளவு முக்கியமானது என்பது பற்றியும் விரிவாக அவர் எடுத்துக்கூறுவார். நாடகத்தை ஒரு சமயமாகக் கருதும்படி அவர் செய்தார். இது மிகை அன்று. கிரேக்க நாடகங்களில் நான் கொண்டிருந்த ஈடுபாடு ஒரு சமய உணர்வாகவே இருந்தது. பள்ளியில் இருந்து வீடு திரும்பியதும் கிரேக்க நாடகம் ஒன்றின் பாத்திரமான மார்கரைட் பேச வேண்டிய நீண்ட வசனங்களை சமுக்காளத்தில் மண்டியிட்டபடி ஒத்திகை பார்ப்பேன்''

''மெலினாவை நாங்கள் மேலும் இப்படிக் கேட்போம்.

மெலினா நாடகம் ஒன்றில் ஒருபாத்திரத்தில் நடிக்கும் போது என்ன உணர்வு தோன்றுகிறது. வேறுஒருவர் படைத்த பாத்திரத்தை நீங்கள் நடித்துக்காட்டும் பொழுது உங்கள் சிந்தனையில் என்ன தோன்றுகிறது?''

மெலினா இப்படிப் பதில் தருகிறார். ''வேறு ஒருவர் படைத்த பாத்திரம் என்னுள்ளேயே என் வழியாக உயிர் பெறுகிறது. நடிகர்கள் தாங்கள் நடிக்கும் பாத்திரங்களை தங்களுக்குள்ளேயே தாங்கிச் செல்கிறார்கள். கருவுற்ற தாய்மார்கள் குழந்தைகளை தங்கள் வயிற்றில் தாங்கிச் செல்வதுபோல வயிற்றில் இருக்கும் குழந்தையை நீங்கள் உணர்வது போலவே அந்தப் பாத்திரத்தை உணரலாம். அது மிகவும் உணர்வு பூர்வமான அனுபவம். அதுதான் நடிப்புக்கலையில் படைப்புப் பணியாகும்''.

மெலினாவின் கலையாக்க மூலம் எப்படி என்பதை, அவரது படைப்பு அனுபவம் எப்படி என்பதை நாங்கள் அவரது வார்த்தைகளில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது தானே!

1994ம் ஆண்டு செப்டெம்பர் 19 அன்று பாரிசில் உள்ள பாஸ்டில் இசை நாடக அரங்கு, ***கொரியாவைச் சேர்ந்த இளம் இசை அமைப்பாளர் மியுங்- வான்சுங்*** இசை நாடகம் ஒன்றின் முதல் நிகழ்ச்சியை நடத்துகிறார். நிகழ்ச்சி முடிந்து திரை இறங்குகிறது. அரங்கில் கரவொலி விண்ணைப் பிளக்கிறது.

பார்வையாளர்கள் உன்னத அனுபவம் ஒன்றைப் பெற்றதன் விளைவே அந்தக் கரவொலி.

இளம்இசை அமைப்பாளரான மியூங்-வுன்-சுங் தனது வெற்றிக்குக் காரணம் சொல்கிறார் இவ்வாறு;

கடுமையான உழைப்பும் பொறுப்புணர்வும் பொறுமையுணர்வும் இன்றி எந்த உன்னதமான கலையையும் ஆக்க முடியாது!''

***மாண்ட் செராட் காபாலே*** என்னும் உச்சக்குரலிசைப் பாடகி இசை நாடகங்களில் பாடுவதில் தேர்ச்சி பெற்றவராவார். அவர் கூறுவது இப்படி!

''எனது 18வது வயதில் உலகாயத வசதிகளை நான் அடியோடு மறந்து விட்டேன். இசையின் மீது ஆழ்ந்த காதல் கொண்டேன். இசையே எனது முழுவதுமான வெறியாக மாறிவிட்டது. உச்சக்குரலிசைப்பாட்டு என்பது உயர்ந்த உறவினையும் உயர்ந்த சுரத்தையும் கொண்ட ஒன்றாகும். உச்சக் குரல் இசைப்பாடகர் ஒருவரின் குரல் ஒருதாயின் அழு குரலை ஒத்திருக்கும். தாயின் குரலில் வெளிப்படும் உள்ளார்ந்த உணர்வு கேட்பவனிடத்தில் ஒரு மந்திர விளைவை உண்டு பண்ணுகிறது. அது தாயன்பின் நினைவுகளைக் கிளறி விடுகிறது. எனவேதான் இந்தக் குரல் மக்களை பெருமளவில் உணர்ச்சி வசப்பட வைக்கிறது''

***கேதரின் ஃ பிரான் சாயல்*** (ஒரு பியானோ கலைஞர்) இவர் ***(தாய் சி)*** போன்ற பல கீழைத்திசை இசை முறைகளை கற்றவர். இவர் ஒரு **நடிகையும் கூட.**

இவர் மனிதக்குரலில் இருந்து பிறக்கும் இசை குறித்து அந்தப் படைப்புணர்வின் ஊற்று மூலம் குறித்து, வெளிப்படுத்தும் ஆழ்ந்த பார்வையைக் கவனிப்போம்.

நமது மரபுகளில் காணக்கூடிய மந்திரங்கள், தோத்திரங்கள் புனித ஒலிகள் என்பனவற்றுக்கும் மனித உடல் இயக்கத்திற்கும் தொடர்புகள் உள்ளன. அவற்றின் ஒலிசுரமும் தாளமும் நமது உடலின் தாள இலயத்தை, விழிப்படையச் செய்கின்றன. நமது உடலே (குறிப்பாக குரல்) ஒரு இசைக்கருவிதான். மனிதக் குரல் நுட்பமானது; நளினமானது இது இடை விடாது மாறிக்கொண்டிருக்கிறது. எனவே நாம் குரலுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். இது உடற்பயிற்சி மூலமும் பிரணாயம் மூலமும் செய்யப்படவேண்டும்.

மேலும் இன்னுமொரு முக்கியமான விடயம், மனிதனின் அகஉலகமும் அவன் வாழும் புறஉலகமும் இணைபிரியாதவை என்பதுடன் உடல், உள மாறுதல்களால் குரலும் மாறுதல் அடைகிறது. இந்தக் குரலை நாம் மதி நுட்பமுடன் பயன் படுத்தும் பொழுது எமது அகஉலகுக்கும் புறஉலகுக்கும் இடையில் ஒரு சமநிலையை உருவாக்க முடியும். புராதன காலத்தில் ஒலி ஆற்றல் மூலம் இயற்கை ஆற்றல்களில் சமநிலையைப் பேணி மந்திரங்களை பயன்படுத்தியதாக அறிகின்றோம். இதன் கருத்து இதுதான்''

இவ்வாறு அவரது கருத்து நீண்டு செல்கிறது. எனவே தொகுத்து நோக்கும் போது பின்வரும் அம்சங்கள் படைப்பாக்கம் அல்லது கலையாக்கத்தின் மூலங்களாக அமைவதையும் அவையே படைப்பனுபவத்தை படைப்பாளிக்கும் இரசிக அனுபவத்தை இரசிகர்களுக்கு தருவதையும் அவதானிக்கலாம்.

இந்த அம்சங்கள் ஒன்றுக்கொன்று குறைந்தவையோ, முன்பின்னானவையோ அல்ல.

1. தனது துறையை தெரிவு செய்தல்
2. அதனுள் ஆழ்ந்து ஈடுபடுதல்.
3. தனது துறை தொடர்பான பன்முகப்பட்ட தேடுதல்.
4. தன் வாழ்நிலை அனுபவங்களை உள்வாங்குதல். அதுபற்றி தொடர்ந்து சிந்தித்தல்.
5. சிந்திப்பில் கிடைத்த பெறுபேறு மெல்ல ஒரு கருவாக உருவாதல் பின் அது வளர்தல் அது முழுமை அடையும் வரை பொறுமையாக இருத்தல்.

ஆகியனவே இவை. இவ்வாறு உருவான படைப்பு/ கலை எங்களில் மந்திரவிளைவை உண்டு பண்ணுகிறது என்பதை நாங்கள் இப்பொழுது உணர்கிறோம் அல்லவா?

***தொகுப்பும் கட்டுரை உருவாக்கமும் ரி.பீ. என்.***

***நன்றி: யுனெஸ்கோ கூரியர்.***



# சமகால மலையக நாடகங்கள்: -சில அவதானக் குறிப்புகள்

ஜெ.சற்குருநாதன்

1960 காலப் பகுதியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் மலையக நாடகம் தரமில்லாத வகையிலும், அதன் வளர்ச்சி நிலையை எய்யவில்லை என்றும், குறிப்பிட்டார். பேராசிரியர் நாடகத்துறையில் ஆழ்ந்த அறிவும், ஈடுபாடும் கொண்டவர் என்றாலும் அவருடைய மலையக நாடக நோக்கு ஒழுங்காக அமையவில்லை எனக் குறிப்பிட வேண்டும். அக்காலத்தில் மலையக நாடகம் வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அதன் தரம் ஏதோ ஒருவகையில் சமூக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சில வேளைகளில் சினிமா பாணியிலும் அமைந்திருந்திருக்கலாம். மேலும் மலையக மக்கள் மத்தியில் கல்வி வளர்ச்சி அக்காலப் பகுதியில் குறைவு. எனினும் அரசியல் சக்திகளாக அடையாளம் காட்டுவதில் அக் கால நாடகங்கள் தீவிரமான பங்கினை ஆற்றின.

ஆனால் சமகால மலையக நாடகங்களில் அதன் வளர்ச்சித் தன்மையிலும், தரத்திலும் துரித அபிவிருத்தியைக் காணமுடிகின்றது. மலையக மக்கள் அரசியல் பொருளாதார, சமூக செயற்பாடுகள் அவர்களின் தேசிய இன வளர்ச்சியினை அதிகரித்தவண்ணம் உள்ளன. எந்தவொரு கலை இலக்கிய வடிவங்களும், அச் சமூக அரசியல் பொருளாதார நிலையினூடாகத் தான் வெளிவரும். அந்த வகையில் மலையக நாடகங்களும் சமகாலத்தில் முன்னேற்றமடைந்து வருவதாகத் தெரிகின்றது.

மலையக நாடகங்களைப் பற்றிய பூரணமான அறிவோ, பயிற்சியோ, வாய்ப்போ இல்லாத நிலையில் பலர் நாடகங்களை மேடையேற்றி வருகின்றனர். அத்துடன் பாடசாலைகளில் வருடா வருடம் நடக்கும் தமிழ்த்தின போட்டிகளிலும் இந் நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. தமது அரசியல் கலை நோக்கினை பிரதிபலிக்கும் பல அமைப்புகள் நாடகங்களை மேடையேற்றி வருகின்றன. அண்மையில் நடந்த தேசிய, மாகாண சாகித்திய விழாக்களில் நிகழ்த்தப்பட்ட சிறந்த நாடகங்கள் நல்ல அறுவடையினை தந்திருக்கின்றது. தேசிய கலை, இலக்கியப் பேரவை சார்பில் சிவ. இராஜேந்திரனின் நெறியாள்கையில் உருவான ''இது நம்ம கத'' முக்கியமான ஒரு நாடகமாகும். (இவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டதாரி, நாடகத் துறை, கவிதைத்துறைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். அத்துடன் மார்க்சிய அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டவர்.)

இதனைப் போல இவ் அமைப்பாளர்களின் மாகாண சாகித்திய விழாவில் பரிசினைத் தட்டிக்கொண்ட ''எட்டடிக் குள்ளே'' என்ற நாடகம் முக்கியமானது. அத்தடன் லிந்துல கலை இலக்கியப் பேரவையினர் தங்களது கலைச் சேவையை நோக்காகக் கொண்டு பல நாடகங்களை மேடையேற்றி வருகின்றனர். குறிப்பாக ''நீ திருந்தினால் உலகம் திருந்தும்'', ''கண்கள் திறந்த போது'', ''தெளிவு பிறந்த நேரம்'' ஆகிய நாடகங்களை விசேடமாகக் குறிப்பிடலாம். மேலும் கொட்டகலையில் இயங்கும் பல சமூக மன்றங்கள் நிகழ்த்தும் நாடகங்கள், புசல்லாவ கலை இலக்கிய மன்றங்கள் நிகழ்த்தும் நாடகங்கள், பதுளை பண்டாரவளை, அப்புத்தளையில் இருக்கும் சமூக இலக்கிய அமைப்புக்கள் நிகழ்த்தும் நாடகங்கள் எல்லாம் மலையக நாடகத் துறையின் வளர்ச்சியினை முன்னறிவித்து நிற்கின்றன.

புதிய உத்திகளில் சமூக அரசியல்பிரச்சினைகளை விஞ்ஞான முறையில் அணுகிய ''இது நம்ம கத'' நாடகம் மிக நேர்த்தியாக நெறியாள்கை செய்யப்பட்டது. அழகியல் அம்சங்களை விட பிரச்சார அம்சம் பிற்பகுதியில் கூடுதலாக வெளிப்பட்டது.

இந்நாடகத்திற்கு நேரடி, மறைமுக எதிர்ப்புகள் வந்ததையும் குறிப்பிட வேண்டும். ஏனெனில் மலையகத்தில் இருந்த இரண்டு தலைமைத்துவங்களையும் கடுமையாக விமர்சனம் செய்தமையே. புதிய செல் நெறியினை இந் நாடகம் கொண்டிருந்தாலும் அதன் பிரச்சார தன்மை அதிகரித்திருப்பது அதற்கான கலை வடிவத்தினை ஊறு செய்துவிட்டது. இருப்பினும் அந் நாடகத்தில் இயங்கியல் தன்னை ஆழமாக ஊடுருவியிருந்தது.

இவர்களைச் சார்ந்தவர்களால் மேடையேற்றப்பட்ட அடுத்த நாடகம் ''எட்டடிக்குள்ளே'' நவீன உலகில் மலையக மக்களின் வீடுகளும் அதில் இருக்கின்ற மனிதர்களின் அவல நிலையையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டியது. இதற்கு நடுவராக வந்த கலாநிதி துரை மனோகரன் இந்நாடகம் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருப்பதாகப் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு நாடகங்களும் தேசிய கலை இலக்கிய பேரவையினரால் மேடையேற்றப்பட்டது. இந் நாடகங்களில் காணப்படுகின்ற எளிமையான குறியீடுகள், படிமங்கள், மொழிப் பயன்பாடு என்பன வளர்ந்து வரும் நாடகத் தலைமுறைக்கு புதிய சிந்தனைகளை அளிப்பதாக அமைகிறது. இவர்களின் ஒப்பனை, நடிப்பு, மேடைப் பயன்பாடு மேலும் மக்கள் மயப்படுத்தல் என்பவற்றில் அவதானம் தேவை.

லிந்துல்ல கலை இலக்கியப் பேரவையினரின் நாடகங்களில் மிக முக்கியமானது ''கண்கள் திறந்த போது'' என்ற நாடகமாகும். நீண்ட காலமாக மலையக நாடகத்துறையினை கலை வடிவமாக கொண்டு செயற்படுகின்றது. ஓய்வூதியம் பெற்ற தோட்டத் தொழிலாளி மகன்மார்களின் துன்பங்களுக்கு ஆளாகும் விதத்தை இந் நாடகம் எடுத்துக் காட்டியது. அழகியல் துறையில் அதிக முக்கியத்துவம் கொடுத்து இவர்கள் நாடகத்தினை மேடையேற்றுகின்றனர். இந் நாடக குழுவின் பிதா மகனான கே. சுகுமார் கடந்த தேசிய சாகித்திய விழாவில் பாராட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய பல நாடகங்கள் மலையகத்தையும், அதே நேரத்தில் நாட்டின் பொதுவான பிரச்சினைகளையும் முன்னிறுத்தி தயாரிக்கப்படுகின்றது. தனிமனித நிலையினை அதிகமாக காட்டி அழகியலை முதன்மைப்படுத்துவது இவர்களது பிரதானமான குறைபாடாக அமைகிறது.

இதனை விட கொட்டகலை சமூக மன்றங்கள், கிறிஸ்லஸ்பாம் தோட்ட செல்வராஜின்

→ 15

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வரவு.

தற்போதைய அரசியல் நிலைமைகளில் மலையக மக்களுடைய பிரச்சினைகள் குறித்து விரிவாகவும், விளக்கமாகவும் ஆராய்ந்து தமது மார்க்கங்கள் குறித்த தெரிவுக்கான தெளிவான நிலைப்பாடுகளை வகுத்துக் கொள்ளும் கட்டத்திலேயே மலையக மக்கள் உள்ளனர்.

மலையகம் குறித்து அக்கறைப்படுவோர் மத்தியில் அவசரமாகவும் உடனடியாகவும் செய்து முடிக்கவேண்டிய பணிகள் ஏராளம். எவ்வாறாயினும் மலையகம் குறித்து அக்கறைப்படுவோரின் சமூகப் பொறுப்பிலேயே இவை அனைத்தும் தங்கியுள்ளது.

முன்னரைவிட இன்று மலையகம் குறித்து எழுத்துருக்கள், பதிவுகள் வெளிவருவது ஓர் ஆரோக்கியமான சூழலையே் காட்டுகின்றது. தம்மைப்பற்றி தாமே புறவயப்பட்டு அறிவார்ந்த ஆய்வுரீதியில் நோக்கும் மனப்பான்மை தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது. வரலாற்றியல் நோக்கு வயப்பட்ட சமூக, வரலாற்றியல் எழுத்தாக்க முறைமையில் மலையக மக்கள் இன்று காலடி எடுத்து வைத்துள்ளனர். இந்தப் பின்னணியில் தான் அண்மையில் வெளிவந்த பதிவுகளை நாம் நோக்கவேண்டும், புரிந்துகொள்ளவேண்டும்.



மலையக மக்கள் என்போர் யார்?
இ.தம்பையா
வெளியீடு:
புதிய பூமி வெளியீட்டகம்

மலையக மக்கள் என்போர் யார் என்ற கேள்வி கேட்கும் ஒரு வரலாற்றியல் கட்டத்தில் இன்று மக்கள் உள்ளனர். அதன் நிமித்தம் தான் தம்பையாவும் இத்தகைய ஒரு வரலாற்று கோள்விக்கான தனது சிந்தனைகளைப் பதிவுசெய்துள்ளார். உண்மையில் எவரது சிந்தனையுமே முடிந்த முடிவான கருத்துகளாக முடியாது.

மலையகம் குறித்து இன்னும் ஓர் தெளிந்த அறிவுபூர்வமான சிந்தனைக்கான தேடலின் நிமித்தமே இன்றைய இந்த எழுத்துருக்கள் தம்பையாவின் நூலிலும் ஐந்து தலைப்புக்களிலான கட்டுரைகள் உள்ளன. மலையக மக்கள் யாரென வரையறைக்கு போகு முன்னர் எதிர்கொள்ளவேண்டிய சிக்கல்களை கோடிட்டுக் காட்டுவதோடு அது எவ்வாறு சிந்திக்கப் படவேண்டும், உணரப்பட வேண்டுமென்பதையும் தனக்கே உரித்தான தெளிவுடன் முன்வைக்க முற்பட்டுள்ளார். எவ்வாறாயினும் தம்பையாவின் நூல் இன்றைய வரலாற்றுத் தேவையின் முகிழ்ப்பு என்றே கூற முடியும்.

மேலும் இந்நூல் இன்னும் விரித்து எழுதப்படவேண்டியது. அப்போதே 'மலையகம்' குறித்து இன்னும் தெளிந்த பார்வைகளுக்கும் சிந்தனைகளுக்கும் தேடல்களுக்கும் இட்டுச் செல்லும். குறிப்பாக இதனை ஒரு வரலாற்றியல் கடமையெனக் கருதிசெயற்படுவதே அவர்களது சமூகப்பொறுப்பை எடுத்துரைக்கும்.

இந்நூல் இன்னும் ஆரோக்கியமாகவும், அறிவுபூர்வமாகவும், சிந்திக்கும் மட்டத்திலும் செயற்படும் மட்டத்திலும் எந்தளவுக்கு திறந்த உரையாடலுக்கான வழிவகைகளை திறந்து விட்டிருக்கிறதோ அந்தளவிற்கே மலையகம் குறித்த ஆழ்ந்த புரிதலுக்கும் சிந்தனைக்கும் தெளிவுக்கும் இது வழி அமைக்கும். இது பலரது வாசிப்புக்கும் உரையாடலுக்கும் உள்ளாக்கப்படவேண்டிய நூல்.




A History of the up-Country
Tamil People in Sri Lanka
S.Nadesan

எந்தவொரு சமூகமும் தனது மொழிவழியில் தனது சிந்தனைகளை பதிவுசெய்து அம் மக்களிடையே பரவச்செய்வதன் மூலமே ஒரு காத்திரமான பணியை நிறைவு செய்ய உதவ முடியும். குறிப்பாக மலையகத்தைப் பொறுத்தவரையில் தமது சுயமொழியிலான சிந்தனை மட்டமும் வாசிப்பு மட்டமும் மிகவும் குறைவானது என்பது யதார்த்தமானது.


இநத நிலையில் அம்மக்கள் குறித்து ஆங்கில மொழியில் ஓர் நூல் வெளிவருவதாயின் இது அந்தளவுக்கு அம்மகமகளிடையே தாக்கத்தை வெளிப்படுத்தும் என்பது கேள்வி. ஆங்கில வழிச் சிந்தனையதளர் மத்தியில் அவர்களது கவனிப்புக்கு மட்டுமே இது உள்ளாகும். குறிப்பாக இம்மக்கள் குறித்து அனுதாப உணர்வுகளை ஏற்படுத்த மட்டுமே இது உதவும்.

இந்நூலை எழுதிய நடேசனும் சரி இந்நூலை வெளியிட்ட ஜோதிக்குமாரும் சரி மலையகம் குறித்து அக்கறை கொண்டவர்கள் அல்ல என்று கூறிவிடமுடியாது. ஆனால் இதன் வெளியீடு மூலம் இவர்கள் சாதிக்க முனைந்தது எது என்ற கேள்வி இங்கு இயல்பாக எழுகின்றது.

ஆங்கில மேட்டுக்குடி மனப்பான்மை தனது சமூகம் குறித்த பார்வையை அச்சமூகத்திற்கு பெரிதாக வழங்காது. ஆனால் ஆங்கில மொழியறிவு இச்சமூகம் குறித்து இன்னும் ஆழ்ந்து சிந்தித்து தேடுவதற்கு துணை செய்யும் என்பதனை நாம் மறந்து விடக்கூடாது. எவ்வாறாயினும் இந்நூல் வரலாற்றியல் ரீதியான பல்வேறு தகவல்களை ஆய்வுகளை சிந்தனைகள்ள முன்வைத்திருக்கிறது என்பதில் மறுகருத்துக்கு இடமில்லை. அதில் அவை எவ்வளவு தூரம் இச்சமூகத்திற்குப் பயன்படப் போகிறது என்பதே கேள்வி.

ஏலவே ஆங்கிலத்தில் பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒன்றிரண்டை மொழிபெயர்ப்பு செய்து தமிழில் வெளியிடுவது கூட ஓர் ஆரோக்கியமான சிந்தனைத் தாக்கத்தை உருவாக்கக் கூடியதாகவே அமையும். மலையக சமூகத்தைப் பொறுத்தவரை இத்தகைய முயற்சி அதிகளவு பயனுடையதாகவே அமையும்.

சி.வி.வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய சூழலையும் அதன் தேவையையும் இதனுடன் ஒப்பிடத் தேவையில்லை. ஜோதிக்குமார் அவர்கள் சற்று இந்த விடயத்தில் சிந்திப்பது அவரது சமூக அக்கறையை இன்னும் ஆழப்படுத்தி இன்னும் காத்திரமான பணிகளில் ஈடுபட வழிவகுக்கும் என்பது நம்பிக்கை.




மலையகத் தமிழரின் பண்பாடும்
கருத்து நிலையும்
வெளியீடு உதயம் நிறுவனம்

மலையக தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் எனும் தலைப்பில் நடைபெற்ற ஓர் ஆய்வரங்குக் கட்டுரைத் தொகுப்பு நூலுருப் பெற்று உதயம் நிறுவன வெளியீடாக வெளிவந்துள்ளது.

பண்பாட்டு வழிநின்று வரலாற்றை தேட முற்படுவதற்கான ஆரம்ப திறவு கோலாக இந்நூல் அமைகின்றது. மலையகத் தமிழ் மக்களுடைய தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியமொன்றினை எடுத்துணர்த்தும் வகையில் ஆய்வுக் கட்டுரைகள் அமைந்துள்ளன. இதனடியாக மேற்கிளம்பும் கருத்து நிலை குறித்த சிந்தனைகளை பதிவு செய்ய முற்பட்டுள்ளன.

தனித்துவமான பாரம்பரியம் பேணப்பட்டு, தொழிற்படும் ஓர் சமூகத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் முயற்சியில் ஒரு பண்பாட்டு விவரணத் தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

இதில் ஒன்பது ஆய்வாளர்களின் கட்டுரைகள்இடம் பெற்றுள்ளன. ஆய்வு முன்னுரைபாக பேரா. சிவத்தம்பி நீணட கட்டுரையை வடித்துள்ளார். இவரே இந்நூலில் பதிப்பாசிரியராகவும் உள்ளார்.

மலையகப் பண்பாடு என்று பொதுப்பாடாக கூறிக்கொள்ள முற்பட்டாலும் இங்கு பல்வேறு பண்பாட்டுக் கோலங்களின் பன்முகப்பாடு வெளிப்பட்டு வருவதையும் நாம் நோக்கலாம். இவை குறித்து இன்னும் ஆழ்ந்த புரிதலுக்கும் தேடலுக்கும் எம்மை உட்படுத்த வேண்டியவர்களாகின்றோம்.

மலையகத் தமிழர்களின் பண்பாடு பற்றி சுயமொழியில் வரும் ஆரம்ப முயற்சியின் பேரில் இந்நூல் இது ஒரு முழுமையை நோக்கிய தேடலுக்கான சிந்தனைக்கான வித்து. 'பண்பாடும் கருத்து நிலையும்' குறித்து வரலாற்றியல் வகைப்பட்ட தன்னடையாளங்களை நோக்கிய ஆரம்ப பயணம் தான்.

இந்நூல்கள் வெறும் தகவல்களாக மட்டும் நின்றுவிடக்கூடாது. பல்வேறு தரப்பினரது வாசிப்புக்கும் சிந்தனைக்கும் உள்ளாக்கப்பட வேண்டும். மீண்டும் இவை குறித்த திறந்த உரையாடல்கள் பன்முக தளங்களில் நடைபெற வேண்டும்.




யாழ்ப்பாண வைபவமாலை
முதலியார் குல சபாநாதன்
வெளியீடு:
இந்து சமய அலுவல்கள் திணைக்களம்

மாதகல் மயில்வாகனப்புலவர் என்பவரால் வசனநடையில் எழுதப்பட்டது யாழ்ப்பாண வைபவமாலை. இது 1884ல் சென்னையில் முதன் முதலாக அச்சிடப்பட்டு வெளிவந்தது. பின்னர் 1916, 1927ம் ஆண்டுகளிலும் சிற் சில திருத்தங்கள் மாற்றங்கள் கொண்டு வெளிவந்ததாக அறிய முடிகின்றது.

முதலியார் குலசபாநாதன் என்பவர் இந்நூலிற்கு எழுதிய பாடபேதங்களுடனும் ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் 1949ல் முதற் பதிப்பாக யாழ்ப்பாண வைபவமாலையை பதிப்பித்தார். இது பல வரலாற்று மாணவர்களுக்கும் வரலாற்று தேடலில் ஈடுபட்டு ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் மிகுந்த பயனுள்ள நூலாக அமைந்திருந்தது. இதன் 2ம் பதிப்பு 1953ல் வெளிவந்தது.

மீண்டும் 42 ஆண்டுகளின் பின்னர் இந்நூல் 3ம் பதிப்பாக இந்து கலாசார சமய அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் வெளிவந்திருக்கின்றது.

உண்மையில் யாழ்ப்பாணத்தின் சிறப்புக்களையும் அக்கால மன்னர்களின் சரித்திரத்தினையும் எடுத்துணர்த்தும் ஓர் வரலாற்றியல் பதிவாகவே இந்நூல் அமைந்துள்ளது.

இன்று தமிழ்ச் சமூகம் வரலாற்றியல் நிலைப்பட்ட தனது தடயங்களைத் தேட ஆரம்பிக்கும் போது இத்தகைய நூல்களின் முக்கியத்துவத்தை நன்கு உணரக்கூடியதாகவே உள்ளது. இத்தகைய அரிய நூல்கள் இன்று தேடியும் கிடைத்திட முடியாத நிலைமையே உள்ளது. இதனை நிவர்த்திக்கும் வகையிலும் வரலாற்றுப் பணியாகவும் மீளவும் இத்தகைய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவது என்பது ஓர் காத்திரமான பணியென்றே கூற முடியும்.

யாழ்ப்பாண மன்னர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து அறிவதற்கு துணை செய்யும் ஆதார நூல்களுக்கு உதாரணமாக கைலாய. மாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வரலாற்றாசிரியருக்கும், அவருக்குக் கிடைக்கும் தகவல்களுக்குமிடையே மிக இறுக்கமான தொடர்பு ஒன்று நிலவும். இது அவர் படைக்கும் வரலாறும், அவரது சிந்தனை அறிவு, அனுபவம், சூழல் ஆகியவற்றின் தாக்கங்களுக்கும் உட்பட்டுக் காணப்படுவதும் சகஜமாகிறது. இதனால் வரலாற்றைக் கற்க முன்னர் வ்ரலாற்றாசிரியர் பற்றியும் அறிதல் அவசியமாகின்றது.

நூலாசிரியர் மயில்வாகனப் புலவர் என்பவருடைய வரலாற்றை அறிந்து கொள்வதற்கு துணை செய்யும் நூல்கள் இவை:

- அ. சதாசிவம்பிள்ளையவர்கள் எழுதிய பாவலர் சரித்திர தீபகம்.
- அ. குமாரசுவாமி புலவர் எழுதிய தமிழ் புலவர் சரித்திரம்.
- வயாவிளான் க. வேலுப்பிள்ளை அவர்கள் வெளியிட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதி.
- வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ் புலவர் சரித்திரம் என்பவை குறிப்பிடக்கூடியவை.

இவர் இயற்றிய வேறு நூல்களென அறியக் கூடியவை: புலியூரந்தாதி, ஞானலங்கார ரூப நாடகம் (அச்சிடப்படவில்லை), காசி யாத்திரை விளக்கம். (அச்சிடப்படவில்லை) போன்றவையாகும்.

புலவர் தாம் எழுதிய 'வைபவமாலை' நூலுக்கு கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரனுலா, கிராசமுறை என்னும் நூல்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளார்.

எவ்வாறாயினும், இவர் ஒரு புலவர். வரலாற்று ஆசிரியர் அல்ல என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். ஆயினும், வரலாற்று எழுத்தியலுக்கு இவரது ஆதாரங்கள் ஆவணங்களாக உள்ளன.

இந்நூலில் காணப்படும் சரித்திர முரண்பாடுகளையெல்லாம் சுவாமி ஞானப்பிரகாசர் The Ceylon Antiquary and Literary Register (Volume VI - I Part III) எனும் சஞ்சிகையில் எழுதிய Sources of the Yalpana Vaibava Malai எனும் கட்டுரையில் காணலாம்.

மேலும் சுவாமி, ஆங்கிலத்தில் எழுதிய 'Kings of Jaffna' எனும் நூலிலும், 'யாழ்ப்பாண வைபவ விமரிசனம்' எனும் நூலிலும் விரிவாகக் காணலாம். அத்தோடு முதலியார் இராசநாயகம் ஆங்கிலத்தில் எழுதிய 'Ancient Jaffna' எனும் ஆங்கில நூலிலும் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' எனும் தமிழ் நூலிலும் காணலாம்.

வரலாற்றியல் நோக்கு எழுத்தியல் முறைமைக்கு இந்நூல்கள் முன்னோடியாகவே உள்ளன. 42 ஆண்டுகளின் பின்னர் மூன்றாம் பதிப்பாக வைபவமாலை வெளிவரும் இன்றைய காலமும் நூல் வெளிவந்த ஆரம்ப காலமும் ஒன்றல்ல. இதற்குள் எவ்வளவோ முன்னேற்றங்கள் மாற்றங்கள் வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. அறிவுத்துறைகள் இன்று விருத்தி பெற்றுள்ளன. சூழல்கள் மாறியுள்ளன. வரலாறு குறித்த பிரக்ஞைபூர்வமான அக்கறையையும் அறிவார்ந்த தேடலும் முன்னரை விட தற்போது அதிகரித்துள்ளன. இவை யாவற்றையும் கருத்திற் கொண்டே இந்நூல் பார்க்கப்படவேண்டும்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது இந்த நூலை மறுபதிப்பு செய்த இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உண்மையில் பாராட்டுக்குரியதாகவே உள்ளது.

குறிப்பு:
முதலியார் இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் எனும் தமிழ் நூலும் இந்தியாவில் ஏசியன் எடியுக்கேசன் நிறுவனத்தார் மறுபதிப்புச் செய்து வெளியிட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.



நாட்டுப்புறப் பாலியல் கதைகள்
கி.ராஜநாராயணன்
கழனியூரான்

தமிழ் மொழியில் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு நிரம்ப உண்டு. அப்படியிருந்தும், சமஸ்கிருத மூலத்தில் எழுதப்பட்ட உலகின் முதலாவது பாலியல் நூலான 'காமசூத்திரம்' முழுமையான நூலாக தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் பல வேறுபட்ட மொழிபெயர்ப்புக்கள் வந்துவிட்டன.

இவ்வாறான திறந்த பாலியல் சம்பந்தமான விவாதங்களுக்கு தமிழ்ச் சூழலில் இப்புத்தகத்தின் வரவு ஒரு சமூக மாற்றத்தின் மைல் கல்லே. ஏற்கெனவே ராஜநாராயணன் தான் தொகுத்த பாலியல் நாட்டுப்புறக் கதைகளை 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற பெயரில் வெளியிட்டிருந்தார். ''வயது வந்தவர்களுக்கு மட்டும்'' தமிழ்ச் சூழலில் மாலன் போன்ற முன்னணிப் பத்திரிகையாளர்களாலேயே காரசாரமாக எதிர்ப்புக்குள்ளாகி அவலம் நிகழ்ந்தது.

கி. ரா. இந்த இரண்டாவது முயற்சியாக கழனியூரான் சேகரித்த 25 நாட்டுப்புறப்பாலியல் கதைகளைத் தொகுத்துள்ளார். மருது ஓவியங்களை வரைந்துள்ளார். கிராமியப் பேச்சுத்தமிழில் ஒருவர் கதைசொல்பவராகவும் இருக்க ஏனையவர்கள் கேட்பவர்களாகவும் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.

யாராலுமே புறக்கணிக்க முடியாத அங்கதம் கலந்த பாலியல் ரசனை இக்கதைகளில் உண்டு. கார்சியா மார்க்கியூஸ் போன்ற இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களின் வலிமையில் அவர்களின் நாட்டார் வழக்காற்றியலின் செல்வாக்கை யாருமே மறுக்கமுடியாது. நவீனங்களைச் சாதிக்க விழைகின்ற தமிழ் எழுத்தாளர்களும் நமது நாட்டார் வழக்காற்றியலின் சகல கூறுகளையும் அலட்சியம் செய்ய முடியாது. வாசகர்களும்தான்.

இறுதியாக டொக்டர் தே. லூர்து இப்புத்தகத்துக்கு வழங்கியுள்ள அணிந்துரையின் ஒரு பகுதி:

''ஆனால் இத்தகைய கதைகளை ஆபாசக் கதைகளென்றும் இத்தகைய கதைகளைத் தொகுத்து வெளியிடக்கூடாது என்றும் சில ஒழுக்க சீலர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய கதைகளைத் தொகுத்து வெளியிடுபவர்கள் 'ஒழுக்கக்கேடிகள்' என்றும் அவற்றைப் பதிப்பிப்போர் சமூகத்தைக் கெடுப்போர் என்றும் அந்த ஒழுக்க சீலர்கள் (Hypocrites)தங்களுடைய புராண கதைகளில் காணப்படும் பாலியல் கதைகளைப் புனிதமானது என்று ஏற்றுக்கொள்வர். ஆனால் நாடடார் தம் வழக்கிலுள்ள பாலியல் கதைகளை ஆபாசக் கதைகள் என்று பூனை கருவாட்டை வெறுத்து ஒதுக்குவது போல் வெறுத்து ஒதுக்குவார்கள். புராணக்கதைகளெல்லாம் ஆபாசக் கதைகளென்று நான் சொல்ல வரவில்லை. எந்த வொரு நாட்டார் வழக்காற்றியவனும் அவ்வாறு கூறமாட்டான். இப்புராணக்கதைகள் கூட ஒரு.காலத்தில் வாய் மொழியைச் சார்ந்த அல்லது எந்த மதத்தைச் சார்ந்த புராணக்கதைகளாக இருந்தாலும் அவற்றின் இயல்புகள் இவ்வாறு தான் இருக்கும்''

**நட்சத்திரன் செவ்விந்தியன்.**




**திகடசக்கரம்**
**வெளியீடு: காந்தளகம்,**
**சென்னை.**

திரு அ. முத்துலிங்கத்தின் 'திகடசக்கரம்' எனும் சிறுகதைகளின் தொகுப்பு காந்தளகம் வெளியீடாக வந்துள்ளது. தரமான சிறுகதையாளர்களுள் ஒருவராக கைலாசபதியினால் இனங்காணப்பட்ட இவரின் முதலாவது சிறுகதைத் தொகுப்பான 'அக்கா' 1964ல் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. புலம் பெயர்ந்து வாழும் இவரின் நீண்ட காலத்தின் பின்னரான இரண்டாவது வெளியீடாக வந்துள்ள இத்தொகுப்பு எட்டுச் சிறுகதைகளை உள்ளடக்கியுள்ளது. பல்வேறு நாடுகளில் பணியாற்றிய அனுபவங்களையும், பழகிய மனிதர்களையும் கொண்டு இவரது கதைகள் பின்னப்பட்டுள்ளன.

''எல்லாவற்றிலும் மனித மேம்பாட்டுக்கான ஏதோ ஒன்று மறைந்திருக்கும்..'' என்று கூறும் இவரின் கதைகள் இலக்கியவாதிகளினதும், விமர்சகர்களினதும் கவனத்தைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

**நில்ஷா.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 4

## குழந்தை ஏன் உணர்கிறது என்பதைவிட எதை உணர்கிறது என்பது முக்கியமானது

ஆங்கில மூலம்:டொக்டர் ஹெய்ம்.ஜி.ஜினோல்ட்
தமிழில்:அருணா

'ஒரு குழந்தை எனக்கு ஒரு போதும் அதிர்ஷ்டம் கிட்டுவதில்லை' என்று சொல்லுகிறதென்று வைத்துக்கொள்வோம். எந்த ஒரு விவாதமோ, விளக்கமோ இந்த நம்பிக்கையைப் போக்க உதவப்போவதில்லை. அந்த குழந்தைக்கு அதிர்ஷ்டம் வாய்த்த ஒரு சம்பவத்தை நாம் சொல்லும் போது, அது தனக்கு துரதிர்ஷ்டம் வாய்ந்த இரண்டு சம்பவங்களையாவது திருப்பிச் சொல்லிக் கொண்டே இருக்கும். நாம் செய்யவேண்டியதெல்லாம், நாம் எவ்வளவு ஆதரவுடன் அதன் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறோம் என்று காட்டுவதுதான்!

இந்த உரையாடலைப் பாருங்கள்:

மகன்: நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவன். எனக்கு ஒரு போதும் அதிர்ஷ்டம் கிட்டுவதேயில்லை.

தாய்: நீ உண்மையாகவே அப்படி நினைக்கிறாய்?

மகன்: ஓம்...

தாய்: அப்ப நீ விளையாடும் நேரமெல்லாம் எனக்கு அதிர்ஷ்டமில்லை. நான் தோற்கப் போகிறேன் என்று நினைப்பாயா?

மகன்: அதேதான் அதையேதான் நான் காண்கிறேன்.

தாய்: பள்ளிக்கூடத்தில்; ஏதாவது கேள்விக்கு விடை உனக்கு தெரிந்திருந்தால் அன்றைக்கு ரீச்சர் உன்னிடம் கேள்வி கேட்கவே மாட்டார் என்று நினைப்பாயா?

மகன்: ஓம்..

தாய்: ஆனால் தப்பித்தவறி நீ வீட்டு வேலையை செய்யாமல் விட்டிருந்தாலோ அன்றைக்குப் பார்த்து ரீச்சர் உன்னைக் கூப்பிடுவார் என்று நினைக்கிறாய்...

மகன்: ஓம்.

தாய்: இப்படி உனக்கு நிறைய நடந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

மகன்: ஓம்... ஒரு நாள் (மகன் சில உதாரணங்களை சொல்லத் தொடங்குகிறான்)

தாய்: நீ அதிர்ஷ்டம் பற்றி என்ன நினைக்கிறாய் என்று கேட்க எனக்கு நல்ல விருப்பமாக இருக்கிறது. ஏதாவது நடந்தால் ஒன்று அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷடம் என்று நீ நினைக்கிறாய்.. சொல்லு.. இதைப்பற்றி நாங்கள் பேசுவோம்...

இத்தகைய உரையாடல்கள் குழந்தைகளின் அதிர்ஷ்டம் குறித்த நம்பிக்கையைப் போக்காமல் இருக்கலாம். ஆனால், தான் ஒரு புரிந்துணர்வுள்ள தாயைக் கொண்டிருப்பது எவ்வளவு அதிர்ஷடம் என்ற செய்தியை இது நிச்சயம் அவனுக்கு கொடுக்கவே செய்யும்.

குழந்தைகள் எம்மை நேசிக்கும் அதே வேளை எதிர்க்கவும் செய்கிறார்கள். அவர்கள் தம்மீது ஆதிக்கம் கொண்டவர்கள் மீது, உதாரணமாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மீது இரண்டு விதமான உணர்வுகளையும் கொண்டுள்ளனர். பெற்றோர்களுக்கு இத்தகைய இரண்டு விதமான - ஒன்றுக்கொன்று நேரெதிரான மனோநிலைகளை கொண்டிருத்தலை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இத்தகைய இரட்டை உணர்வை தாமும் கொண்டிருப்பதை அவர்கள் விரும்புவதும் இல்லை. குழந்தைகளிடம் இத்தன்மை இருப்பதை அவர்களால் சகிக்க முடிவதும் இல்லை.

ஆனால், எம்மிடையேயும் எமது குழந்தைகளிடையேயும் இத்தகைய இரண்டு விதமான போக்கு நிலவுவதை ஏற்றுக்கொள்ளுவதற்கு நாம் பயிலவேண்டும். தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கமால் இருக்க வேண்டுமானால், குழந்தைகளின் இத்தகைய உணர்வுகள் சாதரணமானவையும், இயற்கையானவையும் என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். ஒரு குழந்தையின் இத்தகைய இரட்டைப் போக்கை ஏற்றுக்கொண்டு அதன் உணர்வுகளை' வெளிப்படுத்துவதன் மூலம் அக்குழந்தையை தனது தவறை புரிந்து கொள்ளவைக்க முடியும்:

''உங்களுக்கு உங்களுடைய ஆசிரியர் பற்றி இரண்டு விதமான உணர்வுகள் ஏற்படுகின்றன. உங்களுக்கு அவரை பிடிக்கவும் செய்கிறது. அதே வேளை பிடிக்காமலும் போகிறது''

''உனது அண்ணாவில் ஆசையாகவும் இருக்கிற அதே நேரம் எரிச்சலாகவும் இருக்கிறது. இரண்டு விதமான உணர்வுகள்.. அவன்மீது''

''இதைச் செய்யவோ அதைச் செய்யவோ என்று இருக்கிறது. குழந்தைக்குப் போகவும் விருப்பமாகவும் இருக்கிறது; வீட்டில் நிற்கவும் ஆசையாகவும் இருக்கிறது''


அவர்களது இரட்டைப் போக்கு குறித்த இவ்வாறான அமைதியான, விமர்சனம் எதுவும் அற்ற வார்த்தைகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அது தமது குழம்பிய உணர்வுகள் கூட, ஒன்றும் புரிந்து கொள்ள முடியாதவை அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்துகின்றன. அதே வேளை, இப்படியான வார்த்தைகள் நிச்சயமாக எந்தப் பயனும் அற்றவை:

''என்ன மகன்.. நீ ஒரே குழப்பமாக உள்ளாய். ஒருகணம் நீ உனது நண்பனுடன் சந்தோஷமாக இருக்கிறாய். அடுத்த கணம் அவனுடன் சண்டை பிடிக்கிறாய்... இரண்டில் ஏதாவது ஒன்றைச் செய்''

மனித யதார்த்தம் குறித்த தேர்ந்த அணுகுமுறைகள் இத்தகைய இரட்டைப் போக்கு நிலவுவது சாத்தியமே என்று கூறுகின்றன. அன்பும், வெறுப்பும் கலந்திருப்பதை, ஈடுபாடு இருக்கும் அதேவேளை எதிர்ப்புணர்வும் இருப்பதை, அர்ப்பணிப்பும் சச்சரவும் ஒன்றாக கலந்திருப்பதையெல்லாம் சாத்தியமானவையே என்று கூறுகிறது. எல்லா விதமான உணர்வுகளும் கூட ஒருவரின் தனிப்பட்ட உரித்துக்களாக இருக்க முடியும்.

இத்தகைய ஒரு கருதுகோளை ஏற்றுக்கொள்வது என்பது இலகுவானதல்ல. எமது சிறுபராயப் பயிற்சியும், வளர்ந்தபின் நாம் பெற்றுக்கொண்டுள்ள கல்விமுறையும் ஒன்றுக்கொன்று எதிரான பார்வைகளைக் கொண்டிருப்பதை மறுதலிக்கின்றன. நாம் எதிர்மறையான உணர்வுகள் கூடாதவை என்றும் அவ்வாறு ஏற்படின் அவற்றையிட்டு வெட்கப்பட வேண்டும் என்றும் தான் பயிற்றப்பட்டிருக்கிறோம். ஆனால், புதிய விஞ்ஞான ரீதியான அணுகுமுறையானது, உண்மையில் செயல்களை மட்டுமே நல்லது அல்லது கெட்டது என்று கூற முடியும் என்கிறது. நினைவில் எழும்பும் உணர்வுகளை அல்ல. செயல்கள் மட்டுமே பாராட்டவோ, இகழப்படவோ முடியும். உணர்வுகளை அப்படிச் செய்ய முடியாது; முடியாது மட்டுமல்ல செய்யப்படவும் கூடாது. உணர்வுகளை மதிப்படுவதும், மனக்கிளர்வுகளை கட்டுப்படுத்த முனைவதும் சுதந்திரத்திலும் மன ஆரோக்கியத்திலும் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடும்.

உணர்வுகள் எமது பரம்பரை அனுபவங்களின் ஒரு பகுதியாகும். மீன்கள் நீந்துகின்றன; பறவைகள் பறக்கின்றன; அவ்வாறே மக்கள் உண்கின்றார்கள். சில வேளைகளில் நாம் மகிழ்ச்சியாக உள்ளோம். சிலவேளைகளில் அப்படி இருப்பதில்லை. எமது வாழ்வில் சில சமயங்களில் கோபத்தையும் அச்சத்தையும், கவலையும், சந்தோஷத்தையும், பெருமிதத்தையும் ·குற்ற உணர்வையும், ஆசையையும், வெறுப்பையும் தித்திப்பையும் அருவருப்பையும் நிச்சயமாக உணரத்தான் செய்கிறோம். எம்முள் எழும் உணர்வுகளில்' எந்தெந்த உணர்வுகள் எவ்வெப்போது எழுவேண்டும் என்று எம்மால் தீர்மானிக்க முடியாவிட்டாலும் அவற்றை எப்படி, எப்போது வெளிப்படுத்துவது என்று எம்மால் தீர்மானிக்க முடியும், அவற்றை நாம் தெளிவாக புரிந்து கொண்டிருப்போமானால். அதுதான் பிரச்சினையின் முக்கியமான பகுதி. பலர் தமது உணர்வுகளைத் தவறாகப் புரிந்து கொள்ளும் விதத்திலேயே கல்வியூட்டப்பட்டுள்ளார்கள். அவர்கள் வெறுப்படையும் போது, அது வெறும் விருப்பின்மையே என்று அவர்களுக்கு சொல்லப்படுகிறது; அவர்கள் பயமுற்று இருக்கும் போது, பயப்படுவதற்கு ஒன்றுமில்லையென்று அவர்களுக்கு கூறப்படுகிறது; அவர்கள் நோயினால் துயருறும் போது, துணிவாகவும் புன்னகைத்தப்படியும் இருக்குமாறு கேட்கப்படுகிறார்கள். எமது பெரும்பாலான கவிதைகள் 'துன்பம் வரும் போது சிரியுங்கள்' என்றே எமக்கு அறிவூட்டுகின்றன.



இதற்குப் பதிலாக என்ன செய்யப்படவேண்டும்? எதைச் செய்யுமாறு பிரேரிக்கப்படுகிறது? .

உண்மையை!

ஆம். உண்மையை மட்டுமே உணர்வுகள் பற்றிய கல்வியானது குழந்தைகட்கு தாம் எதை உணர்கிறோம் என்பதை புரிந்து கொள்ள அவர்களுக்கு உதவுகிறது. ஒரு குழந்தையைப் பொறுத்தவரை அது **எதனை உணர்கிறது** என்று தெரிந்து கொள்வது, ***அதை ஏன் உணர்கிறது*** என்று புரிந்து கொள்வதை விடவும் மிகவும் முக்கியமானது. தனது உணர்வு என்ன என்பதை அது தெளிவாகப் புரிந்து கொள்ளுமானால், தான் தனக்குள்ளேயே குழப்பமாக இருப்பதாக அது உணரவேண்டிய தேவை குறைந்துவிடும்!

### தன் ஆளுமையை புரிந்து கொள்ள ஒரு கண்ணாடி:

ஒரு குழந்தை தனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளவதில் எம்மால் எப்படி உதவ முடியும்? நாம் அது தன் உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு கண்ணாடியாக செயற்படுவதன் மூலமாக இந்த உதவியைச் செய்ய முடியும். குழந்தை தனது உருவ அமைப்பை கண்ணாடியில் பார்த்து தெரிந்து கொள்கிறது. அவ்வாறே தனது உணர்வுகளை அதன் மீதான எமது பிரதிபலிப்புகளின் மூலமாக அதனால் உணர்ந்து கொள்ள முடியும்!

ஒரு கண்ணாடியின் செயற்பாடு என்ன? பொருளின் விம்பத்தை அப்படியே எந்த மாற்றமும் இல்லால் பிரதிபலிப்பது தானே? ஒரு கண்ணாடி எம்மைப் பார்த்து, 'நீ அழகற்றவனாக இருக்கிறாய்; உனது முகம் ஊதிப் போய் உள்ளது. உனது கண்கள் சிவந்து உள்ளன. மொத்தத்தில் நீ ஒரே அசிங்கமாக உள்ளாய், உன்னை நீ கொஞ்சம் ஒழுங்குப்படுத்திக்கொள்'' என்று சொல்வதை எதிர்பார்ப்பது இல்லை; அப்படி அது சொல்லுமானால் அதை விரும்பப்போவதுமில்லை. அப்படி ஒரு மந்திரக் கண்ணாடியிருக்குமானால், ஒரு சில நாட்களில் அதை ஒரு தொற்று நோய் கிருமியைப் போல கண்டாலே ஒதுங்கி போய்விடுவோம். கண்ணாடியிடம் நாம் எதிர்ப்பதெல்லாம் எமது பிரதிவிம்மபத்தை மட்டுமே; ஒரு போதனை அல்ல. எமது விம்பம் எமக்கே பிடிக்காமல் இருக்கலாம் ஆயினும், நாம் எப்படி திருத்திக்கொள்வதென்பதை நாமே தீர்மானிக்க விரும்புவோம்.

ஒரு உணர்வுக் கண்ணாடியின் செயற்பாடு கூட அதுதான். எத்தகைய திரிபோ மாற்றமோ இல்லாமல் உணர்வுகளைப் பிரதிபலிக்க வேண்டும்.

'நீ மிகவும் கோபமாக இருக்கிறாய் போல் தெரிகிறது'

'நீ அவனை நன்றாக வெறுக்கிறாய் போலப் புரிகிறது'

'இந்த ஒழுங்குகள் உனக்கு அருவருப்பூட்டுகின்றனபோலத் தெரிகிறது'

ஒரு குழந்தைக்கு இவ்வாறான உணர்வுகள் இருக்குமானால், இத்தகைய வசனங்கள் மிகவும் பயன் மிக்கவையாக 'அமையும். இவை அதற்கு தனது உணர்வுகள் என்ன என்பதை தெளிவாகக் காட்டும். தெளிவான விம்பம், ஒரு கண்ணாடியில் பார்க்கும் போதோ, அல்லது உணர்வுகளை கண்ணாடியில் பார்க்கும் போதோ தெரியுமானால், அது போதும். ஒரு குழந்தை தன்னை தானே விளங்கிக் கொண்டு மாற்றம் பற்றி முடிவு செய்வதற்கு அது உதவியாக இருக்கும்!

அடுத்த இதழில்:
புரட்சிகர விமர்சனமும் புதிய அணுகுமுறையும்.

## போரின் முகம்

சி.சிவசேகரம்

என் முகத்தில் எதைக்காண்கிறாய் என
வினவியது போர்
இடிபாடுகளை என்றான் ஒரு கிழவன்
இழவு வீடுகளை என ஏசினாள் ஒரு கிழவி
குருதிக் கோலங்களை என்றான் ஒரு ஓவியன்
போர்ப் பறைகளை எனச் சொன்ன இசைஞனைத் தொடர்ந்து
ஒப்பாரியை என முனகினாள் ஒரு பாடகி
கண்ணிவெடிகளை எனக் கூவினான் ஒரு முடவன்
முடமான காவியங்களை என்றான் ஒரு கவிஞன்
உடல் ஊனமானோரை என்றாள் ஒரு தாதி
மருந்துகளின் போதாமையை என்ற வைத்தியனை முந்தி
இறக்குமதி வாய்ப்புக்களை என்றான் ஒரு விநியோகஸ்தன்
விலைவாசி உயர்வை என்றான் ஒரு குடும்பஸ்தன்
மேலதிக லாபத்தை என்று குரல் கொடுத்தான் ஒரு வியாபாரி
பொருட்களின் தட்டுப்பாட்டை என்றாள் ஒரு குமரி
பெரும் வருமானத்தை என்று மகிழ்ந்தான் ஒரு கடத்தற்காரன்
தர வேண்டிய என் பங்கை என வலியுறுத்தினான்
ஒரு சோதனைச்சாவடி அதிகாரி
இன்னும் விற்றுமுடியாத ஆயுதங்களை என்றான்
ஒரு விற்பனையாளன்
என்னுடைய கமிஷனை என்றான் ஒரு தரகன்
குண்டெறியும் விமானங்களை என நடுங்கினான் ஒரு சிறுவன்
மேலெழும்பும் ஏவுகணைகளை எனக் குழறினான் ஒரு விமானி
ரத்துச்செய்யப்பட்ட விடுமுறையை என ஏங்கினான் ஒரு சிப்பாய்
போர்க்கால மிகை ஊதியத்தை என்றான் அவனது மேலதிகாரி
மரித்த படையினர்க்குரிய உபகாரநிதியை என பொறாமைப்பட்டான்
அவன் அயலான்
என் நண்பனின் பிரிவை என வாடினான் அவனது தோழன்
என் தலைவிதியை என நொந்தாள் அவனது மனைவி
வீர மரணங்களை என்றான் ஒரு பிரசாரகன்
விடுதலையை என அடித்துரைத்தாள் ஒரு பெண் போராளி
பயங்கரவாதத்தின் முடிவை எனக் கொக்கரித்தான் ஒரு அமைச்சன்
பைத்தியக்காரத்தனத்தை என்று சிரித்தான் ஒரு ஞானி
பசியில் வாடும் குழந்தைகளை என்றாள் ஒரு தாய்
பாணுக்கான கியூ வரிசையை என்றாள் ஒரு சிறுமி
போக முடியாத சாலைகளை என்றான் ஒரு வாடகை வண்டியோட்டி
வெறிதான தேவாலயங்களை என ஏங்கினான் ஒரு பூசகன்
திறவாத பாடசாலைகளை எனக் குறுக்கிட்டாள் ஒரு ஆசிரியை
நிறைய விடுமுறை நாட்களை என்று கத்தினான் ஒரு மாணவன்
நடத்த முடியாத நிகழ்ச்சிகளை என வருந்தினாள் ஒரு நர்த்தகி
மேடையில்லாத நாடகங்களை என்றான் ஒரு நடிகன்
மேலும் பல அறிக்கைகளை என்றான் ஒரு என்.ஜி.ஓ ஊழியன்
போர்ச் செய்திகளை என்றான் ஒரு பத்திரிகையாளன்
பெரும் பொய்களையும் என்றான் ஒரு வாசகன்
என்னை என்ற குரல் வந்த திசையிற் கவனிப்பாரற்றுக் கிடந்தது
ஒரு அகதியின் பிணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதற்குப் பேர் 'கட்டிங்கிராஸ்' மேற்கு ஆபிரிக்காவில் பெருகிக் கிடக்கும் ஒரு வகைப் பெருச்சாளி இனம். ஒரு பெரிய முயல்குட்டி அளவுக்கு வளரும். இதில் விசேஷம் என்னவென்றால் இது ஒரு தோட்டத்தில் வாய் வைத்து விட்டது என்றால் தோட்டக்காரன் கதி அதோகதிதான். மண்ணைப் பிராண்டி உள்ளே போய் கிழங்கு வகை எல்லாவற்றையும் நாசமாக்கிவிடும். மேலுக்குப் பார்த்தால் பயிர்கள் 'ஓகோ' வென்று இருக்கும். ஆனால் உள்ளுக்குள்ளே கிழங்கையும் வேர்களையும் ஒட்டச் சாப்பிட்டிருக்கும். பார்ப்பவர்களுக்கு விசயமே தெரியாது. கண் முன்னே பார்த்துக் கொண்டிருக்கும்போதே பயிர் செத்துப் போகும்.

சில வைரஸ் வகைகள் இருக்குதாம். அவை ஆட்களை முற்றிலும் கொல்லாது. ஆள் செத்தால் அதுவும் செத்து விடுமல்லவா. ஆகையால் மெல்ல, மெல்ல ஆளைச் சாப்பிட்டுக் கொண்டே வருமாம். தன் உயிரை நீடிப்பதற்கு.

கட்டிங்கிராஸும் அந்த வகைதான். வள்ளிக் கிழங்கு என்றால் அதற்கு உயிர். நாலு கிழங்கு இருந்தால் மூன்றைச் சாப்பிட்டு விட்டு ஒன்றை விட்டுவிடும். உங்களில் கரிசனைப்பட்டு அல்ல. பயிர் மடிந்தால் அதுவும் மடிந்து விடுமே.

கட்டிங்கிராஸ் இப்படியாக மனிதனுக்கு ஏற்பட்ட உணவைச் சாப்பிட, மேற்கு ஆபிரிக்க மனிதனோ கட்டிங்கிராஸையே சாப்பிடலானான். மிகப் பிரியமாகச் சுவைத்து சாப்பிடுவான். கறி வைச்சும் சாப்பிடுவான்.

கட்டிங்கிராஸ் மனித இனத்தை ஒழிக்கப் பாடுபட மனிதனோ கட்டிங்கிராஸை வேரோடு கருவறுக்க வழிகள் தேடிக் கொண்டிருந்தான். எழுத்தில் இல்லாத ஒப்பந்தம் இது. ஒரு உயிர் வாழ் இனச்சூழல் சமநிலை (Ecological balance) இங்கே அரங்கேறிக் கொண்டிருந்தது யாருக்கும் தெரியாது.

நான் அப்போது உலக வங்கிக்காக மேற்கு ஆபிரிக்காவில் வேலை செய்து கொண்டிருந்தேன். அங்கே தான் எனக்கு முதன் முதல் கட்டிங்கிராஸுடன் பரிச்சயமேற்பட்டது. 'ம்மயம்பா' என்ற ஊருக்குக் காரில் பயணம். பென்ஸ்கார். அங்கே இதெல்லாம் சர்வசாதாரணம். நடுத்தரவர்க்கம் இல்லாத நாடு. மிதமிஞ்சிய பணக்காரனாக இருப்பான் ஒருவன், அல்லது பரம ஏழை. இடையில் ஒன்றும் இல்லை. வாகனமும் அது மாதிரித்தான். பென்ஸ்கார்தான் வீதியெல்லாம். கொஞ்சம் முட்டுப்பட்ட பணக்காரன் என்றால் Peugeot அல்லது Toyata வைத்திருப்பான். அல்லது நடைதான். வண்டி, குதிரை, ரிக்ஷா, ஓட்டோ என்றெல்லாம் இல்லை. தள்ளு வண்டி, சைக்கிள் கூடக்கிடையாது, மோட்டார் சைக்கிளை மட்டும் அதிசயமாகக் காணலாம். சனங்கள் பொடா பொடாவில் (பஸ்ஸில்) போய்க் கொள்வார்கள். அதன் சத்தத்தை வைத்து அப்படிப் பேர் வந்தது போலும்.

காரைச் சாரதி நூறுமைல் வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தான். இதுவும் சர்வசாதாரணம் தான். அவன் பேர் 'க்காணு' அவனுடைய வாய் எப்பவும் கோலா நட்டைப் (பாக்குப் போன்ற துவர்ப்பாய் இருக்கும் ஒரு காய்) மென்று கொண்டே இருக்கும். வாய் சிவப்பாகும். பசியே எடுக்காது. 'ஹி ஹி' என்று அடிக்கடி சிரிப்பான். சிவப்பு முரசு பளிச்சென்னும். சிரிக்காத வேளையில் நன்றாகக் கார் ஓட்டுவான்.

நான் சாடையாகக் கண்ணயர்ந்திருக்க வேணும். திடீரென்று கார் 150 மைல் வேகத்தில் துள்ளிப் பாய்ந்து திசை மாறி ஓடியது. 'டபார்' என்று ஒரு சத்தம். திடுக்கிட்டு 'என்ன? என்ன?' என்றேன். அவன் காரை திடுமென்று நிற்பாட்டி இறங்கி காட்டுக்குள் ஓடினான். நான் கத்துவதைக் கூடப் பொருட்படுத்தவில்லை. செடிகளின் சலசலப்பு. ஆனால் இவனைக் காணவில்லை. ஒரு நிமிடம் கழித்துமெல்ல எட்டிப் பார்த்தான். பல் எல்லாம் தெரிய 'ஹி ஹி' என்று சிரித்து "மாஸ்ட மாஸ்ட, கட்டிங்கிராஸ்" என்றான். என்ன இழவு என்று இவனுடன் என்று இறங்கிப் பார்த்தேன். குற்றுயிரும் கொலையுயிருமாக அது கிடந்தது. அசல் பெருச்சாளிதான்.

"மாஸ்ட, மாஸ்ட! கட்டிங்கிராஸ் சொப்பைன் பொக்கு ஸ்வீட்டோ" என்றான். "ஐயா! இது அருமையான சாப்பாடு எடுத்து வரவா?" என்று கேட்டான். கண்டிப்பாக முடியாது" என்று விட்டேன். முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டே வந்தான்.

அதற்குப் பிறகு தான் எனக்குத் தெரியும் அந்தப் பெருச்சாளியை யார் ரோட்டிலே பார்த்தாலும் காரை ஏற்றிக் கொன்றுவிடுவார்கள். பிறகு விரும்பிய மாதிரி அதைச சுட்டோ, கறி வைத்தோ சாப்பிடுவார்களாம். க்காணு மூன்று நாளாக முகம் நிமிர்த்தவில்லை. அருமையான 'சொப்' இந்த மூதேவியால அநியாயமாய் போய்விட்டது என்ற ஆதங்கம் அவனுக்கு. "மாஸ்ட, சொப்பைன் சொப் பைன்" என்று வாய் ஓயாமல் சொல்லிக் கெண்டிருந்தான். அவனால் அந்தத் துக்கத்தை தாள முடியவில்லை. போறவர் வாறவர் எல்லோரிடமும் அதைப்பற்றிப் பிரலாபித்தான். நான் அந்த ஊரை விடும் வரை அவன் என்னை மன்னித்ததாகவே தெரிவில்லை.

உலக வங்கி இன்னொரு பத்து மில்லியன் டொலர் கடன் கொடுக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இன்னேரம் பார்த்து புகார் கடிதங்கள் அறம்பிறமாகப் பறந்தன. ஊழல், லஞ்சம், பணவிரயம் என்று பலவிதமான குற்றச்சாட்டுகள். வங்கி கடன் தர மறுத்து விடக்கூடுமோ என்ற ஒரு அவலமான நிலமை.

மந்திரி ஒரு விசாரணைக் குழு அமைத்தார். அவர்தான் தலைவர். குழுவில் அவர் தவிர நானும் இன்னும் மூன்று பேரும். விசாரணைக் குழு தீர விசாரணை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதாக ஏற்பாடு.

ஒரு நல்லநாள் பார்த்து மக்கெனி என்ற ஊருக்கு வெளிக்கிட்டோம். நல்ல நாள் என்றால் அட்டமி, நவமி, மரணயோகம் பார்த்து அல்ல. மக்கெனி 200 மைல் தள்ளி இருக்கும் ஒரு சிறுஊர். சனி, ஞாயிறு என்றால் அங்கு பீர் தீர்ந்து விடும். திங்கள்தான் பீர் வரும் நாள். ஆகையால் கணக்குப் பார்த்து செவ்வாயே வெளிக்கிட்டோம்.

மந்திரி ஆள்படையோடு மூன்று வாகனங்களில் முன்னால் போய்க் கொண்டிருக்கிறார். நாங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நல்ல ஸ்பீடில் போய்க் கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு பின்னே ஒரு கார் விடாமல் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. "பாம், பாம்" என்று சத்தம் போட்டபடியே. அங்கே எல்லாம் பின்னால் வரும் வாகனத்துக்கு வழிவிட மாட்டார்கள். "இவனுக்கென்ன நான் வழிவிடுவது' என்ற மனப்பாங்குதான். மானப்பிரச்சினை, வழிகேட்டு வழிவிடாமல் பெரிய சண்டைகள் எல்லாம் நான் பின்னாலே பார்த்திருக்கிறேன்.

க்காணு தன் பாட்டுக்கு ஓட்டிக் கொண்டே இருக்கிறான் வழிவிடக்காணோம். பின்னால் வாறவனோ "பாம், பாம்" என்று சத்தம் கொடுத்தபடியே வாறான்.

"க்காணு, கிவ்ரோட்பா"

"வழிவிடப்பா அவனுக்கு" என்றேன். க்காணு என்னைக் கண்ணாடியில் பார்க்கிறான். ஆனால் வழிவிடவே இல்லை.

"வழிவிடு, வழி விடு" என்று நான் சத்தம் போட்டதும் க்காணுவின் முகம் சுருங்கி விட்டது. வேண்டா வெறுப்பாக ஒதுங்கினான். பின்கார் விரைந்து முன்னாலே போய் விட்டது.

வழிநெடுக சிவப்பான மண்மலைகள். திடீரென்று தோன்றும் கல்பாறைகள், "கொலபஸ்' என்று சொல்லப்படும் ஒரு சாதிக் குரங்கு காட்டும் விளையாட்டுக்கள், இவையெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே வருகிறேன். நல்ல இளம் வெய்யில். எண்ணெய்க் கறுப்பான பெண்கள் விதம்விதமான கலர் லப்பாத் துணிகள் அணிந்து வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சில தாய்மார்கள் முதுகிலே கட்டியபடி குழந்தைகள். அவர்கள் அங்குமிங்கும் அசையும் போது குழந்தைகளும் ஒவ்வொரு பக்கமாகச் சாய்ந்து அதை ஒரு விளையாட்டுப் போல அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

சடுதியில் க்காணு "மாஸ்ட, மாஸ்ட லுக்" என்றான். அப்படிச் சொல்லிவிட்டு வாயைத் திறந்து சிரிக்கத் தொடங்கினான். எங்களை இருபது நிமிடம் முந்தி ஓவர்டேக் பண்ணிப் போன கார் ஒரு வளைவில் ஒரு லொறியுடன் மோதி நொருங்கிப் போய் இருந்தது. அதில் போன சாரதியும் பயணியும் இறந்து போக லொறி குப்புறக் கிடந்தது. பொலீஸ் வானும், ஒரு சிறுகூட்டமும் சுற்றிவர. காரைக் கொஞ்சம் ஸ்லோ பண்ணி முழு விபரத்தையும் கண்களால் சேகரித்துக் கொண்டு மறுபடியும் காரை முடுக்கி விட்டான். "மாஸ்ட, மாஸ்ட டொண், டொண்". "அவர்களுக்கு எல்லாம் முடிந்து விட்டது" என்று சொல்லி விட்டு மறுபடியும் பலமாக "ஹி ஹி" என்று திரும்பிப் பார்த்தபடியே சிரித்தான்.

எனக்கு மனதை என்னவோ செய்தது. அவர்களுடைய சாவு என் தலையில் விழுந்தது போல், என் நாக்கிலே ஏதோ சனியிருந்திருக்க வேண்டும். நான் க்காணுவை 'வழிவிடு, வழிவிடு' என்று சொல்லாமலே இருந்திருக்கலாம். அல்லது அரை செகண்ட் முந்தி சொல்லியிருக்கலாம். அப்படியென்றாலும் அவர்கள் தப்பியிருப்பார்கள். அரை செகண்ட் பிந்தி யாவது சொல்லியிருக்கலாம். அப்படியும் தப்பியிருப்பார்கள். என்னத்திற்கு சரி கரெக்டாக அந்த நேரம் பார்த்துச் சொன்னேன். அவர்களுடைய சாவு என்னுடைய அந்த ஒரு சொல்லினால்தான் ஏற்பட்டது என்று எனக்கு நிச்சயமாகப்பட்டது. நாங்கள் மக்கெனி போய் இறங்கியதும் இது பற்றி யாரிடமாவது கதைக்க வேண்டும்



போல இருந்தது. ஆனால் என்னுடன் வந்தவர்களோ, மற்றவர்களோ இதைச் சட்டை செய்யவே இல்லை. ஒரு நாளைக்கு இரண்டு மூன்று விபத்துக்கள் இப்படி நடப்பது சாதாரணம்தான். வழிவழியே விபத்துக்கள் நடப்பதும் செத்த உடல்கள் சிதறிக் கவனிப்பாரற்றுக் கிடப்பதும் போகப்போக பின்னால் எனக்குப் பழகி விட்டது. ஆனால் அப்ப தெரியவில்லை.

மந்திரி இறங்கியவுடன் முதல் கேட்ட கேள்வி "பீர் இருக்கிறதா" என்றுதான்.

இல்லை ஐயா, ஆனால் கெதியில் வந்துவிடும்" என்றான் எங்களை வரவேற்ற ஊர் அதிகாரி. மந்திரி நாங்கள் வந்த வேலையை ஒரு கூட்டம் கூட்டி விளக்கிவிட்டு விசாரணையைத் தொடக்கினார்

அந்த விசாரணையை விஸ்தரித்தால் மூன்று புத்தகங்கள் எழுதி விடலாம். எங்கள் ஊரில் சொல்வார்கள் "அம்பட்டன் வீட்டுக் குப்பையைக் கிளறக் கிளற மயிர்" என்று. அது போலத்தான. குப்பையை வைத்து ஒரு குப்பையும் கொட்ட ஏலாது. "சுற்றிச் சுற்றிச் சுப்பற்றை கொல்லை" என்பது போல விசாரணை திசை தெரியாமல் போய்க் கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட விசாரணையில் ஒரு சங்கடம். வழக்கமாக பொய்களும், உண்மைகளும் கலந்து கலந்து வரும். பொய்களைக் களைந்து விட்டால் உண்மை வெளிப்படும். அப்படி சிம்பிள். ஆனால் மேற்கு ஆபிரிக்காவில் விஷயமே வேறு. அங்கே பொய்க்கு மேல் பொய்வரும். சின்னப் பொய், பெரிய பொய், புளுகுணிப்பொய், அண்டப்பொய், ஆகாசப்பொய் என்று பலவிதம். இதில் 'புருடா' வேறு. அதில்போய் உண்மையைக் கண்டுபிடிக்கிறதென்பது லேசுப்பட்ட காரியமா? அங்கு பொய் பேசுவதை ஒரு கலையாகவே போற்றி வளர்க்கிறார்கள். அதற்கு ஒரு கெட்டித்தனம் வேண்டும். பல நாள் பயிற்சியும் விடாமுயற்சியும் தேவை. பொய் என்றால் முகத்தில் அடித்தது போல முட்டாளாக்கும் பொய்தான்.

"என்னப்பா எட்டு மணிக்கு வாறதென்றிட்டு பத்து மணிக்கு வாறியே?"

"இல்லையே மாஸ்ட! நான் எட்டு மணிக்கே வந்திட்டேனே?"

அப்ப ஏன் உள்ளே வரவில்லை?"

"உங்களை குளப்ப வேண்டாம் என்று அப்படியே அந்த மரத்தடியில் இருந்திட்டேன்"

"இருபது தரம் உன்னை வந்து வெளியிலே தேடினேனே?"

"நான் பார்த்தேன், நான் பார்த்தேன்"

"அப்ப ஏன் உள்ளே வரவில்லை".

"ஐயோ, எனக்கு நீங்கள் என்னைத் தான் தேடுகிறீர்கள் என்று தெரியவில்லையே?"

இப்படியே போய்க் கொண்டிருக்கும். எண்ணெய் பூசிய பாம்பு போல வழுக்கிக் கொண்டே போவார்கள். பிடிபடவே மாட்டார்கள்.

காலி பீர் போத்தல்களெல்லாம் ஒரு பக்கம் குவிந்து கிடந்தன. பைல் கட்டுகள் ஒன்றன் மேல் ஒன்றாக மக்கெனி மலையைப் போல வளர்ந்த வண்ணம் கிடந்தது.

பேப்பர்கள். நகல்கள், புத்தகங்கள், லெட்ஜர்கள் என்று வந்தபடியே இருக்கு. கையிலே பசையைப் பூசிவிட்டு தொட்டதெல்லாத்தையும் குருவி போல சேர்த்தோம். கழுகு போல காவாந்து பண்ணினோம்.

'ஏண்டா, இப்படி வந்து மாட்டினோம்' என்று இருந்தது எனக்கு. பெருச்சாளியைக் காரால் அடித்து தின்கிறது சரி. கார் விபத்திலே இறந்தவனைப் பார்த்து சிரிக்கிறார்களே! இது பத்தாதென்று பொய்பேசுவதில் தங்கள் வித்வத்தன்மையை நிரூபிக்க என்ன பாடுபடுகிறார்கள். இவ்வளவும் இருக்க நான் என்ன வெட்டி விழுத்தப் போறேன். எனக்கு முன் இருந்த அதிகாரி ஆறு மாதத்திலேயே வேலையை உதறி விட்டு ஓடியது காரணமில்லாமலா?

எங்கள் கண்களும், காதுகளும் 'எங்கே ஒரு சின்ன ஓட்டை விழும்' என்று ஏங்கியபடியே இருந்தன. ஒரு சின்ன ஓட்டையைக் கண்டால் அதைப் பெரிதாக்க ஒன்பது வழிகள் தெரியும் எங்களுக்கு; அதுதானே எங்கள் பிழைப்பு.

அன்று இரவு எட்டு மணி போல மந்திரி தனது பதினாறாவது பீர் போத்திலைக் காலி செய்தார். முதலாம் நாள் போர் முடிவின் போது தர்மராஜனும் பரிவாரங்களும் விசனத்துடன் குனிந்தபடி கூடாரங்களுக்கு போனது போல மந்திரியும் நாங்கள் பின் தொடர தங்குமிடத்துக்குப் புறப்பட்டார். இப்படியாகத்தான் விசாரணை தொடர்ந்தது. சாட்சிகளுடைய வாக்குமூலங்கள் பக்கம் பக்கமாக குவிந்தன. என் மனமானது 'பக் பக்' என்று அடித்துக் கொண்டேயிருந்தது.

விசாரணை குறுக்குவிசாரணை என்று நேரம் ஓடியது. என்னோடு வந்த குழுவினர்கள் எல்லோரும் நல்ல வாய்ச் சொல் வீரர்கள். ஆனால் பேனை பிடித்து எழுதுவதென்றால் என் தலையில் தான் விழும். என் மனம் கணக்குப்போட்டபடியே இருந்தது. இது வரை வந்தது இருநூறு பக்கமாவது தேறும். இன்னும் இழுத்துக் கொண்டே போனால் எங்கே போய் முடியுமோ?

இரண்டாவது நாளும் பலன் இல்லை. இப்ப விசாரணை அறை பார்க்க மிகவும் ரம்மியமாக இருந்தது. காலி பீர் போத்தல் எந்தப் பக்கம் திரும்பினாலும் குவிந்து கிடந்தது. நிற்கவும், நடக்கவும், இடம் இல்லை. பிள்ளைகள் 'ரைட்டோ' விளையாடுவது போல் பாய்ந்து பாய்ந்து தான் போக வேண்டும். சூரியனும் எங்கள் பரிதாபத்தைக் காணச் சகிக்காமல் மக்கெனி மலைகளில் அஸ்தமனமானான். அன்று இரவு மக்கெனி மக்கள் மந்திரி குழுவினருக்கு ஒரு விமரிசையான விருந்து ஏற்பாடு பண்ணியிருந்தார்கள்.

விருந்து என்றால் குடிவகை, சாப்பாடு, நடனங்கள் என்று குசாலான விஷயம்தான். முகமூடி ஆட்டத்தைத் தொடர்ந்து இளம் பெண்கள் மந்திரியாரைச் சுற்றி ஆடியபடியே வந்தார்கள். வாத்தியங்களில் ட்ரம்முக்கு தான் முக்கிய இடம். அதன் ஒவ்வொரு அடியும் 'த்தும், த்தும்' என்று விழத் துள்ளி துள்ளி ஆடாமல் எப்படி இருக்க முடியும். பெண்கள் என்றால் எல்லோருமே பொறுக்கி எடுத்த இளம் குமரிகள்தான். கன்னங்கரேல் என்ற நிறம். இரும்பு உடம்பு. கால்களை முன்வைத்து உதைத்து பின்னுக்கு போய் 'ரிதம்' தவறாத ஆட்டம். அவர்களுடைய பெரிய பின்பகுதிகள் இடம்வலமாக அசைந்து நல்ல மனசையும் சங்கடப்படுத்தும். எங்கள் பக்கத்து பெண்களைப் போல தலைகுனிந்து பார்க்காது. கண்களும், மார்புகளும் நிமிர்ந்து தான் நிற்கும். ஒவ்வொரு ரவண்டும் முடிந்தவுடன் எங்களைச் சுற்றிக்

—▷14

*1964ல் வெளிவந்த அக்கா எனும் சிறுகதைத் தொகுதி மூலம் சிறந்த சிறுகதை எழுத்தாளராகக் கணிப்புக்குள்ளான அ.முத்துலிங்கத்தின் இரண்டாவது தொகுதியான திகடசக்கரம் முப்பத்தியிரண்டு வருடங்களுக்குப் பிறகு வெளியாகியுள்ளது. அத்தொகுதியிலிருந்து இக்கதை பிரசுரமாகிறது.*

*--ஆ-ர்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தபால் திணைக்களம் நவீனமயப்படுத்தப்படும். தரம் பிரிக்க இயந்திரங்கள் வருகின்றன. ஒவ்வொரு தபால் நிலையத்துக்கும் தனித்தனி குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அக்குறியீட்டு எண்களை எழுதுவதனால் இயந்திரத்தின் தரம் பிரிப்புக்கு இலகுவாக இருக்கும்....

இப்படி எத்தனையோ செய்திகள் நாளும் பொழுதும் பத்திரிகைகளிலும் செய்தி ஊடகங்களிலும் வெளியாகிக் கொண்டிருக்கின்ற போதிலும், உண்மையில் தபால் சேவை கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போகின்ற கதை உரியவர்களுக்குத் தெரியாமற் போக நியாயமில்லை.

இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் எந்த மூலையில் கடிதம் தபாலிடப்பட்டாலும் இருபத்து நான்கு மணி நேரத்துக்கு முன்னதாகவே இலங்கையின் எப்பாகமாயினும், விலாசதாரரிடம் சேர்ந்து விடும் என்ற அசையாத நம்பிக்கை பொது மக்களிடம் இருந்தது.

உதாரணமாக திருகோணமலை தபாற் கந்தோரில் செவ்வாய் மாலை ஏழுமணிக்குக் கூடத் தபாலிடப்படும் கடிதம் ஒன்று கொழும்பில் அடுத்தநாள் புதன்கிழமை காலை 9 மணிக்குள்ளாகவே உரிய இடம் சேர்ந்து விடும். இவ்வாறே மட்டக்களப்பு, கண்டி, காலி, அனுராதபுரம், வவுனியா கடிதங்களும் கிடைத்து விடுகின்றன. ஆனால் யாழ்ப்பாணக் கடிதங்களைப் பொறுத்த வரையில் புகையிரதம் நீண்ட தூரம் பயணம் செய்வதால் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதன்படி கொழும்புக் கடிதம் ஒன்று திருகோணமலை நகரத்தில் காலை எட்டுமணிக்குள்ளாகவே விநியோகிக்கப்பட்டு, தபால் சேவகர்கள் திரும்பி வந்து எட்டரைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கடிதங்களை இரண்டாவது விநியோகத்துக்காக எடுத்துச் செல்வர். அந்த பஸ் கூட வரும் வழியிலுள்ள தபாற் கந்தோர்களுக்கு அவ் அவற்றுக்குரிய கடிதப் பைகளை விநியோகம் செய்து விட்டு, அங்கிருந்து தான் வரும் இடங்களுக்குச் சேர வேண்டியவைகளைப் பெற்று உரிய இடங்களில் சேர்த்தும் எட்டுமணிக்கு திருகோணமலைக்கு வந்து விடும். இந்த நடைமுறைகள் தூரத்திற்கேற்ப வேறுபட்டாலும் ''இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் எவ்விடத்துக்கும் கடிதம்'' என்ற விநியோகச் சீர்மை பிழைக்கவில்லை.

### பழங்கதையான பயணிக்கும் அஞ்சலகம்;

தபால் புகையிரதங்கள் என்பவை வடக்கு கிழக்கு இளைஞர்கள் பலருக்கு இன்று தெரியாத ஒன்று. இரவிரவாக சேவையிலீடுபடும் இத்தபால் புகையிரதத்தில் ஒரு பெட்டி ''பயணிக்கும் அஞ்சலகம்'' என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் தபால் அதிபர்களும் தரப்பிரிப்போரும் இவ் அலுவலகத்தில் பணியாற்றுவர். இதன் சேவை காரணமாக கடைசிக் கடிதம் வரை துல்லியமாகப் பரிசீலிக்கப்பட்டு அடுத்த நிலையத் தபால் கந்தோருக்குரியவை இறுதி நேரத்தில் பையிலிடப்பட்டு சேர்ப்பிக்கப்படும். இச்சேவை கடிதங்கள் துரித கதியில் போய் சேருவதற்கு வழிவகுத்தன.

இவையெல்லாம் இன்று பழங்கதைகள் ஆகி விட்டன. நாட்டின் எந்தப் பகுதிகளுக்கும் உத்தரவாதம் தரத்தக்க விநியோகம் கிடையாது. வடபுலத்துக்கு கடிதத் தொடர்பே அற்றுப் போய்விட்டது. அமைதியற்ற சூழலை அரசு காரணமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டாலும், உண்மையில் அது அரசின் கையாலாகாததனத்தையே காட்டுகிறது. முத்திரை ஒட்டுவதன் மூலம் சேவைக்கான பணத்தை முன்னரேயே செலுத்தும் ஒரு பொதுமகனுக்கு பொறுப்பேற்ற சேவையை செய்யாமல் விடுவது தனியார் நிறுவனத்துக்கு கூடத் தலைகுனிவு எனின் அரசின் அவலம் எத்தன்மையது என்பது சொல்லாமலே விளங்க வேண்டும்.

இத்தகைய அரச உதாசீனப் போக்கால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்ப் பேசும் மக்களே. காலையில் மரணமடைந்த ஒருவரது இறுதிக் கிரியைகள் மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று திட்டவட்டமாக அறிவித்ததோடு, தமது உறவினர்களுக்குத் தந்தி கொடுத்து விட்டு அவர்களை அழைத்து வர பஸ் நிலையத்துக்கு ஆளனுப்பி வைத்த வடகிழக்கு மக்கள், தந்தைக்குத் தெரியாமல் தமையனின் பிரேத அடக்கத்தையும், மனைவி அறியாமல் கணவனின் ஈமக்கிரியைகளையும் மேற்கொள்கின்றார்கள் என்றால் இந்த அவலத்துக்கான காரணங்களிலொன்று அரசும் அது வழங்கும் வடகிழக்கு தபால் சேவையும்தான். இத்தகைய நிகழ்வுகளைச் சந்தித்திருந்தால் மட்டுமே இவ் வரிகளின் தாற்பரியத்தை ஒருவரால் உணர்ந்து கொள்ள முடியும்.

### தாமதிக்கும் தந்திச் சேவை:

பழைய தொலைபேசிகளையும், கிரீட் இயந்திரங்களையும் வைத்துக் கொண்டு துரிதமாக நடத்தப்பட்ட தந்திச் சேவை எங்கே; நவீன 'பஃக்ஸ்' இயந்திரங்கள் வந்த பின்னும் நாட்கணக்கில் தாமதமாகும் இன்றைய தந்திச் சேவை எங்கே? இத்தகைய துயரங்கள் நாட்டின் ஏனைய மக்களுக்கு எப்போதாவது நிகழக் கூடும். ஆனால் வடகிழக்கு மக்களுக்கோ எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

போக்குவரத்துப் பகுதிவேலைகள் புலிகளால் தடைப்பட்டுப் போயிருக்கின்றன என அரசு வெட்கத்தை விட்டுச் சொன்னாற் கூட இராணு வீரர்களின் கடிதங்கள் எவ்வளவு விரைவாக உரிய இடத்தில் சேர அரசு வழிவகுத்துள்ளது என்பது எவர்க்கும் புரியாத விடயமல்ல. அவர்களின் கடிதங்களுக்கு விமானங்களையே ஈடுபடுத்திச் சேவைபுரியும் அரசு, தமிழ் மக்களின் உணர்வுகளைக் காலில் போட்டு மிதித்து வடபகுதி மக்களை தபால் தொடர்பு கூட அற்ற நிலையில் தவிக்க விடுவது எந்த வகை நியாயத்தைச் சாரும்?

தபால் தந்திகளை விடுவோம்: பயங்கரவாதத்தால் போக்குவரத்துக்கள் சீர்குலைந்து விட்டன என்று ஒப்புக்காக ஏற்றுக்கொண்டாலும் வடகிழக்கின் தபால் திணைக்கள நிர்வாகத்தில் மட்டும் என்ன நடக்கிறது? அதிற் கூட எக்கேடென்றாலும் கெட்டுப் போகட்டும் என்ற மனப்பாங்கில் தானே அரசு செயல்படுகிறது...?

### சிங்கள அதிகாரிகளின் பதவி உயர்வுக்கான டக் - டிக் - டோஸ் ஆட்டம்:

வடக்குக் கிழக்கு மாகாண தபால் திணைக்களம் சிங்கள அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்க உபயோகிக்கப்படும் ஒரு 'பொயின்ற்' ஆகவே தற்போது இருந்து வருகிறது. நுண்ணாய்வுப் பரிசோதகர் அல்லது மாவட்டத் தபால் அத்தியட்சகர் பதவிக்கு ஒரு சிங்கள அதிகாரியை உயர்த்த வேண்டுமானால் அதற்கு வழி வடக்கு கிழக்கில் அவருக்கு நியமனம் வழங்குவது என்று தபால் திணைக்கள உயர்பீடம் தீர்மானிக்கும்.

சிங்களப் பகுதிகளில் அத்தகைய பதவி உயர்வுகளுக்கு ''காடர்'' இருக்காது. ஆனால் தமிழ்ப்பகுதிகளிலோ இத்தகைய தேவை கருதி எப்போதும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் பாதுகாத்து வைக்கப்பட்டே இருக்கும். தகுதியான அதிகாரிகள் தமிழர்களில் இருந்தும் அவை நிரப்பப்படாமல் தமிழ் அதிகாரிகளினால் 'பதிலீடாகவே' அவை நிரப்புவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும்.

திடீரென அந்த தமிழ் அதிகாரிக்கு கொழும்பிலிருந்து கடிதம் வரும். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராக அல்லது நுண்ணாய்வுப் பரிசோதகராக ஒரு சிறிசேனவோ, ஒரு சேனாதிரவோ நியமிக்கப்பட்டிருப்பதாகவும், குறித்த திகதியிலிருந்து அவர் அப்பதவியை ஏற்பார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

தற்காலிகமாக அப்பதவியை வகித்துவந்த தமிழ் அதிகாரியோ நிலை குலைந்து போவார். வருபவர் இவரை விட ஒரு ஜுனியராகவே பெரும்பாலும் இருப்பார். முறைப்படி தகுதி தனக்கிருந்தாலும் மறுக்கப்பட்ட அந்தக் கதிரையைப் பார்த்து ஏங்குவதைத் தவிர அந்தத் தமிழ் அதிகாரிக்கு வேறு வழி இருப்பதில்லை.

நியமனம் பெற்றவரோ இந்த வாரம் வருகிறேன்; அடுத்த வாரம் வருகிறேன் என்று தொலைபேசியில் கொழும்பில் இருந்து கொண்டே அறிவித்தல் கொடுத்துக் கொண்டிருப்பார். இரண்டொரு வாரங்கள், சில சமயம் இரண்டொரு மாதங்களும் ஆகக் கூடும். கொழும்பில் இருந்து கடிதம் வரும். அந்த அதிகாரி மாற்றம் பெற்றுவிட்டார்: நீரே தொடர்ந்து பதிலாளராக அப்பதவியில் இரும் என்று காணப்பட்டிருக்கும். தமிழ் அதிகாரியோ கதிரை போகாமல் விட்டதே இப்போதைக்குப் போதும் என்று நிம்மதி கொள்வார். சிங்கள அதிகாரியோ 'கொடுத்த நியமனத்தை மீளப் பெற முடியாது' என்ற கோட்பாட்டில் எவ்வித வேலையும் இல்லாமல் எங்காவது ஓரிடத்தில் இருந்து கொண்டு 'புதிய' சம்பளம் எடுத்துக் கொண்டிருப்பார்.

இது வடக்கு கிழக்கு தபால் உயரதிகாரிகளுக்கு அடிக்கடி நடக்கும் பிரச்சினை. பதவி உயர்வு வரும் போது எங்காவது போய் கடமை புரிவேன் என்று தமிழர்களை வீழ்த்தி நியமனம் பெறுவதும், நியமனம் கிடைத்த பின் புலிகளைக் காரணம் காட்டி மாற்றம் பெறுவதும் சிங்கள அதிகாரிகளுக்கு அரசால் அனுமதி வழங்கப்பட்ட டக் - டிக் - டோஸ் ஆட்டம் என்றாகிவிட்டது.

### தபால் திணைக்களமும் தமிழர்களை ஒதுக்குகிறது:

இதன்படி தற்போது வடக்கு கிழக்கில் நிரப்பப்படாது வைக்கப்பட்டிருக்கும் பதவிகளாவன: பிரதித் தபால் மா அதிபதி யாழ்ப்பாணம். நுண்ணாய்வுப் பரிசோதகர் பதவிகள் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும், மட்டக்களப்பில் அஞ்சல் அத்தியட்சகர் பதவியும், பிராந்திய பிரிவாக உத்தியோகஸ்தர் பதவியும் இவைகள் தற்போது எல்லாவகையிலும் தகுதியுள்ள ஆனால் பதவி உயர்வு மறுக்கப்பட்ட அதிகாரிகளால் பதிலீடாக நிரப்பப்பட்டுள்ளன.

இதே வேளை -கண்டி, காலி, குருநாகல் மாவட்டங்களுக்கு தலா இரண்டு அஞ்சல் அத்தியட்சகர் பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிளிநொச்சியில் ஏற்கெனவே இயங்கி வந்த அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் மூடப்பட்டு அப்பதவி ஒழிக்கப்பட்டுள்ளது. கல்முனைக்கு ஒரு அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு அமைக்கப்பட வேண்டியது வளர்ந்து வரும் தேவையாகும்.

திருகோணமலை அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் திருகோணமலை மேற்கு, முள்ளிப்பொத்தானை, கிளிவெட்டி, பெரியபாலம், கன்னியா, கோமறன்கடவல, திரியாய், குச்சவெளி, சாம்பல்தீவு ஆகிய உபதபாலகங்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்த தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மட்டுநகர், வவுனியா, மன்னார் பகுதிகளிலும் இவ்வாறான பிரச்சினைகள் உண்டு. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளில் தொலைபேசி காணாப் பொருட்களாகிவிட்டன.

### தனிச் சிங்களச் சுற்றறிக்கை:

வடக்கு கிழக்கில் தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் சுற்றறிக்கைகளில் 99வீதமானவை தனிச் சிங்களத்திலேயே வெளிவருகின்றன. இதனால் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பாக உபதபாலதிபர்களுக்கு பெருஞ் சிரமங்கள் ஏற்படுகின்றன.

சகல அஞ்சல் அலுவலகங்களிலும் ஆளணியின் அரைவாசித் தொகைக்குக் குறைவான அஞ்சல் உத்தியோகத்தர்களே கடமை புரிகின்றனர். சில அஞ்சலகங்கள் அஞ்சல் உத்தியோகத்தர் எவருமே இன்றி இயங்கும் வேடிக்கைகளும் வடக்கு கிழக்கில் சாதாரணம். இவ்வலுவலகங்களுக்கு அந்தந்த மாவட்ட அலுவலகங்களிலிருந்து (அங்கு உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவினாலும் கூட) அதிகாரிகள் தினமும் அனுப்பப்பட்டு அவை இயங்க வைக்கப்படுகின்றன. நாடு பூராகவும் முன்னூறுக்கு மேற்பட்ட தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் பதவிகள் தபால் திணைக்களத்தால் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இவற்றில் பெருவாரியானவை வடக்கு கிழக்கில் உள்ள வெற்றிடங்களாகும்.

இக்கட்டுரையை வடக்குக் கிழக்குக்கு வெளியே உள்ள ஒரு வாசகர் படிக்கும் போது வியப்படையக் கூடும். ஆனால் உண்மை எப்போதும் உண்மையே. தமிழ்ப் பேசும் மக்களைத் திணைக்களங்களூடாகவும் பழிவாங்கலாம் என்பதற்கு தபால் திணைக்களமும் சான்றாகும்.

**விவேகி.**

---

# பெருச்சாளி..

கைதட்டிக் கொண்டே வருவார்கள். பக்கெட்டுக்குள் கையை விட்டு காசையெடுத்து எறிய வேணும். மந்திரி பெண்களைக் கட்டிப் பிடித்து தடவியபடி வெகுநேரம் ஆடினார்.

அடுத்த நாள் விசாரணை வழமை போல் தொடங்கவில்லை. மந்திரி லேட். அதனால் விசாரணை இரண்டு மணி நேரம் தள்ளி ஆரம்பித்தது. ஆமை வேகத்தில் தான் விசாரணை. பதினொரு மணியிருக்கும். ஊசிக் கண் போல ஒரு சின்ன ஓட்டை. அவ்வளவு தான். இரண்டு மணி நேரத்துக்குள் விறுவிறென்று நாங்கள் ஒரு ஆள் போகும் அளவுக்கு அந்த ஓட்டையை விஸ்தரித்து விட்டோம்.

மந்திரியார் முகத்தில் பெருமிதம். எங்களுக்கோ மகிழ்ச்சி. இனி என்ன? எல்லா தடயங்களையும், சாட்சியங்களையும், வாக்குமூலங்களையும் வரிசைப்படுத்தி எங்கள் தேவைக்கு ஏற்றமாதிரி ஒரு அறிக்கை தயாரிக்க வேண்டியதுதான் பாக்கி. அதற்குத் தான் நான் ஒரு மடையன் இருக்கிறேனே!

ஆறுமணியளவில் நாங்கள் களைத்துப் போய் கடையை மூடத் தொடங்கினோம். அப்பதான் 'மஸக்கோய், மஸக்கோய் என்று ஒரு கிழவன்; வயது 65,70 இருக்கும். ஊருக்கும் பெரியவர்; எல்லாருடைய நல்மதிப்பும் பெற்றவர்; எங்களைப் பார்க்க விரும்புகிறாராம்.

'இது என்னடா புது வம்பு' இந்த நேரத்தில். மந்திரி எங்களைப் பார்க்க நாங்கள் வேறு திசையில் பார்க்கிறோம். எல்லோருக்கும் அவசரத்தில் பறந்தார்கள். அநியாயத்துக்கும் மேலே அநியாயம். பீர் எல்லாம் முடிந்து விட்டது. மந்திரி சொன்னார் ''அஞ்சு நிமிடம் மட்டும்'' என்று.

மஸக்கோய் ஒரு தடியை ஊன்றியபடி மெல்ல மெல்ல நடந்து வந்தார். அவருக்கு ஒரு அவசரமுமில்லை. பீர் முடிந்த கதை அவருக்கு எங்கே தெரியப்போகுது?

கறுத்த நெடிய உருவம். சுருள் சுருளாகத் தலைமுடி, சாடையாக நரை கரையோரத்தில். நிமிர்ந்த நடை. எங்களை ஊடுருவிப் பார்த்தார். கையிலே வைத்திருந்த தடியால் மெலிதாக ஊன்றியபடியே நின்றார். கைகளில் மட்டும் சிறிய நடுக்கம்.

நாகரீகமான நடையிலே சரளமாகப் பேசத் தொடங்கினார்:

''மதிப்பிற்குரிய மந்திரியாரே, விசாரணைக் குழுவினரே''

உங்கள் நேரத்தை நான் வீணடிக்க வரவில்லை. ஒரு சிறுகதை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.''

''ஒரு ஊரில் ஒரு விவசாயி. அவன் கஷ்டப்பட்டு ஒரு கிழங்குத்தோட்டம் போட்டிருந்தான். அவனுக்கு சனியாக வந்த ஒரு பெருச்சாளி அவன் கிழங்குகளை எல்லாம் நாசமாக்கிக் கொண்டு வந்தது. அவனோ பரம ஏழை. 'அவனா, பெருச்சாளியா' என்ற அவல நிலை. பாவம், அவன் என்ன செய்வான்?''

''ஒரு பெருச்சாளிப் பொறி வாங்கி தோட்டத்திலே இடம் பார்த்து மறைவாக வைத்தான். ஆனால், பெருச்சாளி பெரிய கை தேர்ந்த பெருச்சாளி. தப்பிக் கொண்டே வந்தது.''

''ஒரு நாள் அதிகாலையில் பொறி வைத்த இடத்தில் இருந்து பெரிய சத்தம். விவசாயியின் எட்டு வயது மகன் ஓடோடிச் சென்றான என்னவென்று பார்க்க. பொறியில் பிடிபட்டது ஒரு கருநாகம். முற்றிலும் சாகாத நிலையில் அப்படியும், இப்படியும் ஆக்ரோஷத்துடன் தலையை அடித்துக் கொண்டிருந்தது. பொறிக்குத் தெரியுமா அது பெருச்சாளியைப் பிடிக்க வைத்த பொறி என்று. கிட்ட வந்த பாம்பை தவறுதலாகப் பிடித்து விட்டது. தள்ளி நின்று புதினம் பார்த்தான் பையன். பிரண்டு, பிரண்டு அடித்த பாம்பு அவனை எட்டிக் கொத்தி விட்டது.''

''விவசாயியும், மனைவியும் 'குய்யோ, முறையோ' என்று தங்கள் தலையில் அடித்து அடித்துக் கதறினார்கள். பாம்பையும் ஒரே அடியில் கொன்று போட்டாகி விட்டது. ஊர் முழுக்க அழுதது. பையனுடைய இறந்த சடலத்தை கொண்டு போய் புதைத்தார்கள்.''

''பன்னிரண்டு நாள் துக்கம் அனுட்டிக்க வேணும். பன்னிரண்டாம் நாள் ஊர் வழக்கப்படி பந்து சனம் எல்லோரையும் கூப்பிட்டு விருந்தும் கொடுக்க ஏற்பாடு. ஏழை விவசாயியிடம் என்ன இருக்கு? கனகாலமாக வளர்த்த ஒரு ஆடு. அதை வெட்டி எல்லோருக்கும் விருந்து வைத்தான்.''

இந்த இடத்தில் மஸக்கோய் கொஞ்சம் கதையை நிற்பாட்டி விட்டு இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்தார். நாங்கள் 'இனி என்ன வரப்போகுதோ' என்று மூச்சு விடாமல் காத்திருந்தோம். தொண்டையைச் சரி செய்து கொண்டு மஸக்கோய் தொடர்ந்தார்.

''பெருச்சாளியைக் கொல்லத்தான் பொறி வைத்தான் கமக்காரன். ஆனால் அவனுடைய பிள்ளை இறந்தது. பிறகு பாம்பும் செத்தது. அதற்குப் பிறகு அருமையாக வளர்த்த ஆடும் செத்தது. பெருச்சாளி மட்டும் இன்னும் ஓடிக் கொண்டே இருக்கிறது''

இவ்வளவுதான். மஸக்கோய் இதைச் சொல்லி விட்டு விடு விடென்று போய் விட்டார்.

எங்கள் முகத்தில் ஈயாடவில்லை. நாங்கள் ஒருவரை ஒருவர் பார்ப்பதை தவிர்ப்பது கூட கஷ்டமாகி விட்டது. கடகடவென்று குனிந்த தலைநிமிராமல் மூட்டையைக் கட்டத் தொடங்கினோம்.

நன்றி: 'திகடசக்கரம்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## அபூநிதா ல் ஒரு முஸ்லிம் பிரபாகரன்?

சரிநிகர் பத்திரிகையில் ''அபூநிதால்'' என்ற புனை பெயரில் பல சமூகங்களினதும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை விமர்சித்து வரும் கட்டுரையாளருக்கு எமது பாராட்டுக்கள். இருந்தும் கண்மூடியும் சில வேளைகளில் விமர்சிப்பது வரவேற்கக் கூடிதொன்றல்ல. சரிநிகர் இதழ் 90ல் ''முஸ்லிம் காங்கிரஸ் எங்கே போய்க்கொண்டிருக்கிறது'' எனும் தலைப்பிலான அவரது விமர்சனம் பாராட்ட வேண்டியதும் கண்டிக்க வேண்டியதுமாக காணப்படுகின்றது. நான் சொல்வதெல்லாம் உண்மை என்பது நிதர்சனமாக யூகிக்கும் மனிதர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளில் முஸ்லிம்களைப்பற்றிச் சொல்லப்படாததும், அவர்களுக்கு எவ்வாறான தீர்வு வழங்கப்படும் என்பதைப்பற்றி சொல்லப்படாததும் உண்மையே! அதற்காக வேண்டாத விடயங்களை வைத்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசையும் அதன் தலைமைத்துவத்தையும் விமர்சிப்பது அவ்வளவு உசிதமான காரியமல்ல. இதனால்தான் சரிநிகர் 92 இதழில் ''மர்சூக்கின் கோபம் இது'' எனும் தலைப்பில் தனது விசனத்தை மர்சூக் காட்டியுள்ளார்.

தமிழர்களுக்கு மாகாணசபை கிடைத்தால்தான் முஸ்லிம்களுக்கு மாகாணசபை. தமிழர்களுக்கு எதுவுமில்லையென்றால் முஸ்லிம்களுக்கு ஒன்றுமில்லை என்று அஷ்ரஃப் சொன்னது அபூநிதாலுக்கு தெரியாதா? தெரிவுக்குழு பிரச்னைக்கு தீர்வு காணலாம். அல்லது காணாமலும் விடலாம். ஆகவே தீர்வு காணும் போது முஸ்லிம்களுக்கு தீர்வு கிடைக்குமென மேலுள்ள பேச்சிலிருந்து புரிய முடியாதா? முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் இருந்ததன் காரணத்தால்தான் முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெற்றது. அது மட்டுமல்லாமல் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பல முறை முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிடின் தமிழர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படாது என கூறியதை உங்களால் அறிய முடியவில்லையா?

சந்திரிகா - அஷ்ரஃப் ஒப்பந்தம் பற்றி இந்த நாடே முழுமையாக அறியாத நிலையில் அபூநிதால் மட்டும் தென்கிழக்கு மாகாண சபை அல்லது முஸ்லிம்களுக்காக அதிகார அலகு என்ற விடயத்தை எப்படி அறிந்து கொண்டார்? இவரால் அறிய முடிந்ததை எதிர்க்கட்சிகளாலும் பௌத்த பிக்குமார்களாலும் அறிய முடியவில்லையா? முழுமையாக தெரியாத சந்திரிகா - அஷ்ரஃப் ஒப்பந்தம் பற்றி அபூநிதால் கூறுவது ஆச்சரியமாக உள்ளது. அப்படி ஒப்பந்தத்தில் இருந்தால் நிச்சயம் அதை அஷ்ரஃபால் அமுலாக்க முடியும் பொறுத்து இருந்து பாருங்கள்.

தென்கிழக்கு மாகாணசபைப் பற்றி பேசும் போது சந்திரிகா அதை மறுக்காததால் நிச்சயம் முஸ்லிம்களுக்கு ஏதாவது கிடைக்கப் போஎ நு உறுதிபோல் உள்ளது தானே? அப்படியாயின் தமிழ் மக்களுக்காக தீர்வு யோசனைகளில் கூறியபடியான அதிகாரங்களுடன் தென்கிழக்கு மாகாணசபை அமையலாம் தானே? அந்த எண்ணப்பாட்டுடனும் அஷ்ரஃப் தீர்வு யோசனையை பாராட்டியிருக்கலாம்? முன்பு இருந்த முஸ்லிம் தலைமைகளை விட என்னதான் குறைவாக அஷ்ரஃப் இருக்கின்றார் என்பது எனக்கு விளங்கவில்லை. இந்த அபூநிதால் விளங்கப்படுத்துவாரா? முன்னைய தலைமைத்துவங்களால் பாடசாலைகள்தான் கட்டமுடிந்தால் அஷ்ரஃபால் தத்தளித்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் பெறமுடிந்ததை அபூநிதால் அறியமாட்டாரா? பல்கலைக்கழகம் பெற்றுக்கொள்ள அரபுக்கல்லூரி அதிபர்களை கூட்டி ஆலோசனை நடத்தினாரே முன்னாள் அமைச்சர் ஹமீத் அது என்னவாயிற்று? அதிபர்களையோ, கல்விமான்களையோ கூட்டி ஆலோசனை நடாத்தி அலைக்கழிக்காமல் பல்கலைக்கழகம் பெற்றதுதான் அஷ்ரஃபின் தலைமைத்துவத்தின் சாணக்கியம்.

''பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல். முகைதீன் சமாதானத்திற்காகவே சூரியகிரகண நடவடிக்கை எனப் பேசுகின்றார். ஆகவே யுத்தத்தின் மூலம் தமிழர்களை அடக்கிவிடலாம். அமைச்சர் பதவிகள் மூலம் முஸ்லிம்களை அடக்கி விடலாம், எதற்கு அதிகாரப்புரவலாக்கம் அதில் என்ன இருக்கிறது'' என அபூநிதால் எழுதுகின்றார் ஏன்? சந்திரிகா அமைச்சர் அனுருத்த ரத்தவத்தை போன்ற மற்றும் பல அமைச்சர்கள் தமிழ்மக்களை புலிகளிடமிருந்து பிரிப்பதற்காகத்தான் சூரியக்கதிர் நடவடிக்கை என்றும் சொல்கிறார்களே! புலிகளிடமிருந்து தமிழ் மக்களைப் பிரித்தால் சமாதானம் வந்து விடுமா? முடியாது. முகைதீன் பேச்சை தூக்கிப்பிடிக்கிறீர்களே!

ஈ.என்.டி.எல்.எப். இனால் அலி உதுமான சுடப்பட்டதும், தமிழ் தேசிய இராணுவத்தால் முஸ்லிம் பொலிஸ்காரர்கள் வேறாக்கி கொலை செய்யப்பட்டதும், ஏன் இவர்கள் பதவி துறக்கவில்லை என்று அபூநிதால் விமர்சிக்கின்றார் இல்லையே ஏன்? காத்தான்குடியில் பள்ளிவாசல்களிலும் ஏறாவூரில் சதாம் ஹுசைன் கிராமத்திலும் அழிஞ்சிப் பொத்தானையிலும் மற்றும் அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை போன்ற ஊர்களில் அறுவடை காலங்களில் வயல் வெளிகளிலும் செய்யப்பட்ட கொலைகளுக்கும் 1990இல் பொலிஸ் நிலையங்களை ஆக்கிரமித்து தமிழ் பொலிசார்களை மட்டும் வேறாக்கி விட்டு முஸ்லிம் பொலிசாரை கொலை செய்ததையும் சுட்டிக்காட்டி அதற்கு ஏன் பதவி விலகவில்லை என்று அபூநிதால் கேட்கவில்லை ஏன்? புலிகளுக்கு வக்காலத்து வாங்குகிறீர்களா? அவர்களின் கொலை நடவடிக்கைகளை மூடி மறைக்கின்றீர்களா? அல்லது உங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்கிறீர்களா?

கண்டி மாநாயக்கர்களை சந்தித்து இது முஸ்லிம்களுக்கு மட்டுமான துறைமுகம் இல்லை என்று அஷ்ரஃப் அடித்து சத்தியம் செய்ததாக எழுதுகிறீர்கள். கிழக்கின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அல்லது முஸ்லிம்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக துறைமுகத்தை அமைப்பதை பிக்குகள் எதிர்க்காமல் அவர்களுக்கு இது முஸ்லிம்களுக்கான துறைமுகம் இல்லை. என்று ஆறுதல் சொன்னது பௌத்தவாதத்திற்கு அடிபணிந்து போகும் செயலாக அபூநிதாலுக்கு புரிகின்றதா?

கண்டியில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரியை நிறுவ முயற்சி எடுத்த ஹமீத் பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்களால் அதைக் கைவிட்டதை பௌத்த வாதத்திற்கு அடிபணிந்தது என்று சொல்ல உங்களால் முடியாதா? கடைசிவரையும் அவரால் முடியாமல் போனதும் உங்களுக்குத் தெரியாதா?

போக்குவரத்து அமைச்சராக இருந்த எம்.எச். முஹம்மத் பொரளையில் இஸ்லாமிய நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டிய இடத்தில் புத்தர் சிலை இருந்ததும் உங்களுக்குத் தெரியாதா? பின்னர் அவர் அதை நிர்மாணிக்காமல் பௌத்த வாதத்திற்கு பலியானதும் உங்களுக்குத் தெரியாதா? துறைமுகம் அமைக்க பௌத்தபிக்குகளின் எதிர்ப்பை வெளிக்காட்டாமல் அவர்களை ஆறுதல் படுத்தியதை பௌத்தவாதத்திற்கு அடிபணிந்ததாக கொள்ளலாமா?

அபூநிதாலின் கட்டுரையை பூரணமாக வாசித்து விளங்கிய ஒருவருக்கு என்ன தோன்றுமென்றால் அபூநிதால் ஒரு முஸ்லிம் பிரபாகரன் என்றுதான் தோன்றும்.

***எம்.ஐ முஹம்மது கபீர்***
***அக்கரைப்பற்று-01***

## டானியலின் வர்க்கப் பார்வை மாக்ஸீயத்துக்கு விரோதமானது!

சரிநிகர் இதழ் 91இல் ஹட்டனில் நடைபெற்ற டானியல்.தொடர்பான ஆய்வரங்கு பற்றிய விமர்சனக் கட்டுரையை இங்கர்சால் எழுதியிருந்தார். ஆய்வரங்கு பற்றிய நடுநிலையான விமர்சனங்களை முன்வைத்த அந்தக் கட்டுரையாசிரியர் பாராட்டப்பட வேண்டியவர். இருப்பினும் எனது ஆய்வு தொடர்பான சில விமர்சனங்களை எழுதியிருந்தார். அதனைப் பற்றி குறிப்பிடுவது எனது கடமையாக அமைகின்றது.

டானியலின் முன்னுரைகளை அடிப்படையாகக் கொண்டு நான் ஆய்வு செய்ததாக குறிப்பிட்டிருந்தார். எனது ஆய்வுரையை கிடைத்த டானியலின் நாவல்களை அடிப்படையாகக் கொண்டே நிகழ்த்தினேன் என்பதை மனங் கொள்ள வேண்டும். இதனை நான் ஆய்வுக்கட்டுரை வாசிப்பதற்கு முன்பு அறிவித்ததாக ஞாபகம். மேலும் நான் சபையின் கவனத்தைக் கொண்டு மிகச் சுருக்கமான முறையில் எனது ஆய்வுரையை நிறைவு செய்தேன் என்பதனையும் ஆசிரியர் நான் பேசும் போது அறிந்திருப்பார் என நினைக்கின்றேன்.

மேலும், டானியலின் இலக்கியப் போக்கும் இன்றைய இயக்க மோதல்களுக்கு காரணமாக அமைந்திருந்தது என்ற எனது கருத்துக்கு ஆதாரம் சொல்லவில்லை என எழுதியிருந்தார். இது பற்றியும் நான் கூற வேண்டும். யாழ்ப்பாண சமூக அமைப்பில் தமிழ் தேசிய முரண்பாடுகளை மூடி மறைத்து சாதிய முரண்பாடுகளை கூர்மையாக்கி இலக்கியம் படைத்தவர்களுள் டானியலும் ஒருவர். பிரதான முரண்பாடுகளை மூடி மறைத்தது சாதிய முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்துவது வர்க்க ரீதியான அரசியலுக்கு எதிர்வினையாக அமையும் என்பதை எனது பதிலுரையில் தெரிவித்தேன் என்பதை ஆசிரியர் மனங்கொள்ள வேண்டும். டானியல் வர்க்க ரீதியான இலக்கியங்களைப் படைத்தாலும் அவருடைய குறைபாடாக்வும் இது காணப்படுகிறது என்று இரவீந்திரன் பதிலுரைத்தார் என்பதையும் குறிப்பிட வேண்டும். இயக்கங்களுடைய பலவீனங்களை இந்திய அரசு பயன்படுத்திக் கொண்ட விதத்தையும்,தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடுகளையும் அவர்கள் தலைமைத்துவமும் சிதறிப் போனதையும் விளக்கியதாக ஞாபகம். சில வேளை எனது விளக்கம் சுருக்கமானதாகவும், விரைவான முறையிலும் அமைந்திருகலாம்.

சாதிய அமைப்பு தகர்த்தெறியப்பட வேண்டும். அந்த வகையில் கீழ் நிலைப்பட்ட சாதி நிலைகளை படம் பிடித்துக் காட்டிவர்க்க ரீதியாக அவர்களது குணாம்சத்தை பலநாவல்களில் டானியல் படைத்துள்ளார். இதை யாரும் மறுக்கமுடியாது. பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும் என்ற நிலையில் சாதிய முரண்பாட்டை பிரதானமாக்கி கைக்கொள்வது விடுதலை பற்றிய மாக்சிய நிலைப்பாட்டிற்கு எதிராகவே அமையும். எனினும் டானியல் அடிப்படையில் தவறு செய்யவில்லை. ஒட்டுமொத்தமாக இக்கால இலக்கியம் படைத்த மாக்சிய நிலைப்பாட்டில் இருந்தவர்களில் ஒருவராக இருந்தார் என்பது எனது வாதம். ஆனால் டானியலின் முற்போக்கு வர்க்கப் பார்வையும், மொழிநடையும் அழகியல் தன்மையும் சிறந்த படைப்பிலக்கியவாதியாக அவரை அடையாளம் காண உதவியதையும் மறுக்க முடியாது. யாழ்ப்பாண இடதுசாரிகள் தமிழ் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராக தமது சுயநிர்ணய உரிமையினை தூக்கிப் பிடித்து வருகின்றனர் என்பதும் உண்மையே. இன்று கூட சிக்கலான சூழ்நிலையில் அத்தகைய முறையினை நோக்கி நேர்மையான இடதுசாரி சக்திகள் செயற்பட்டு வருகின்றன அதனை மறுக்க முடியாது.

நான் சுருக்கமாக மேற்சொன்ன கருத்துக்களையே கூறினேன். நான் சொன்ன விடயங்களை எனக்கு கிடைத்த நாவல்களை வாசித்தும் அவருடைய முன்னுரைகளை கொண்டும் சொன்னேன். அது ஆசிரியருக்கு முன்னுரைகளாக தெரிந்திருப்பதில் வியப்பில்லை, தவிரவும் எனது ஆய்வுக் குறைபாடுகளை சுட்டிக் காட்டிய நண்பருக்கு எனது நன்றிகள்.

**ஜெ. சற்குருநாதன்**
**இராகலை.**

## சுதந்திர தினம் இந்தியாவினதா? இலங்கையினதா?

இலங்கையின் 48வது தேசிய தினத்தை முன்னிட்டு ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பாகின.

காலையில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் பேட்டி கண்டவரும் பேட்டிக்கு வந்தவரும் மிகவும் சிரமப்பட்டனர்.

பேட்டி காண்பதற்கு பக்குவமானவர்களை ரூபவாஹினி தமிழ்ப் பிரிவு ஆயத்தம் செய் முடியவில்லையோ என்னவோ தெரியவில்லை.

அன்றைய தினம் பிற்பகல் இரண்டு முப்பதுக்கு ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது.

'ஒம்புட்ஸ்மன்' பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளையை வி.என். மதியழகன் செவ்வி கண்டார். இருவரும், தேசிய தினம் பற்றியே கதைத்துக்கொண்டிருந்தனர். ஆயினும் பேட்டியின் இடையில் செருகப்பட்ட பாடல் ('என்னே இந்த நாட்டுக்கு...') இலங்கைக்கும் பொருத்தமானதாகத் தெரியவில்லை. அதுவும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அந்தப் பாடலில் - 'எங்கள் நாட்டின் தனித்துவக் கலைகள்' என்றொரு வரிக்கு இந்தியக் கலைஞர்களின் நடன நிகழ்ச்சி சேர்க்கப்பட்டிருந்தது.

ஏன் இலங்கையில் நடனக் கலைஞர்கள் இல்லையா?

அப்படி நடனக் கலைஞரைப் போடுவதாயின் ரூபவாஹினி தமிழ்ப்பிரிவுக்குத் தெரிந்த ஒரு குறிப்பிட்ட நடனக் கலைஞரை அல்லது அவரின் மாணவியரைப் போட்டு ஏனைய ''கலைஞர்களால்'' பிரச்சினைகள் ஏற்படலாம் என்ற காரணத்தினாலா இந்தியக் கலைஞர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்?

முன்பெல்லாம் காத்தவராயன், மயான காண்டம், காமன் கூத்து என பல நம் நாட்டுக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் ரூபவாஹினியில் ஒளிபரப்பானதாக ஞாபகம். விக்னேஸ்வரன் தயாரித்த அந்த நிகழ்ச்சிகளின் நாடாக்கள் இப்போது இருக்கின்றனவோ என்னவோ. அவரது பெயர் இல்லாமலாவது இருக்கவேண்டும். ஏனெனில் அவர் தயாரித்த சில நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் அப்படி ஒளிபரப்பாகியுள்ளன.

பெப்ரவரி 4ம் திகதி இந்தியாவின் தேசியதினமா? இலங்கையின் தேசியதினமா?

ரூபவாஹினி தமிழ்ப் பிரிவுக்கு இது சமர்ப்பணம்!

*வீ.ஆர்.*

## காலாவதியான தேயிலை!

அண்மையில் முடிவடைந்த புனித நோன்பை முன்னிட்டு ஓட்டமாவடி ப. நோ. கூ. சங்கம் பொதுமக்களுக்கு ஒரு மகத்தான சேவையொன்றினை வழங்கியது. அதாவது வறுமை நிவாரண முத்திரையின் 10வது புள்ளிக்கு உணவுப் பொருட்களை பெறுவதற்காக நான் ஹமீதியா கூட்டுறவுக் கிளைக்குச் சென்றபோது எனக்கு ரூபா 22/= பெறுமதியான தேயிலை பக்கெட்டும் வழங்கப்பட்டது.

அதனை நான் வீட்டிற்கு கொண்டு சென்ற போது குறிபிட்ட தேயிலை பக்கெட்டில் 1994-05-14ந்திகதி இடப்பட்டிருந்தது. இது காலாவதியாகும் தினமாகும். எனக்கு மட்டுமல்ல எனது கிராமத்தில் பலருக்கு இவ்விதமான காலாவதியடைந்த பொருட்களே வழங்கப்பட்டதாக நான் அறிந்தேன்.

இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு நான் அறிவித்தும் எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஏனெனில் இது வன்செயல் பிரதேசம் மட்டுமன்றி, சூறாவளிப் பிரதேசமும் அல்லவா?

***ஏ.எம்.பாரூக்***
***ஓட்டமாவடி.***

## சமகால மலையக ...

நாடகங்கள் மலையக நாடக மரபுகளை கொண்டு காணப்படுகின்றன. புசல்லாவ கலை இலக்கிய மன்றம் அண்மையில் இலக்கிய விழாவில் நடாத்திய நாடகமும் குறிப்பிடத்தக்க ஒன்று. பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை போன்ற பிரதேசங்களில் கலை மன்றங்களால் நடாத்தப்படும் நாடகங்களும் மலையக நாடகத்துறைக்கு வளமான எதிர் காலத்தைத் தரக் கூடியதாக உள்ளது.

பாடசாலை நாடகங்களைப் பொறுத்தவரையில் நிஸாமின் ''வெளிச்சம் வெளியே இல்லை'' என்ற நாடகம் சமகால சமூகப் பிரச்சினைகளை இனங்காட்டியது. இது பல சர்ச்சைகளை ஏற்படுத்தியதை சரிநிகர் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அழகியல் வெளிப்பாடுகளை கூடுதலாகக் காட்டி சமூக ரெங்ஞை குறைந்த அளவிலேயே இதில் தரிசிக்க முடிந்தது. படிமம், குறியீடுகள், ஒப்பனை, உடைகள், நடிகர்களின் திறன் வெளிப்பட்ட அளவு சமூகப் பிரச்சினைகளை துல்லியமாகவும் விஞ்ஞான ரீதியாகவும் வெளிப்படுத்தவில்லை. குறிப்பிட்ட சில சமூகப் பிரச்சினைகளை துணிவோடு தொட்டுக்காட்டியமை நாடகங்களில் இதுவும் ஒன்று.

அடுத்து அண்மையில் நடந்த பாடசாலை நாடகமான நோர்வூட் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இராஜநாயகம் என்பவரால் நெறியாள்கை செய்யப்பட்ட ''சொல்லடி சிவசக்தி'' இயங்கியல் ரீதியான அரசியல் தன்மையினை வெளிப்படுத்தியது. பெண்ணடிமை ஆதிகாலத்திலிருந்து நவீன காலம் வரை தமிழ் சமூகத்தினை ஊறுபடுத்தியதை தோலுரித்துக் காட்டி நிற்கின்றது. சிறந்த நெறியாள்கையுடன் எளிமையாக, எல்லோரும் விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் இந் நாடகம் அமைந்திருந்தது. ஆழமான விடயங்களை அரை மணிநேரத்தில் சொன்னது இந் நாடகம். பின்னணி, இசை, பாடல்கள், வடிவமைப்பு சிறப்பாக பேணப்பட்டுள்ளன. இருப்பினும் நாடகப் பின் பகுதி பலவீனமாக இருந்தது.

சாமிமலை பாடசாலையைச் சேர்ந்த அதிபர் இராமையாவினால் தயாரிக்கப்பட்ட ''மது அரக்கன்'' நாடகமும் குறிப்பிடத்தக்கது. அக்கரப்பத்தன, பொரஸ்டகிறீக், ரிலாமுல்ல, டலோஸ் போன்ற பாடசாலைகளில் அரங்கேற்றுகின்ற நாடகங்கள் நல்ல பண்பினை கொண்டிருக்கின்றன. பண்டாரவளை, சென் மேரிஸ் பாடசாலை நாடகமும் தரமானவையாக காணப்படுகின்றது.

பொதுவான நோக்கில் சமகால மலையக நாடகங்கள் அதன் சமூக வேர்களை தொடத் தொடங்கியுள்ளன. சமூக விஞ்ஞான கண்ணோட்டத்துடன் இந் நாடகங்கள் காணப்பட்டாலும் அதன் வளர்ச்சி ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றது. எனினும், மலையக தேசிய இலக்கிய செல் நெறிவடிவங்களில் நாடகமும் குறித்துக் கொள்ளப்பட வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

## எழுக மலையகம்!

எதிர்வரும் 22ம் திகதி மலையகத்தின் அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி போன்ற அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் இந்தப் போராட்டத்தில் குதிப்பதாக அறிவித்துள்ளன. ஏற்கனவே தாம் நிச்சயித்த திகதியில் தாமும் போராட்டத்தில் குதிக்கப்போவதாக ஏனைய தொழிற்சங்க அமைப்புக்கள் அறிவித்தது குறித்து இ.தொ.கா. சீற்றம் கொண்டுள்ள போதும் (அரசாங்கத்துக்கு தனது வலிமையை காட்ட இதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த நினைக்கும் இ.தொ.காவுக்கு சீற்றம் வருவதில் ஆச்சரியமில்லைத்தான்) போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரியவருகிறது. போராட்டத்தை தவிர்ப்பதற்காக நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தை முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன.

தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட போது உறுதியளிக்கப்பட்ட 300 நாள் வேலை வழங்கலோ, 1993 ஜூலை மாதத்தில் வழங்கப்படும் என அரசாங்கத்தால் உத்தரவாதமளிக்கப்பட்ட 8 ரூபா சம்பள உயர்வோ இன்று வரை நடைமுறைக்கு வராததால், அவற்றை நடைமுறைப்படுத்துமாறு கோருவதே இந்த வேலை நிறுத்தத்தின் பிரதான கோரிக்கைகளாகும். தோட்டங்களை பெருமளவு பணம் கொடுத்து வாங்க தயாராகவுள்ள தனியார் கம்பனிகள், தோட்டம் நட்டத்தில் இயங்குகிறது, சம்பள உயர்வுக்குப் பணமில்லை என்று சொல்வது நகைப்புக்கு இடமானது என்றே தொழிற்சங்கங்கள் கருதுகின்றன. உற்பத்திச் செலவையோ, விற்பனை வருமானத்தையோ வெளியே காட்டாமல் மூடுமந்திரமாக வைத்துக்கொண்டு 'நட்டம்' என்று மட்டும் கூறிக்கொள்வதை ஏற்றுக்கொள்ள எந்த தொழிலாளர்களும் தயாராக இல்லை என்று தொழிற்சங்கங்கள் அடித்துக் கூறுகின்றன.

உண்மையும் அதுதான். தொழிலாளர்களின் அன்றாட வாழ்வே பிரச்சினையாகி விட்ட இன்றைய நிலையில், இந்தச் சிறிய சம்பள உயர்வு ஒன்றும் பெரியளவு மாற்றத்தைத் தரப்போவதில்லை என்றாலும் ஏற்கனவே ஒப்புக்கொண்டதைக் கூட தரமறுக்கும் செயல் அவர்களுக்கு பெரும் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. தொழிற்சங்கத் தலைமைகள் இந்தப் போராட்டத்துக்கு தலைமை தாங்குகிறார்களோ இல்லையோ, தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கமும் தோட்டத் துரைமாரும் சொல்லும் எந்த காரணங்களும் அவர்களுக்கு திருப்தியளிக்கப் போவதில்லை. அதைத் தெரிந்து கொண்ட தொழிற்சங்க தலைமைகள் – அவற்றில் பல இன்றைய அரசாங்கத்தை ஆதரிக்கின்றன – தமது தலைமைகளைப் பாதுகாப்பதற்கேனும் இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்குவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

பொ.ஐ.மு அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, தோட்டத் தொழிலாளர்களின் நலன் காக்க உதவுமென்று சொல்லியே இ.தொ.காவும் சரி மலையக மக்கள் முன்னணியும் சரி அதில் தாம் இணைந்து கொண்டதை நியாயப்படுத்தின. ஆனால் கடந்த ஒன்றரை ஆண்டு பதவிக்காலத்தில் இந்த அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று இப்போது பிரதியமைச்சர் சந்திரசேகரனே வெளிப்படையாக சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மலையக மக்களைப் பொறுத்தவரை அடுத்தடுத்து வந்த எல்லா அரசாங்கங்களும், பிரதியமைச்சர் சந்திரசேகரன் சொல்லுவது போல 'நூறாண்டுகால பழைமை வாய்ந்த அவர்களது பிரச்சினைகளை' கவனத்தில் எடுத்ததில்லை. எல்லாம் தேர்தல் கால வாக்குறுதிகளோடு சரி. பொ.ஐ.மு அரசாங்கமும் மலையக மக்களைப் பொறுத்தவரை முன்னைய அரசாங்கங்களின் அதே அடிச்சுவட்டையே பின்பற்றி வருகிறது.

மலையகத்தின் தொழிலாளர்களுக்கு தொழிலாளர்கள் என்ற அடிப்படையிலான பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, அவர்கள் ஒரு மக்கள் தொகுதியினர் என்ற முறையில், 'மலையக மக்கள்' என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட முறையில் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். புலிப் பீதியைக் கிளப்பிவிட்டு அவர்களை இம்சைப் படுத்துவது போன்று அன்றாட பிரச்சினைகள் முதல், நீண்டகால நோக்கிலான குடியேற்றங்கள் மூலமாக அவர்களது பிரதேசங்களை பறித்தெடுத்தது வரை அவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் சொல்லிடங்காது.

வடக்கு–கிழக்கு தமிழ் மக்களது உரிமைப் பிரச்சினை புலிகளையும், பயங்கரவாதத்தையும் காரணம் காட்டி பாராமுகமாக விடப்பட்டு வருகின்றன.

இவ்வாறே, மலையக மக்களின் பிரச்சினைகளும் வெறும் நடைமுறை விவகாரம் என்ற மட்டிலேயே அணுகப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த தொழில் சம்பந்தப்பட்ட விடயத்தில் அவை கூட கைவிடப்பட்டுவிட்டன. தொழிலாளர் உரிமை, தொழிலாளர் சாசனம் என்றெல்லாம் பீற்றிய அரசாங்கம், இப்போது தொழிலாளர்களின் சம்பள உயர்வு என்ற சாதாரண விவகாரத்தைக் கூட முக்கியமானதாகக் கருதவில்லை.

தொழிலாளர்களின் ஜீவாதாரப் பிரச்சினையாகிவிட்ட சம்பளப் பிரச்சினை வெறும் தொழிலாளர் பிரச்சினை என்ற மட்டத்துடன் நின்றுவிடவில்லை. மாறாக 'மலையக மக்கள்' என்ற அடிப்படையிலும் கூட அணுகப்படுகின்றன. ஒருகால் நாட்டின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு துருப்புச் சீட்டாக இவர்கள் பயன்படுத்தப்பட முடியுமானால், இந்த சம்பள விவகாரத்தை அரசாங்கம் அணுகியிருக்கக்கூடிய விதமே வேறாக இருந்திருக்கும்.

மலையகத் தொழிலாளர்கள் –தொழிலாளர்கள் என்கின்ற அடிப்படையில் மட்டுமல்ல, மலையக மக்கள் என்ற இன அடிப்படையிலும் கூட பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்ற உண்மை பல சந்தர்ப்பங்களில் இம்மக்களின் தலைவர்களால் மறக்கப்பட்டு விடுகிறது. இந்த வேலை நிறுத்தப் போராட்டம் சம்பள உயர்வை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட போதும் இது மலையக மக்கள் என்கின்ற அடிப்படையிலேயே அணுகப்படுகிறது என்ற உண்மையையும், போராட்டத்தில் குதிக்கின்ற தொழிலாளர்கள் புரிந்து கொள்வது அவசியம்.

தமது குறுகிய கால அரசியல் லாபங்களுக்காக ஆட்சியாளரிடம் சமரசம் பேசுகின்ற தொழிற்சங்க தலைமைகள், பாதிவழிச்சமரசத்துக்குப் போன வரலாறும் கூட மலையக மக்களின் 'நூறாண்டு காலப் பிரச்சினையின்' வரலாற்றின் ஒரு அம்சம் என்பதையும் கூடத் தொழிலாளர்கள் இத்தக்கட்டத்தில் ஒரு தடவை ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம். எட்டு ரூபா சம்பள உயர்வையும் 300 நாள் வேலையும் தொழிலாளர்களது 'யானைப்பசிக்கு சோளன் பொரி' போடும் விடயம் தான். எனவே இவர்களது பிரச்சினை இந்தக் கோரிக்கைகளுக்கான வெற்றியுடன் முற்றுப் பெறப்போவதில்லை! இந்தத் தொழிலாளர்கள் தாமும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அளவில் அடிப்படையான சுதந்திரத்துடனும் உரிமைகளுடனும் வாழ்வதற்கு அவசியமான கோரிக்கைகளை முன்வைத்துப் போராடுவதும், அந்தப் போராட்டத்திற்கும் ஏப்ரல் 22ம் திகதி காட்டப் போகின்ற அதே ஒற்றுமையுடன் தயாராவதும் அவசியம் என்ற உண்மையையும் தொழிலாளர்கள் புரிந்து கொள்வது அவசியம்.

இந்த உண்மைகள் மிகவும் முக்கியமானவை. அது மட்டுமல்ல அடிப்படையானவையும் கூட.

சரிநிகர் மலையகத் தொழிலாளர்களின் இப்போராட்டத்திற்கு தன் முழு அளவிலான தார்மீகரீதியான ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

## ஈழப்போர் 3க்கு வயது 1

சித்திரை 19ம் திகதியுடன் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்து சரியாக ஒரு வருடமாயிற்று.

இந்த ஒரு வருடத்தில் போர் முனையில் அரசு சாதித்தது என்ன? இழந்தது என்ன? புலிகள் சாதித்தது என்ன? இழந்தது என்ன?

ஈழப்போரை ஒரு முற்றிற்குக் கொண்டு வந்திடலாம் என அரசு கூறி வருவது எந்தளவு சாத்தியமாகும் நிலையை எட்டியுள்ளது? என்பதுவும் மேற்கண்டவற்றுடன் பின்னிப் பிணைந்த கேள்வி

மூன்றாம் ஈழப்போர் முனையில் அரசு இராணுவரீதியாகச் சாதித்தவை என பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. 1990இன் பின்னர் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு புலிகள் நிறுவிய ''அரசு நோக்கிய அரசை'' (De facto State) அவர்களால் இராணுவ ரீதியாகத் தக்கவைத்துக் கொள்ள முடியாது எனக்காட்டியமை.

2. வலிகாமத்தைக் கைப்பற்றியமை.

3. வெலிஓயாவிலும், 'ரிவிரச'வின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலும் புலிகளின் போராளிப் பலத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு சேதத்தை ஏற்படுத்தியமை.

இதன் காரணமாகவே 3ம் ஈழப்போரில் புலிகளால் பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட மரபுவழிப்படை நகர்வுகளை மேற்கொள்ள முடியாமற் போயிற்றோ என சில தென்னிலங்கை இராணுவ ஆய்வாளர்கள் சந்தேகப்படுமளவிற்கு இவ் இழப்புகள் இருந்தன.

மேற்கண்ட சாதனைகளின் நிமித்தம் அரசு இராணுவரீதியாகவும் வேறுவகையிலும் இழந்தது என்ன?

1. ஆகாயத்தில் - இரண்டு அவ்ரோ விமானங்கள், ஒரு புக்காரா, ஒரு இரஷ்ய Mi 17 வகைப் போர் உலங்கு வானூர்தி, ஒரு வை - 8 வகை பெரிய விநியோக விமானம், இரண்டு அன்டொனொவ் வகை படையேற்றும் விமானங்கள்.

2. கடலில் - கட்டளைக் கலங்களாகவும், விநியோகக் கலங்களாகவும் இயங்கிய இரு கடற்படைக் கப்பல்கள், இரண்டு சங்காய் வகுப்பு பீரங்கிப் படகுகள், மூன்று டோரா படகுகள், இரண்டு அதிவேகத் தாக்குதற் கலங்கள்

3. தரையில் - ஆயிரத்திற்கு மேற்பட்ட படைவீரர்கள், பல தாங்கிகள், கவச வாகனங்கள்.

இவை நேரடியான கணக்கிடப்படக்கூடிய இராணுவ இழப்புகள். இதில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். இறந்த அரச படைவீரர்களின் தொகை இக்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குப் பெருகியுள்ளது என தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறினும், மொத்தத் தொகையை வெளியிட தென்பகுதியில் பலரும் தயக்கம் காட்டுகின்றனர். வலிகாமத்தைக் கைப்பற்ற இழந்த படைவீரரை விடக் கூடிய படைவீரரை வலிகாமத்தை கடந்த நான்கு மாதங்களாக தக்க வைத்துக் கொள்வதில் அரசு இழந்துள்ளது எனும் கூற்றை மறுத்துரைக்க சில இராணுவ அதிகாரிகள் தயங்குவது போல் தெரிகிறது.

அடுத்ததாக, 1990இலிருந்து ஏகப்பட்ட இராணுவ வளங்களைக் கொட்டி அரசால் பேணப்பட்டு வந்த கிழக்கு மாகாணத்தின் சில முக்கிய, பரந்த பகுதிகள் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் சென்றுள்ளன. அத்துடன் 91இன் பின் கிழக்கில் புலிகளால் ஊடுருவப்படமுடியாமல் இருந்த பல நகரங்களும், பிரதான பாதைகளை அண்டிய பகுதிகளும் புலிகளினுடைய கணிசமான செல்வாக்குக்குட்பட்டுள்ளன. இதை 90இலிருந்து கிழக்கில் அரசு செய்த மாபெரும் இராணுவ முதலீடுகளின் இழப்பு எனலே பொருந்தும்.

1990இற்கும் 1994இற்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது ஈழப்போரில் அரசு தன் படைகளை இரு போர்முனைகளிலேயே ஈடுபடுத்த வேண்டியிருந்தது. இதில் இராணுவ நிலைகளைப் பாதுகாப்பதும், இயலும் போது சிறிது விஸ்தரிப்பதும் என அமைந்திருந்தது வடக்குப் போர்முனை.

கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகள், தமிழரை பிரிவினைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தல் என படைகளின் வேலை அமைந்திருந்தது கிழக்கில்.

ஆனால் அரசு தன் படைகளை ஈடுபடுத்த வேண்டிய நான்கு மேலதிக மோதல் முனைகள் மூன்றாம் ஈழப்போரில் தோன்றியுள்ளன. அவை வலிகாமம், கிழக்கின் புலிக்கட்டுப்பாட்டுப் பகுதிகள், கொழும்பு, கிழக்குப் பிராந்திய, வடமேற்குப் பிராந்திய கடற்பரப்புகள்.

அரசின் இராணுவ வளங்களையும் போர்ச் செலவீனத்தையும் நாளாந்தம் கணிசமாக உறிஞ்சிவரும் இந் நான்கு மேலதிக மோதல் முனைகளுடன் மேற்குக் கரையும் இணையுமோ என சிந்திக்கத் தோன்றுகின்றது.

'சூரியக்கதிர்' நடவடிக்கை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசத்தினுள் படைகள் ஆங்காங்கு நிலை கொள்ள வழிவகுத்ததே ஒழியப் புலிகளின் இராணுவ வளங்களைப் பாதிக்கவில்லை. எதிர்த்தரப்பின் இராணுவ வளங்களும் அவற்றை பராமரிப்பதற்கான வழிவகைகளும் கணிசமாக அழிக்கப்படும் வரை ஒரு போரின் வெற்றியைப் பற்றிப் பேச முடியாது எனக் கூறுவர் போரியல் அறிஞர்.

புலிகளின் இராணுவ வளங்கள் அழிக்கப்படாத நிலையில் இரண்டாம் ஈழப்போரில் இருந்ததை விட நான்கு மேலதிகமான முனைகளில் தன் படைபலத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது அரசு. அத்துடன் புலிகளுக்கு ஏற்பட்ட ஆட்பலப் பாதிப்புகளையும் சரிசெய்ய 'சூரியக்கதிர்' நடவடிக்கை உதவிற்று எனலாம்.

பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட (தவளை போன்ற) மரபுவழிப்படை நகர்வுகளைச் செய்யாதவிடத்து அரசினுடைய படைபலத்தை மேற்கூறிய ஆறு அல்லது ஏழு முனைகளில் உறிஞ்சுவதற்குப் புலிகளிடம் தற்போது உள்ள படைவளங்கள் போதும்.

இப்பின்னணியில் பார்க்கும் போது மூன்றாம் ஈழப்போரில் அரசு தன் வெற்றியெனக் கருதுவது கிரேக்க மன்னன் பைரஸின் (Pyrrhus) வெற்றி போலாகி விடுமோ என கேள்வி எழுகிறது. எதிரியை இராணுவரீதியாக வெற்றி கொள்ள வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து போரிட்ட பைரஸிற்கு இறுதியில் வெற்றி கிட்டியபோது அவனோ அனைத்தும் இழந்தவனானான். வெற்றியால் எந்தப் பயனுமில்லாது போயிற்று. இதையே பைரஸின் வெற்றி Pyrrhic Victory) எனும் ஆங்கிலப் பதம் குறிக்கிறது. ஆனால் பல முனைகளில் அரசு போரிட வேண்டி இருப்பினும் அதை மிக நீண்ட காலத்திற்கு இலங்கைப் பொருளாதாரத்தினால் தாக்குப் பிடிக்க முடியும் எனவும், இதன் காரணமாக இம்மோதல் முனைகள் அனைத்தும் புலிகளின் வளங்களைச் சிதறடிக்கும் எனவும் போரின் காலம் நீண்டு செல்லச் செல்லத் தமிழ் மக்கள் சலிப்படைவர் எனவும், நீண்ட காலத்திற்கு தென்னிலங்கைப் பொருளாதாரத்தைப் போல புலிகள் செயற்படும் பகுதிகளில் பொருளாதாரம் அவர்களுடைய போர்ச் செலவீனத்தைத் தாக்குப் பிடிக்கக் கூடிய அளவிற்குப் பலமானதாக இருக்காது எனவும், இக் காரணங்களால் புலிகள் காலப் போக்கில் குறைந்த செலவீனத்துடன் சமாளிக்கக் கூடிய ஒரு சிறு கெரில்லா இயக்கமாகச் சுருங்கி விடுவர் என வாதிடும் ஒருசாரார் இன்றுளர்.

அவர்களின் கூற்றில் ஒரு சில நியாயங்கள் இல்லாமல் இல்லை. எனினும் அவர்களது கூற்று ஈழப்போருக்கு மையமான சில விடயங்களை மாறிலிகளாகக் கொள்கிறது. இது தவறு. ஒன்று, உபகண்ட அரசியல் தொடர்ந்து புலிகளுக்குப் பாதகமாகவே இருக்கும் என்பது.

இரண்டு, வடக்கில் உள்ள படைகளைப் பெரிய அளவில் கொண்டு வந்தாயினும் பாதுகாக்கப்பட வேண்டிய கேந்திர பிராந்தியமான மேற்குக் கரையை புலிகள் தொடர்ந்து விட்டு வைப்பார்கள் என்பது.

மூன்று, தென்னிலங்கையில் அதிகாரத்திற்கு வரப்போகும் அனைத்து அரசியல்வாதிகளும் மூன்றாம் ஈழப்போரில் அரசு கடைப்பிடித்துள்ள இராணுவ மூலோபாயத்தையே பின்பற்றுவர் என்பது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சிறுபான்மை இனத்தினுள் உருவாகும் உரிமைப் போரை தணிக்க அல்லது முறியடிக்க வகுக்கப்படும் எந்த மூலோபாயத்திற்கும் இன்றியமையாத அடித்தளம் ஒரு சரியான அரசியல் தீர்வே என போரியல் அறிஞர் அறைந்து கூறுவதைக் கணக்கில் எடுக்காது மூன்றாம் ஈழப் போரினை அரசு முன்னெடுத்துச் செல்கிறது. மூன்றாம் ஈழப்போரின் ஓராண்டு ஓட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தடுமாறும் காலம் நெருங்கி வருகிறது.

## இனப்பிரச்சினை...

பும் நோர்வே, சுவிற்சாலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, பிரிட்டிஷ் போன்றவற்றின் அரசசார்பான, அரசசார்பற்ற பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றை அமைக்கலாம். அக்குழு தலையீட்டை அல்லது மத்தியத்துவத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படலாம். அக்குழுவில் பங்காளிகளாகவன்றி இந்தியா, அமெரிக்கா பிரதிநிதிகளை பார்வையாளர் மட்டத்தில் இடம் பெறச்செய்யலாம். அப்படி இடம் பெறச் செய்வதன் மூலம் இந்தியாவின் பிராந்திய நலன் அமெரிக்காவின் அக்கறை (ஏற்கெனவே இருக்கின்ற நலன்கள், அக்கறைகள் மட்டும்) பாதிக்கப்படாது, தலையீடு செய்யப்படுவதை உறுதிசெய்யலாம். அவற்றின் தடைகள், இடைஞ்சல்களைத் தவிர்க்கலாம்.

இந்தத் தலையீடு செய்வதற்கான குழு ஐ.நா. சபையில் தீர்மானமொன்றை நிறைவேற்றி ஐ.நா. சபையின் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் பிணிப்பையும் பெறமுடியும். இவ்வாறு செய்வதால் தனிப்பட ஒரு நாட்டின் தலையீட்டு அல்லது ஐ.நா.சபையின் தலையீடு என்று மட்டுமல்லாது சில நாடுகளினதும், ஐ.நா.சபையின் தலையீடும் என்ற நிலைமையை அடையும். அமெரிக்கா, இந்தியா ஆகியவற்றின் எதிர்ப்பையும் சமாளிக்க முடியும்.

இவ்வாறான தலையீடொன்று சாத்தியமாகும் நிலைமையில் சர்வதேச ரீதியாக வெளிநாட்டு மூன்றாம் தரப்பு தலையீடுகளால் விளைந்த பாடங்களை மனதில் கொள்ளவும் வேண்டும்.

அச்சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வு வேண்டும் என்ற தரப்பிலிருந்து, அடிப்படையாக முன்வைக்க வேண்டிய யோசனைகள் யாவை என்பது பற்றியும் கவனம் செலுத்தல் இன்றியமையாதது!

960418

பிரதம ஆசிரியர் : சேரன், எல்லாத் தொடர்புகட்கும் : ... திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்